வெளியீடு : 24-12-2020 Issued: 24-12-2020

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
## (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
## (FIFTEENTH ASSEMBLY)

**செவ்வாய்க்கிழமை, பிப்ரவரி 18, 2020 தொகுதி 71—எண் 3**

**Tuesday, the 18th February, 2020—Volume 71—No. 3**

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.**
**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

**விலை ரூ. 3.00] [Price Rs. 3.00**

**18–2–2020**

**உள்ளடக்கம்**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| **1.** | **வினாக்கள்—விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 299-353 |
| **2.** | **உரிமை மீறல் பிரச்சினை—** | |
| | இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது குறித்து மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் *8–1–2020* அன்று தெரிவித்த கருத்து | 353-362 |
| | திரு. தங்கம் தென்னரசு | 353-355 |
| | மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் | 355-361 |
| | *திரு. துரைமுருகன் | 361-362 |
| **3.** | **வரவு-செலவுத் திட்டம், 2020-2021, பொது விவாதம்**—தொடர்ச்சி | 362-455 |
| | திரு. த. மனோ தங்கராஜ் | 362-363, 366-369,371, 375,378-380, 382,384-387, 389-391, 393-394 |
| | மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 363-364 |
| | மாண்புமிகு திரு. பா. பென்ஜமின் | 364-366 |
| | மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் | 369-371, 387-389 |
| | *திரு. அர. சக்கரபாணி | 371-372,376 |
| | மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 372-373, 378-380 |
| | மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | 372-374 |

*பக்கங்கள்*


**3. வரவு-செலவுத் திட்டம், 2020-2021, பொது விவாதம்**—*தொடர்ச்சி*

| | |
|---|---|
| **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்* | 375-376, 392-393 |
| **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* | 376-377 |
| *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 380-382, 385-386 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி* | 382-384 |
| *திரு. துரைமுருகன்* | 389 |
| *மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்* | 390-391 |
| **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி* | 393,447-448 |
| **மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு* | 394-395 |
| *திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்* | 395-407 |
| **திரு. ர. முத்தமிழ்செல்வன்* | 407-419 |
| **திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்* | 420-429 |
| *மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்* | 426-427 |
| **திரு. M.S.R. ராஜவர்மன்* | 429-437 |
| *திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்* | 437-455 |

**4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 456

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விகாரி, மாசி 6, திருவள்ளுவர் ஆண்டு 2051

## 2020 பிப்ரவரி 18, செவ்வாய்க்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அருவினை என்ப உளவோ கருவியான்*
*காலம் அறிந்து செயின்."*

*ஒரு தொழிலைச் செய்து முடிப்பதற்கேற்ற கருவிகளோடு, காலத்தையும் அறிந்து செயல்பட்டால், வெற்றி பெறுவதற்கு முடியாத கடினமான செயல் என்று எதுவுமில்லை.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**36—**

### சதுப்பு நிலக் காடுகள்

***39063—திரு. செ. ராஜேஷ் குமார்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்ட கடற்கரையோரங்களில் சதுப்பு நிலக் காடுகள் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2020 பிப்ரவரி 18

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேங்காய்பட்டினம், குளச்சல், முட்டம், இராஜாக்கமங்கலம், மணக்குடி முதலிய பகுதிகள் ஆற்று நீரும், கடல் நீரும் ஒன்றுசேரும் பகுதியாக அமைந்திருக்கின்றன. ஆற்று நீரும், கடல் நீரும் ஒன்றுசேரும் முகத்துவாரப் பகுதிகளில் தற்போது பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்–development activities–நடைபெற்று வருவதால் எஞ்சிய பகுதிகளில் Mangrove forests என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சதுப்பு நிலக் காடுகள் வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

**திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 13 கடலோர மாவட்டங்கள் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 72 கி.மீ. நீளக் கடற்கரையை உள்ளடக்கிய 52 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. தொடர்ந்து ஏற்படுகின்ற கடல் சீற்றம், ஆழிப் பேரலை போன்றவற்றால் மீனவர்களுடைய குடியிருப்புகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டு, இன்றைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து இருக்கின்றார்கள். எனவே, எங்களுடைய மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் Mangrove forests என்றழைக்கப்படுகின்ற கடல் அலைகளைத் தடுக்கின்ற சதுப்பு நிலக் காடுகளை அமைத்துத் தருவதால், அங்கிருக்கக்கூடிய மக்கள் பேரலையிலிருந்து முழுமையாகப் பாதுகாக்கப்படுவார்கள். ஏற்கெனவே, 2004 ஆம் ஆண்டு மிகப் பெரிய அளவில் ஏற்பட்ட சுனாமிப் பேரலையின் விளைவாகவும், 2017 ஆம் ஆண்டு ஒகி புயல் காரணமாகவும் நூற்றுக்கணக்கான மக்கள் அன்றைக்கு மரணமடைந்தார்கள். ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தின் கடலோரப் பகுதி மக்களைப் பாதுகாப்பதற்காகவும், குடியிருப்புப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காகவும், சதுப்பு நிலக் காடுகள் மிகவும் அவசியம். Mangrove காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே தமிழக அரசு 2008 ஆம் ஆண்டு சென்னையில்

*2020 பிப்ரவரி 18]*

Mangrove *காடுகளை வளர்த்திருக்கின்றது. அதுபோல் எங்களுடைய மாவட்டத்தில் இன்றைக்கு மணக்குடி பகுதியில்* Mangrove *காடுகள் இருக்கின்றன. மீன் வளத் துறையின் சார்பாக ரூ.10 கோடி செலவில் அங்கே* eco park *அமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக அந்த* Mangrove *காடுகளை அழிக்கிறார்கள். ஆகவே,* Mangrove *காடுகள் அழியாதவண்ணம் பாதுகாத்து, எங்களுடைய பகுதிகளில் மக்களுடைய பாதுகாப்பிற்காக* Mangrove *காடுகளை வளர்க்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்று வேகத்தினைத் தடுக்கவும், அங்கிருக்கின்ற பொதுமக்களின் வீடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். முதலில் சொன்ன பதிலிலேயே சதுப்பு நிலக் காடுகளைப் பற்றிய செய்தியினையும் சொல்லியிருக்கிறேன். கடற்கரைப் பகுதிகளில் மண் அரிப்பினைத் தடுக்கவும், பலத்த புயல் காற்றின் வேகத்தினைக் குறைக்கவும் சவுக்கு மரங்களைக் கொண்ட கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் (*Shelter Belt*) வளர்க்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று,* Shelter Belt *திட்டத்தின் மூலமாக சவுக்கு மரங்கள் வரிசையாக வளர்க்கப்படுகின்றன. நிலத்தடி நீரினைப் பெருக்கவும், அருகில் உள்ள வேளாண்மை நிலங்களில் மழை நீரின் செறிவூட்டுத் திறனை அதிகப்படுத்தவும், காற்றின் வேகத்தினைத் தடுப்பதற்கும் அவை உதவிபுரிகின்றன.*

*முற்பகல் 10–05*

*மேலும், கடற்கரையோரக் கிராமங்களில் வாழும் மக்களின் வேலைவாய்ப்பினை அதிகரிப்பது மட்டுமன்றி, அவர்களுக்கு எரிபொருள், தீவனம் மற்றும் பசுந்தாள் உரம் கிடைக்கவும் வழிவகை செய்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்து, நிதி ஆதாரத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

**திரு. செ. ராஜேஷ் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தை சூறாவளி காற்று மற்றும் இயற்கைப் பேரிடர்களிலிருந்து முழுமையாகப் பாதுகாத்திட காற்றாடி மரங்கள் என்று சொல்லக்கூடிய சவுக்கு மரங்கள் இல்லாத இடங்களில் சவுக்கு மரங்களை நடுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, நிதி ஆதாரங்கள் அடிப்படையிலும், சவுக்கு மரங்கள் அங்கே வளர்வதற்குரிய சூழ்நிலைகளும் இருக்குமானால் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், என்னுடைய தொகுதிக்குட்பட்ட மணக்குடி பகுதிதான் இயற்கையாகவே mangrove காடுகள் அதிகமாக வளர்ந்திருக்கக்கூடிய பகுதி. மீன் வளத் துறையின் மூலமாக Eco Park அமைப்பதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அழகாக bunch bunch ஆக இருக்கக்கூடிய அந்த mangrove காடுகளில் மணலைக் கொட்டி மணல் மேடாக மாற்றி, அதில் boat jetty அமைக்கக்கூடிய பணியைச் செய்து வருகிறார்கள். Mangrove காட்டை உருவாக்குவதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டு வருகிறது. இன்றைக்கு boat jetty அமைப்பதற்காக இயற்கையாகவே வளரக்கூடிய mangrove காடுகளை அழிக்கக்கூடிய பணி நடைபெற்று வருகிறது. Mangrove காடுகள் இருக்கின்ற காரணத்தால் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முடியும்; மழை வருவதற்கு வாய்ப்பாக

*2020 பிப்ரவரி 18]*

*இருக்கும்; இயற்கைச் சீற்றத்தையும் நம்மால் தடுக்க முடியும். எனவே, பல்வேறு வகைகளில் நன்மைபயக்கக்கூடிய* mangrove *காடுகளை அழிக்கக்கூடிய பணிகளை நிறுத்துவதற்கு வனத் துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அழிந்துபோன மரங்களுக்குப் பதிலாக, அந்த மணல் மேடுகளையெல்லாம் அகற்றிவிட்டு, புதிதாக* mangrove *மரங்களை நடுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் குறிப்பிட்டபடி,* mangrove *காடுகள் எனப்படும் சதுப்பு நிலக் காடுகள், அதிக உப்புத் தண்ணீர் உள்ள கடற்கரை ஓரங்களிலும், அதிக வலுவான அலைகள் இல்லாத கடற்கரைப் பகுதிகளிலும், சாதாரண சீதோஷ்ண நிலை உள்ள குளிர்காலத்தில் 20 சென்டிகிரேட்டுக்கு குறையாத வெப்ப நிலை உள்ள பகுதிகளிலும் வளரும். சதுப்பு நிலக் காடுகள் தரைப் பகுதிக்கும், கடற்கரை சூழலுக்கும் ஒரு பாலமாக அமைகிறது. சதுப்பு நிலக் காடுகள் மீன்கள் இனப் பெருக்கத்திற்கும், மீன் குஞ்சுகள் வளர்வதற்கும் ஏற்ற இடமாக அமைந்துள்ளது. இவற்றையெல்லாம் பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டமிட்டிருந்தது சபையினருக்குத் தெரியும். ஆனால், எதிர்பாராத சுனாமி மற்றும் இயற்கை பேரிடர்களின் காரணத்தால் அது அழிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த இடத்தினைப் பாதுகாப்பதற்குரிய சூழ்நிலைகளை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு எடுத்து சென்று, அது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

*[2020 பிப்ரவரி 18*

**37—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

***49280—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*லால்குடி தொகுதி, லால்குடி ஊராட்சி ஒன்றியம், நெருஞ்சலக்குடி ஊராட்சி, நெருஞ்சலக்குடி நியாய விலைக் கடையைப் பிரித்து பள்ளிவயலில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி பெறும் வரை மனதை யுத்த நிலையிலும், வெற்றி பெற்றபின் மனதை புத்தர் நிலையிலும் வைத்த அரசியலின் ஜென் குருவே, எங்களின் ஈடில்லா முதல்வரே, உங்களை வணங்கியும், வெற்றிக்கு துணை நிற்கும் எங்களின் துணை முதலமைச்சரையும் வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், திருமணமேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், பள்ளிவயல் கிராமத்தைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைகளையும் சேர்த்து, 884 குடும்ப அட்டைகளுடன் நெருஞ்சலக்குடி முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை புதியதாக அமைக்க வேண்டுமெனில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால், பள்ளிவயல் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.*

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் தளபதி அவர்கள் எங்களையெல்லாம் ஊராட்சி சபைக் கூட்டம் நடத்தச்*

*2020 பிப்ரவரி 18]*

சொல்லியதற்கிணங்க, கூட்டம் நடத்தப்பட்டபொழுது அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் எங்களுக்கு வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த வினாவினை நான் கொடுத்திருக்கிறேன். நெருஞ்சலக்குடி கிராமத்திலிருந்து பள்ளிவயல் கிராமத்திற்குச் செல்கின்ற தூரம் 2 கி.மீ. ஆக உள்ளது. அதோடு மட்டுமல்லாமல், பள்ளிவயல் கிராமத்தில் வசிக்கின்ற மக்கள் அனைவரும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள். எனவே, அந்தப் பகுதிக்கு பகுதிநேர ரேஷன் கடையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களென்றால், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு நான் ஒத்துழைப்புக் கொடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசில் 2011–லிருந்து இன்றுவரையில் பார்த்தோமென்றால், ஏறத்தாழ 2,424 நியாய விலைக் கடைகள் புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஏழையெளிய மக்கள், பாட்டாளி மக்கள், விவசாயிகள் ஆகியோருக்கு அரசாங்கம் வழங்குகின்ற நியாய விலைக் கடை பொருட்கள் தங்கு தடையின்றி அவர்களின் இல்லத்திற்கே சென்று சேர வேண்டுமென்ற அடிப்படையில், இவ்வளவு நியாய விலைக் கடைகள் மக்களுடைய பயன்பாட்டிற்காக தொடங்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்த அரசு, ஏழை மக்களுக்கு மானியத்தில் கொடுக்கின்ற பொருட்கள் அனைத்தும் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், திருப்பூர் மாவட்டத்தில் குழிப்பட்டி என்ற மலைக் கிராமத்திற்கு 75 கி.மீ. தூரம் சென்று பொருட்களைக் கொடுக்கிறது. அங்கு இருப்பது 125 கார்டுகள்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூரத்தைக் குறிப்பிட்டுச் சொன்னதால் இதைச் சொல்கிறேன். அதேபோன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரியபழமலை என்ற கிராமத்தில் வெறும் 47 கார்டுகள்தான்; இருந்தாலும், அங்கு பொருட்களைக் கொண்டு கொடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு விவசாயிகள் அதிகமாகக் குடியிருந்து வருகிறார்கள் என்றும், 2 கி.மீ. தூரம் அவர்கள் செல்ல

வேண்டியிருக்கிறது என்றும், அதனால் சிரமங்கள் ஏற்படுகின்றன என்றும் குறிப்பிட்டுச் சொன்னதற்கிணங்க, இதைச் சிறப்பு இனமாகக் கருதி, பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, பள்ளிவயல் பகுதிக்கு ஒரு நகரும் நியாய விலைக் கடை அமைத்து van மூலமாகப் பொருட்கள் கொடுக்கப்படும். மாதத்திற்கு இரண்டு முறை பொருட்களைக் கொண்டுபோய் அங்கு கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து மாண்புமிகு அம்மாவின் அரசு துறை ரீதியாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவிற்கு முன்பாக நான் கொடுத்துள்ள நான்கு வினாக்களில் ஒன்று, வாளவாடி கடையிலிருந்து அகிலாண்டபுரம் பகுதிக்கு ஒரு பகுதிநேர கடையும், கொன்னைக்குடி கடையிலிருந்து அன்பில்படுகை, வெங்கடாசலபுரம், கோவிந்தபுரம், இண்டிகோ சேம்பர் பகுதிகளுக்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையும், வளவனூர் ஊராட்சியில் இரத்தினகுடி கிராமத்திலிருந்து வளவனூர் பகுதிக்கு ஒரு பகுதிநேர ரேஷன் கடையும், அகலங்கநல்லூர் கடையிலிருந்து கீழ்மாரிமங்கலம் பகுதிக்கு ஒரு பகுதிநேர ரேஷன் கடையும் வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தங்கள் மூலமாக எங்களுக்கு அளித்த எழுத்துபூர்வமான பதிலில் இதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அதனை மறு ஆய்வு செய்து, இந்தப் பகுதிகளிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகுதிநேர ரேஷன் கடைகளை வழங்குவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து கடிதம் கொடுத்திருக்கிறார்கள். இதேபோன்று ஆளுங்கட்சியிலிருந்தும், எதிர்க்கட்சியிலிருந்தும் நிறைய உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் பகுதிநேர நியாய விலைக் கடைகளைக் கோரி அதிகமான கடிதங்களைக்

*2020 பிப்ரவரி 18]*

*கொடுத்திருக்கிறார்கள். எங்கள் துறை அலுவலர்களை அழைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஓர் ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். 50, 60, 70 கார்டுகள் இருக்கும் கிராமப்புறங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைப்பதில் சிரமங்கள் இருப்பதால், அதுபோன்ற இடங்களில் முன்மாதிரியாக நகரும் நியாய விலைக் கடைகளை அமைக்க இயலுமா என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடம் கருத்து கேட்டிருக்கிறார்கள். இதற்காக துறைரீதியாக ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். அனைத்து உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கும், ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி, ஏழை விவசாயிகள், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தங்கு தடையின்றி அத்தியாவசியப் பொருட்கள் அவர்கள் இல்லத்திற்கே சென்று சேருகின்ற வகையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதிகளிலும் இதுபோன்று நகரும் நியாய விலைக் கடைகள் அமைக்கும் நிலை இருக்கும்பட்சத்தில், அந்தப் பகுதிகளும் உறுதியாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, துறைரீதியாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஆஸ்டின் அவர்களும் இதே கேள்வியைக் கேட்டிருந்தார்கள். அவர் கோரிய பகுதியிலும் வருகிற மார்ச் 1 ஆம் தேதி முதல் நகரும் நியாய விலைக் கடையாக நடத்துவதற்கு அரசு முடிவெடுத்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

*முற்பகல் 10–15*

**திரு. பி.எம். நரசிம்மன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்க தகுதிகள் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரே உத்தரவு வழங்கலாம் என முன்பு இருந்தது. தகுதிகள் இருந்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர், அரசுக்கு பரிந்துரைக்க வேண்டுமென அரசாணையை மாற்றியுள்ளதாக அறிகிறேன். இதனால் காலம் விரயமாகிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தகுதிகள்*

இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரே உத்தரவை வழங்கலாமென அரசாணை வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. நரசிம்மன் அவர்கள் இங்கே ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். அம்மாதிரி அரசாணையில் எந்தவிதமான திருத்தமும் கொண்டுவரவில்லை. மலைவாழ் மக்கள் வாழ்கிற மலைப் பிரதேசங்கள்; சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் இடங்கள்; Highways, அதேமாதிரி நேற்று நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுமாதிரி, ஒரு பெரிய ஆறு இருக்கிறது, அந்த ஆற்றைக் கடந்து போய் பொருட்கள் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதேபோன்று, ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரியைக் கடந்து வர வேண்டியிருக்கும். இதுபோன்ற நேர்வுகளில் மாவட்ட ஆட்சித் தலைவரே பரிந்துரைக்கலாம். எதிர்க்கட்சி உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி அவர்கள்கூட பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒருகிராமத்திற்கு ஒரு கடை என்று கொண்டு வந்து, கார்டுகளின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் கடைகளைத் திறந்து சாதனை படைத்து, ஏறத்தாழ 4,441 கடைகள் என்றிருந்ததை 15,501 கடைகளாக உயர்த்திக் கொடுத்தார்கள். உங்கள் ஆட்சியிலும், எங்கள் ஆட்சியிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலும் படிப்படியாக 32,961 கடைகள் என்று வந்த பிறகும்கூட, இன்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள், ஏழையெளிய மக்கள், விவசாயிகள் இன்னமும் சிரமப்படுகிறார்கள் என்று தெரிவித்ததன் அடிப்படையிலே, இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு துறைரீதியாக ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறார். அண்ணன் திரு. நரசிம்மன் அவர்கள் சொன்னதுபோல, அரசாணையில் எந்தத் திருத்தமும் கொண்டு வரவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே உத்தரவிடுவதற்கு அதிகாரம் இருக்கிறது. எனவே, ஒரு பக்கம் கார்டு எண்ணிக்கை என்றெல்லாம் இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் ஒரு முன்மாதிரியாக இந்த ஆண்டு இதைச் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். துறைரீதியாக ஆய்வு செய்து

2020 பிப்ரவரி 18]

கொண்டிருக்கிறோம். எங்கெங்கே கடைகள் திறக்கக்கூடும், எங்கெங்கே நகரும் கடைகளாக அமைத்து பொருட்களை வழங்க முடியும் என்பதைத்துறை ரீதியாக கண்டறியச் சொல்லியிருக்கிறோம். அந்தப் பணிகள் ஆய்வு நிலையிலே இருக்கின்றன. விரைவிலே மானியக் கோரிக்கை வரும்போது கூட்டுறவுத் துறையின் மூலமாக நல்ல பதில் இந்தச் சட்டமன்றத்திற்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 3 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு விவசாயிக்கும் இப்போது வட்டியில்லா நகைக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இப்போது மத்திய அரசு கொண்டு வந்த சட்டத்தின் காரணமாக, வருகின்ற மார்ச் மாதத்திற்கு மேல் அந்த நகைக் கடன் வழங்கப்பட மாட்டாது. நிலத்தைப் பதிவு செய்தால்தான் 3 இலட்சம் ரூபாய் நகைக் கடன் வழங்கப்படும் என்றும்; KCC கடனாக மாற்ற வேண்டுமென்றும் ஓர் உத்தரவு வந்திருக்கிறது. பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், குறிப்பாக, தென் மாவட்டங்களான திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் போன்ற பல்வேறு மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன் வழங்குவதன் மூலமாக நல்ல வளர்ச்சி அடைந்து வருகின்றன. உதாரணத்திற்கு, 10 கோடி ரூபாய் முதல் 15 கோடி ரூபாய் வரை கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தச் சட்டம் வருகின்ற காரணத்தினால் விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள், அதேபோல, அங்கேயிருக்கிற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் நலிவடையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி பொது விநியோகத் திட்டம்

குறித்தது. தொடர்பில்லாத இன்னொரு கேள்வியை எதிர்க்கட்சிக் கொறடா கேட்கிறார். இருந்தாலும் பதில் சொல்கிறேன். ஆனால், எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், நீங்கள் இப்படிக் கேட்கலாமா? என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள் கேட்டது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைப் பற்றிய கேள்வி. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார், பொதுவாக எல்லோரும் அச்சத்தில் இருக்கிறார்கள். 4,449 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கங்களின்மூலம் வழங்கப்படுகிற இந்தக் கடன்கள் எந்த வகையிலும் பாதிக்கக் கூடாது என்று, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு, எல்லோருக்கும் சேர்த்துதான் இந்த ஆண்டு 11,000 கோடி ரூபாய் வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கச் சொல்லி ஆணையிட்டிருக்கிறார்கள். இனி இந்தப் பயிர்க் கடன்கள் உரிய முறையில், உரிய நேரத்தில் உரிய விவசாயிகளுக்குக் கிடைக்கும். நீங்கள் அச்சப்படத் தேவையில்லை. வணிக வங்கிகளில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் நகைக் கடன் என்று சொல்லி, அவர்கள் தவறாக கடன் கொடுக்கிறார்கள் என்ற அடிப்படையிலே, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், இந்தமாதிரி கடன் கொடுப்பது கடந்த 1–10–2019 உடன் முடிந்து போய்விட்டது. இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதற்கு விளக்கம் கேட்டு, வரும் 30 ஆம் தேதி வரை நீட்டித்திருக்கிறது. இவற்றையெல்லாம் விவரமாகச் சொன்னால் நேரம் அதிகமாகிவிடும். சுருக்கமாகச் சொல்கிறேன். ஒன்றே ஒன்று.

முற்பகல் 10–20

மத்திய அரசு பண மதிப்பிழப்பு நடவடிக்கை எடுத்தபோது, நமது மாவட்ட வங்கிகளில் அவர்களை உறுப்பினர்களாக்கி அவர்கள் அனைவருக்குமே கடன் கொடுத்தோம். இந்தியா முழுவதும் இருக்கிறவர்களுக்கு, I.A.S. Officer, நம் மாநிலத்தில் Secretary ஆக இருக்கிற ஒருவர், அவருக்குக்கூட பண புழக்கமில்லை. ஆனால், இதில் எந்தவிதமான பாதிப்பும் இல்லாத அளவுக்கு அனைத்து விவசாயிகளுக்கும் ஏறத்தாழ 7 இலட்சம் பேருக்குமேல் 4,442 கோடி ரூபாய் கடன் கொடுத்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இதெல்லாம் எங்களுடைய அரசின் சாதனை. இதையெல்லாம் சொல்லமாட்டேன்

*2020 பிப்ரவரி 18]*

*என்கிறீர்கள். அதேபோன்று, இப்போது,* KCC *மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கான பணிகள், தலைமைச் செயலாளர் அவர்களின் ஆலோசனையின்பேரில் துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, அனைவருக்கும் கடன் வழங்கப்படும். எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது. எல்லோருக்குமே, இன்றைக்கு மூன்று இலட்சத்து (குறுக்கீடுகள்) அந்தமாதிரி சொல்லமாட்டேன். பதில் பதிவு செய்துதான் ஆகவேண்டும். (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தவறாகக் கருதக் கூடாது. இதில், தவறான கடன் கொடுக்கக் கூடாது.* Society-*க்கு வாழ்வாதாரம் இருக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத்தான் சொல்கிறார்கள். உண்மையான விவசாயிகள் யாருக்கும் கடன் இல்லை என்ற நிலை எதிர்காலத்தில் வராது; இதில் எந்தவித அச்சமும் தேவையில்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் சுருக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**38—**

## புதிய மின்பாதை

***36419—திரு. எஸ். ஈஸ்வரன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டம், குத்தியாலத்தூர் ஊராட்சி, அணைக்கரை வழியாக புதிய மின்பாதை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட தாளவாடி வட்டம், குத்தியாலத்தூர் ஊராட்சிக்கு அணைக்கரை வழியாக*

புதிய மின்பாதை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். ஏற்கெனவே, அதைச் சுற்றியிருக்கின்ற கிராமங்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு ஏதாவது கேள்வியைத் தவறுதலாகக் கேட்டுவிட்டாரா என்று தெரியவில்லை. ஏனென்று சொன்னால், மின் பாதை இருக்கின்றது. மின்னிணைப்பும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை விளக்கமாகச் சொல்வார்களென்றால் அதற்குப் பதில் சொல்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

**திரு. எஸ். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொள்ளும் திசைநோக்கி பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொலைநோக்குத் திட்டங்களை நிறைவேற்றும்வகையில் தமிழக மக்களை சிறந்த முறையில் வழிநடத்திச் செல்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வணக்கங்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டம், குத்தியாலத்தூர் ஊராட்சி, அணைக்கரை வழியாக 30-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களைக் கொண்ட திங்களூர் ஊராட்சி, கேர்மாளம் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளுக்கு மின்சாரம் வருகிறது. ஆனால், 20 கிலோ மீட்டர் தூரம் அடர்ந்த காட்டுப் பகுதி உள்ள ஆசனூர் பகுதி வழியாக அந்த மின்சாரம் வருகிறது. அந்தப் பகுதியில் அடிக்கடி ஏற்படும் சூறாவளிக் காற்றினால் மரங்கள் விழுந்து மின் ஒயர்கள் அறுந்து போவதால், மக்களுக்குச் சீரான மின்சாரம் வழங்க முடிவதில்லை. எனவே, இப்பகுதி மக்களுடைய நலன் கருதி, மிக அருகில் இருக்கிற அணைக்கரையிலிருந்து நேராக மேற்கண்ட இரண்டு ஊராட்சிகளுக்கும் சீரான மின்சாரம் வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதியில் உள்ள மல்லியம்மன்துர்கத்தில் 150 குடும்பங்களும், தாசன்தொட்டியில் 25 குடும்பங்களும், இராமர்அணையில் 20 குடும்பங்களும் உள்ளன. இப்பகுதிகளில்

2020 பிப்ரவரி 18]

நீண்ட காலமாக மின்சாரம் இல்லாமல் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். அதேபோல, பவானிசாகர் ஒன்றியம், சொக்கம்பாளையம் ஊராட்சி, வெற்றிவேல் நகர் பகுதியிலும், நந்திபுரம் பகுதியிலும் மின்சாரம் இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர். அப்பகுதிகளில் புதிய மின்பாதை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மின்பாதை வனப் பகுதியில் வருகின்ற காரணத்தினால் இயற்கைச் சீற்றத்தின் காரணமாக அடிக்கடி மின் பழுது ஏற்படுகின்றது. அதற்காக புதிய மின்பாதை வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். இப்போது பெரும்பள்ளம் Substation-லிருந்துதான் மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தக் குக்கிராமங்களுக்கு மின் வசதி கொடுக்கப்பட்டு வருகின்றது. புதிய மின் பாதை அமைக்க வேண்டுமென்று சொன்னால் வனத் துறையிடம் அனுமதி வாங்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் ஆணை இருக்கிறது. தேவைப்படின், வனத் துறையின் அனுமதியைப் பெற்று அந்தக் குக்கிராமங்களுக்குப் புதிய மின் பாதை அமைப்பதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 4, 5 குக்கிராமங்களுக்கு மின் வசதி இல்லை என்று சொன்னார்கள். இதுகாறும் எங்கள் கவனத்திற்கு வரவில்லை. வனப் பகுதியிலே இருக்கின்ற கிராமங்களாக இருந்தால், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி அங்கே மின்னிணைப்புக் கொடுக்க முடியாத காரணத்தினால், சோலார் லைட் அமைக்கலாம் என்று நினைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகாறும் என் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. அப்படி இருப்பின், அது உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, சோலார் லைட் கொடுப்பதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

**திரு. எஸ். ரகுபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருமயம் தொகுதிக்குட்பட்ட அரிமளம் மற்றும் தள்ளாம்பட்டி பகுதிகளில் 33 கே.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையங்களிலிருந்து விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. ஒரு நாளைக்கு 1 மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம்தான் மின்சாரம் வருகிறது என்று சொல்கிறார்கள். எனவே, அவர்களுக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் கிடைப்பதற்கு, அந்த இரண்டு துணை மின் நிலையங்களையும் தரமுயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆத்தூரில் மின்மாற்றிகளில்* overload *இருப்பதனால், தினசரி* shutdown *ஆகிவிடுகிறது. ஒரு நாளைக்கு 10 முறை, 15 முறை அங்கே மின்தடை ஏற்பட்டுவிடுகிறது. எனவே, அந்த* transformer*–ஐ தரம் உயர்த்தித் தரவோ அல்லது புதிதாக இன்னொரு* transformer*–ஐ அமைத்துத் தரவோ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். எனவே, அந்தப் பகுதி மக்களுக்குத் தடை இல்லாமல் மின்சாரம் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக டெல்டா மாவட்டங்களுக்கு 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் தரப்படுகின்றது. காற்றாலை மின்சாரம் கிடைக்கும்போது 24 மணிநேரமும் மின்சாரம் தரப்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில் மின்னழுத்தம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் மின் தடை ஏற்படுகின்றது என்கிறார். அதை ஆய்வு செய்கின்றோம். இன்னொன்று, ஆத்தூர் பகுதியிலே மின்மாற்றிகளில் அதிகப் பளு இருக்கின்ற காரணத்தினால் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இதுகாறும் எங்களுக்கு அப்படித் தகவல் வரவில்லை. அதுகுறித்து*

*2020 பிப்ரவரி 18]*

*உடனடியாக ஆய்வு செய்து, அங்கேயிருக்கின்ற அதிகாரிகளிடம் பேசி அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**39—**

## தொகுப்பு வீடுகள்

***50194—திரு. துரை. சந்திரசேகரன்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், வீரமரசன்பேட்டை ஊராட்சியில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், வீரமரசன்பேட்டை ஊராட்சியில் உள்ள தொகுப்பு வீடுகள் முழுவதும் சிதலமடைந்து பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் உள்ளதால் இவற்றைச் சீரமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் திட்டம் என்பது கலைஞர் அவர்களால் 1974 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, அதன்மூலம் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அப்பொழுது ஆதி திராவிடர்கள் அந்த வீடுகளைத் தங்களுக்குக் கிடைத்த மாளிகை என்று கருதினார்கள். அந்த வீடுகளைக் கட்டி, இன்றைக்குக் கிட்டத்தட்ட 46 ஆண்டுகள் ஆகிவிட்டன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதைச் சரிபார்க்க வேண்டுமென்று சொன்னால், ஒரு காலக் கணக்கீடு இருக்கிறது. இந்த ஆண்டுக்குள் இருந்தால்தான் அதைச் செய்ய முடியும் என்ற நிலை இருக்கிறது. நம்முடைய அரசு 25 ஆண்டு காலத்திற்கு முன் கட்டப்பட்டதாக இருந்தால் அதைப் பழுதுபார்க்கலாம் என்று சொல்கிறது. ஆனால், 46 ஆண்டுகளான பழுதடைந்த இந்தக் கட்டடங்களைச் சீரமைப்பதற்கு வசதி வாய்ப்புகளே இல்லை. ஆகையினாலே அந்த வீடுகளை இடித்துவிட்டு புதிதாக வீடுகளை அமைத்துத் தரவேண்டும் என்பதுதான் நல்ல நடைமுறை. 46 ஆண்டுகள் குடியிருந்த வீடுகளை அரசாங்கம் பழுது பார்ப்பதற்கு முடியாது; இயலாது. ஆகையால் அரசாங்கம் முன்னின்று இதற்காக நிதியொதுக்கீடு செய்து புதிய வீடுகளை அவர்களுக்கு அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும் என்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது முக்கியமான ஒரு பிரச்சினை. ஆதி திராவிடர்களுக்கான வீடுகள் கட்டும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அவர்கள் தலைவர் என்று சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் வெளியிட்ட அறிக்கையின்படி 25 ஆண்டுகளுக்கு முன்னர் பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ் கட்டப்பட்டு பழுதடைந்த நிலையிலுள்ள 45,594 வீடுகளை, வீடு ஒன்றுக்கு 50,000 ரூபாய்க்கு மிகாமல் பழுது நீக்கம் செய்ய ஏதுவாக 227 கோடியே 97 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, ஊரக வளர்ச்சித் துறை மூலமாக

*2020 பிப்ரவரி 18]*

*26–9–2018 அன்று ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 45,594 வீடுகள் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தமாக 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2400 வீடுகள் பழுது நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. 25 வருடங்கள், 30 வருடங்கள், 40 வருடங்களான வீடுகளையெல்லாம் பழுது நீக்கம் செய்ய முடியாது. அந்த வீடுகளில் கைவைத்தால் முழுவதும்* damage *ஆகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பல்வேறு திட்டங்களின்படி ஒரு நபருக்கு ஒரு முறைதான் அரசாங்கம் வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வீடு இருக்கிற நிலங்களிலேயே, வீடு இருக்கிற இடம் போக எஞ்சிய நிலத்தை அவர்களது மகன் பெயருக்கோ, மகள் பெயருக்கோ பட்டா மாறுதல் செய்யும்பொழுது அந்தமாதிரி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்திலும், மாண்புமிகு எடப்பாடியார் காலத்திலும் பல வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பழுது நீக்கம் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்கள். 227 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.*

*முற்பகல் 10–30*

*அதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும்கூட பழுதுநீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்வதற்காக 50,000 ரூபாயை ஒதுக்கீடு செய்யும் வகையில், விதிமுறைகளை மாற்றிக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வீடுகளைப் பழுது நீக்கம் செய்வது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கண்டிப்பாக மீண்டும் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். எதிர்க்கட்சிகளின்*

எண்ணங்களைத் தவிடு பொடியாக்கி, மூன்றாண்டுகள் கடந்து ஆட்சியின் நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். உள்ளாட்சித் துறையிலே பல விருதுகளைப் பெற்று, சாதனை புரிந்திருக்கின்ற எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியத்தில் பழுதடைந்த வீடுகள் அதிகம் உள்ளன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சில பணிகளைத்தான் செய்ய முடிகின்றது. மேலும், டாப்ஸ்லிப் பகுதியிலுள்ள மலைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகளும் பழுதடைந்துள்ளன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பழுதடைந்துள்ள அந்த வீடுகளைச் சரி செய்வதற்கு நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதியிலே பழுதடைந்த வீடுகளைப் பழுது நீக்கம் செய்வது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வீடுகள் கட்டப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கின்றபட்சத்தில், ரூ.227 கோடி ஒதுக்கப்பட்டு, பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதைப்போல, துறை ரீதியாக ஆய்வு செய்து, கூடுதல் நிதி தேவைப்படும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 50 இலட்சம் ரூபாய் கூடுதலாகத் தற்போது உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அந்நிதியிலிருந்தும் 50,000 ரூபாய் வரை பழுது நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்ளலாம் என்று தற்போது விதிமுறைகளை மாற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதிலிருந்தும் பணிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக

2020 பிப்ரவரி 18]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவெனில், கடந்த வருடம் ஏற்பட்ட புயலின் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 100-க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மக்களுடைய குடியிருப்புகள் பழுதடைந்தும், நிறைய இடங்களில் தடுப்புச் சுவர் இல்லாமலும், மக்கள் வாழ முடியாத நிலைமையில் இருக்கின்றன. மதிப்பிற்குரிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டபோது, ‘கண்டிப்பாக பசுமை வீடுகள் கட்டித் தருகிறோம்’ என்ற உறுதிமொழியை அளித்துவிட்டுச் சென்றார்கள். எனவே, குறைந்தபட்சம் 100 பசுமை வீடுகளைக் கட்டிக் கொடுத்தால், அந்த பாவப்பட்ட ஏழை மக்களினுடைய குறைகள் தீரும். எனவே, 100 பசுமை வீடுகள் கட்டித் தருவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் உள்ளிட்ட இயற்கை பேரிடர் காலங்களில் மத்திய, மாநில அரசுகள் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தடுப்புச் சுவர் பற்றிச் சொன்னார்கள். ஊராட்சிப் பகுதிகளிலே தடுப்புச் சுவர் கட்டும் பணிகளை NREGA திட்டத்தில் எடுத்துக்கொள்ளலாம். இதுபோன்று பல்வேறு பணிகள் செய்யப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்திற்கும் பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், பேருந்து நிலையம் தேவை என்று கேட்டவுடனேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேருந்து நிலையம் கட்டப்படும் என்று உடனடியாக அறிவித்தார்கள். இதுபோன்று பல்வேறு திட்டங்கள்

எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட 100 வீடுகளையும் கட்டுவது குறித்து துறை ரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. P. சின்னப்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**40—**

## கால்நடைக் கிளை நிலையம்

***61908—திரு. P. சின்னப்பன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், V. வேடப்பட்டி ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், V. வேடப்பட்டி ஊராட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய கால்நடைக் கிளை நிலையம் துவக்கக் கோரியுள்ளார்கள். V. வேடப்பட்டி கிராமத்தில் மொத்தம் 157 கால்நடை அலகுகளே உள்ளன. அரசு விதிமுறைகளின்படி, புதிய கால்நடைக் கிளை நிலையம் துவக்க குறைந்தபட்சம் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். V. வேடப்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களான வேடப்பட்டு, மாமநாயக்கபுரம், விருசம்பட்டி, அரசன்குளம், பல்லாகுளம், கன்னிமார்கோட்டம், மகாராஜபுரம்,*

*2020 பிப்ரவரி 18]*

*இலந்தைக்குளம், இலக்கம்பட்டி, மந்திக்குளம் மற்றும் இ. வேலாயுதபுரம் ஆகியவற்றையும் சேர்த்து 3,110 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதையும், இதுகுறித்து அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. P. சின்னப்பன் அவர்கள்.*

**திரு. P. சின்னப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் தங்கத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இரும்பு தேசத்தின் கரும்பு மனிதர், சட்டம்-ஒழுங்கைக் காப்பதில் இரும்பு மனிதர், இந்தியாவின்* Number One *முதல்வர், நம் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'ஜல்லிக்கட்டு நாயகர்' நம் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் மற்றும் எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர், எங்கள் அண்ணன் திரு. கடம்பூர் ராஜு அவர்களையும் வணங்குகிறேன்.*

*வானம் பார்த்த பூமி, மழை பெய்தால்தான் எங்கள் பகுதியில் விவசாயம் நடக்கும். வேலிக்காத்தான் மரங்களும், ஆடு, மாடுகளும் நிறைந்த பகுதி. மானாவாரி கரிசல் காட்டில் தமிழகத்திலேயே அதிக காரம் தரும் மிளகாய் வத்தல் அதிகமாக விளைச்சல் தரும் பகுதி, எங்கள் விளாத்திகுளம் தொகுதி. விளாத்திகுளம் தொகுதி மக்களின் பல ஆண்டு கோரிக்கையான, மிளகாய் வத்தல் மையம் அமைத்திட பட்ஜெட்டில் அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், எங்கள் அண்ணன் பாசமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் விளாத்திகுளம் தொகுதி மக்களின் சார்பில் முதலில் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*தமிழகத்திலேயே பரப்பளவில் பெரிய தொகுதி எங்கள் விளாத்திகுளம் தொகுதி. 141 கிராம ஊராட்சிகளைக் கொண்ட*

தொகுதி விளாத்திகுளம் தொகுதி. 3 வருவாய் வட்டங்களை உள்ளடக்கிய தொகுதி விளாத்திகுளம் தொகுதி. என்றும் புரட்சித் தலைவரின், புரட்சித் தலைவியின் எஃகுக் கோட்டை விளாத்திகுளம் தொகுதி. தற்போது நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலிலும் விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட விளாத்திகுளம், புதூர் 2 ஊராட்சி ஒன்றியங்களிலும் 100 சதவிகிதம் வெற்றி பெற்று, அண்ணன் எடப்பாடியார் அவர்களின் எஃகுக் கோட்டை என்று நிரூபித்த தொகுதி விளாத்திகுளம் தொகுதி. (மேசையைத் தட்டும் ஒலி) முழுக்க முழுக்க ஆடு, மாடுகளை வைத்துத்தான் பிழைப்பு நடத்தி வருகிறார்கள். அம்மா அவர்களின் ஆட்சியிலும், தற்போது அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் ஆட்சியிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அருகில் கால்நடை மருத்துவமனையோ, கால்நடைக் கிளை நிலையமோ இல்லை. ஆகையால், தற்போதுள்ள நிலையைக் கணக்கிட்டு, அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியாக அமைத்துத் தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைக் கூறி விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றுமில்லை. ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறபோதெல்லாம் பேரவை முன்னவர் அவர்களைக் குறிப்பிடுகிறபோதெல்லாம், 'ஜல்லிக்கட்டு நாயகன், ஜல்லிக்கட்டு நாயகன்' என்று சொல்கிறார்கள். அதாவது, இதுவரையில் எப்பொழுதாவது நம்முடைய பேரவை முன்னவர் அவர்கள் மாடு பிடித்திருக்கிறாரா? இல்லை, அந்தப் பெயருக்கு ஏற்றபடி ஒரு நாள் அலங்காநல்லூரில் ஏற்பாடு செய்து எங்களையெல்லாம் கூட்டிக் கொண்டு போய் அவர் மாடு பிடிப்பதற்கு ஏற்பாடு செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். அவர் வந்தவுடன் கொஞ்சம் கேட்டுச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சம்பத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

*2020 பிப்ரவரி 18*]

**41—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***52636—திரு. கோ. சம்பத்து:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசன நிலங்களால் பயன்பெறும் பாசக்கார விவசாயப் பெருங்குடி மக்களுடைய வயிற்றிலே பால் வார்க்கக்கூடிய அறிவிப்பாக, ஒரு பாசக்கார முதலமைச்சராக, நம்முடைய முதலமைச்சர், நான் சார்ந்திருக்கக்கூடிய புதுக்கோட்டை மாவட்டம் உள்ளிட்ட காவேரி டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திருப்பதற்கு மாவட்ட மக்களுடைய சார்பிலே நன்றி தெரிவிப்பதோடு, நெடுங்காலமாகப் போராடிய நெடுவாசல் கிராம மக்களும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களை நேரிலே சந்தித்து தங்களுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்ட மக்களுடைய 100 ஆண்டு கால கனவுத் திட்டமான காவேரி–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டத்திற்காக 700 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்து, புதுக்கோட்டை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுடைய வயிற்றிலே பால் வார்க்கக்கூடிய ஓர் அறிவிப்பை இந்த பட்ஜெட்டிலே அறிவித்ததற்காக, மாவட்ட மக்கள் சார்பாக நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*[2020 பிப்ரவரி 18*

*முற்பகல் 10–40*

*மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார். ஜல்லிக்கட்டுக்காக இந்த நாடே போராடிக் கொண்டிருந்தபோது, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 24 மணி நேரத்திலே மத்திய அரசின் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து அதற்கான ஒரு சிறப்பு உத்தரவை, விலக்கை பெற்றுக் கொடுத்த காரணத்தினால், அவர் ஜல்லிக்கட்டு நாயகர் என்றழைக்கப்படுகிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விரும்பினால், நாங்கள் அடுத்து விராலிமலை ஜல்லிக்கட்டில், எதிர்க்கட்சித் துணைத் தலைவரை அழைப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் பார்வையாளராக வரலாம் அல்லது மாடுபிடி வீரராக வந்தால், அது மேலும் எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே ஜல்லிக்கட்டு பேரவையின் சார்பிலே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*(அ) மற்றும் (ஆ) காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில், ஏற்கெனவே பாணாவரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம், மேம்படுத்தப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகையினால், வருங்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் அவசியம் கனிவோடு பரிசீலிக்கப்படும் என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சம்பத்து அவர்கள்.*

**திரு. கோ. சம்பத்து:** *மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதி அரசரைப்போல், இந்தப் பேரவையை நீதி தவறாமல் நடத்தும் உங்களுக்கும் என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் நெஞ்சங்களிலும் குறிப்பாக, விவசாயப் பெருமக்களின் நெஞ்சங்களிலும் நீங்கா இடம்*

*2020 பிப்ரவரி 18]*

*பிடித்திருக்கும் எங்கள் சேலத்து மாங்கனி, கரும்பு மனிதராக, தன் செந்தமிழால், இம்மாமன்றத்தில் இருப்போரை எதிர்கொண்டு, தன் சொல்லாற்றலால் வெற்றி பெறும் அளவிற்கு, தமிழ் ஆற்றல் படைத்த எங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.*

*மனித நேயத்துடன், தேனைவிட இனிமையாகவும், இச்சபையில் அடக்கமும், அன்பும், அமைதியும் கொண்ட உருவமாக அமர்ந்திருக்கும் எங்கள் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் பணிவுடன் வணங்குகின்றேன்.*

*மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களையும், எங்கள் மண்ணின் மைந்தராக, ஆற்றல் மிகுந்த மாவட்ட கழகச் செயலாளராகச் செயல்படும் அன்பு அண்ணன் திரு. சு. ரவி அவர்களையும் பணிவுடன் வணங்குகின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் காவேரிப்பாக்கம் பேரூராட்சி வழியாக சென்னை முதல் பெங்களூரு செல்லும் தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. விபத்திற்குள்ளானவர்களைக் காப்பாற்ற வாலாஜா, வேலூர் போன்ற இடங்களிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளுக்கு வெகு தூரம் கடந்து செல்ல வேண்டிய நிலையுள்ளது. அதற்குள் பல உயிர்கள் பலியாகிவிடுகின்றன. மேலும், காஞ்சிபுரத்திலிருந்து வேலூர் வரை எந்த மருத்துவமனையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, எனது சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த காவேரிப்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருவதோடு, அனைத்து மருத்துவ வசதிகளும் கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றையும் உருவாக்கித் தருமாறு, மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஜல்லிக்கட்டு காளையைப்போல் வேகமாகச் செயல்பட்டு வரும் எங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காவேரிப்பாக்கம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம், வருங்காலத்தில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றேன். அங்கு விபத்துகள் அடிக்கடி நடைபெறுகின்றன. நெடுஞ்சாலையில் தூரங்களுக்கு ஏற்ப மருத்துவமனைகள் குறைவு என்றும் சொல்லியிருக்கிறார்கள். அங்கு விபத்து காய சிகிச்சை மையங்களை உருவாக்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அவற்றைக் கணக்கெடுத்து, நிறைய இடங்களில், highway-ல் ஒரு மருத்துவமனைக்கும், இன்னொரு மருத்துவமனைக்கும் இடையே விபத்து காய சிகிச்சை மையங்களை Accedent (Trauma Stabilisation Centre) TAEI திட்டத்தின்கீழ் நிறுவி வருகிறது. விபத்துகள் ஏற்படக்கூடிய அந்த இடங்களைக் கண்டறிந்து, அங்கே அதிகமான விபத்துகள் நடைபெறுகின்றனவா என்பதை ஆய்வு செய்து, விபத்து காய சிகிச்சை மையத்தை வருங்காலத்திலே தொடங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சம்பத்து அவர்கள்.

**திரு. கோ. சம்பத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தக் கேள்வியை, நான் அவருக்காக வழிமொழிகிறேன். காரணம், காவேரிப்பாக்கம் என்பது மிகப் பெரிய ஊர். அங்கேயே ஒரு hospital தேவை. ஆகையினால், காஞ்சிபுரத்தில் அடிபட்டால்கூட மிகவும் உள்ளேதான் போக வேண்டும். சென்னையை விட்டால் வாலாஜாபாத்தான் போக வேண்டும்; இல்லையென்றால், வேலூருக்குத்தான் போக வேண்டும். இடையில் இருக்கின்ற

*2020 பிப்ரவரி 18]*

*காவேரிப்பாக்கத்தை சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஊரே பெரிய ஊர். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை நியாயமானது. அதைத் தாங்கள் நிச்சயமாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படும். நெடுஞ்சாலைகளில், உதாரணத்திற்குத் தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய வேலூருக்குச் செல்கின்ற பகுதியில், கடந்த மாதம்* Accident Trauma Stabilisation Centre on the road *ஸ்ரீபெரும்புதூரில் திறந்திருக்கிறோம். இப்போது,* ECR–*ஐ எடுத்துக்கொண்டால், ஈஞ்சம்பாக்கத்தில் ஒன்று, மகாபலிபுரத்தில் ஒன்று என* Accident Trauma Stabilisation Centres *திறந்திருக்கிறோம். ஆக, ஒரு விபத்து நடந்தவுடனே,* Golden Hour–*ல் அவரை* treat *செய்வதற்காக, பயிற்சிப் பெற்ற மருத்துவர்கள் (*trained doctors*), செவிலியர்கள் 24* x *7* alert *ஆக தயார் நிலையில் இருக்கக்கூடிய அந்த நிலைப்படுத்தும் மையத்தை அரசு இப்போது ஒரு புதிய முயற்சியாக ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இதற்கு மிகப் பெரிய வரவேற்பு இருக்கிறது. பொதுவாகவே, இந்தத் திட்டத்தை நாம் தொடங்குவதற்கு முன்னர் இருந்த* death rate *8.3 சதவிகிதம். இத்திட்டத்தைத் தொடங்கியதற்குப் பின்னர் 8.3 சதவிகிதத்திலிருந்து 2.8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்போருடைய எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீபெரும்புதூரில் செய்துவிட்டோம். அடுத்து, தாங்கள் குறிப்பிடக்கூடிய காவேரிப்பாக்கம் பகுதியை மையமாக வைத்து, எந்த இடத்தில் ஏற்புடையதாக இருக்கின்றதோ அங்கே விரைந்து செயலாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.*

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம்–திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் தொழுதூர் ஆரம்ப சுகாதார நிலையம், ஆவட்டி ஆரம்ப சுகாதார நிலையம், கழுதூர் ஆரம்ப சுகாதார நிலையம் என மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. விபத்து ஏற்பட்டால், தொழுதூரிலிருந்து திருச்சி செல்வதற்கு 80 கி.மீ. தூரமும், இந்தப் பக்கம் விழுப்புரம் செல்வதற்கு 80 கி.மீ. தூரமும் வர வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் "தொழுதூர் வந்தேன், பொழுது புலர்ந்தது" என்று சொல்லப்பட்ட அந்த ஊராட்சியில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை, அவசர விபத்து சிகிச்சை பிரிவுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, குறிப்பாக, எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களெல்லாம் என்ன நினைக்கின்றீர்களோ அல்லது எது தேவை என்று எதிர்பார்க்கின்றீர்களோ அவற்றையெல்லாம் நீங்கள் நினைப்பதற்கு முன்னதாகவே செய்யக்கூடிய துறையாக, அரசாக, நம்முடைய அரசு செயல்படுகிறது. தாங்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலும் கடந்த மாதம் விபத்து காய சிகிச்சை மையத்தை நானும், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் திறந்து வைத்தோம். 50 இலட்சம் ரூபாய் செலவில் அதைத் தரமுயர்த்தி, 24 மணி நேரமும் செயல்பட திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், திருச்சி–சென்னை நெடுஞ்சாலையில் குறிப்பாக, செங்கல்பட்டிலிருந்து திருச்சிக்கு செல்கின்ற அந்த மையப் பகுதியில் அமைந்துள்ளதை, நானே அங்கு வந்து திறந்து வைத்திருக்கிறேன். அது தொடர்ந்து மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

*2020 பிப்ரவரி 18]*

**திரு. என். சுரேஷ் ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒருவாரத்திற்கு முன்பாக நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை நடைபெறக்கூடிய நேரத்தில் மின்தடை ஏற்பட்டு, அறுவை சிகிச்சை நின்றுவிடக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது. இதனால், நோயாளிகள் உயிரிழக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, மிகப் பெரிய ராட்சச ஜெனரேட்டர் வசதியோ அல்லது தனியாக மின்சார வழித்தட பாதை ஒன்றையோ அமைத்து, நோயாளிகளுக்கு வசதி, வாய்ப்பை இந்த அரசாங்கம் உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் இறப்பு விகிதத்தை பார்க்கின்றபோது, 50 சதவிகிதம் கேன்சர் நோயினால் உயிரிழப்பு ஏற்படுகிறது. எனவே, கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட கேன்சர் பிரிவு, ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அப்படியே நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, மீண்டும் கேன்சருக்கு என்று ஒரு தனி பிரிவை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் உள்ளே செல்லும் சாலைகள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு வருகை தந்தபோது அந்தச் சாலைகளெல்லாம் சீர்செய்து தரப்படும் என்று சொன்னார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

**திரு. என். சுரேஷ் ராஜன்:** *அவற்றைச் சீர்செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கருத்து கேட்டிருக்கிறார். ஒன்று, ஜெனரேட்டர். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் உதவியோடு தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து* Medical Colleges–*க்கும்* uninterrupted power supply, separate–*ஆக* dedicated feeder *போட்டு, மற்ற இடங்களில் மின்தடை ஏற்பட்டால்கூட*

[2020 பிப்ரவரி 18

மருத்துவமனைகளில் மின்தடை ஏற்படாத ஒரு நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம், நெம்பர் 1. நீங்கள் சொன்ன அந்தக் கருத்து குறித்து நிச்சயமாக துறை ஆய்வு செய்யும். நெம்பர் 2. Genset வசதி செய்து கொடுத்திருக்கிறோம். கஜா புயலின்போது, சென்னையில் பெருவெள்ளம் வந்ததற்குப் பிறகு, இன்னொரு விஷயம் அது என்னவென்றால், ICU-க்கு மட்டும் separate ஆக mini genset வசதியும் நாம் செய்து கொடுத்திருக்கிறோம். அதற்கு தனியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் சொன்ன 50 சதவிகித இறப்பு விகிதம் குறித்த கணக்கீடு இல்லை. ஏற்கெனவே ஒருமுறை நீங்கள் அவையில் இதுகுறித்துப் பேசியிருக்கிறீர்கள். கன்னியாகுமரியில் அதிகமாகப் புற்றுநோயினால் இறக்கக்கூடிய கணக்கீடு, துறை ரீதியாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். Cancer centres-ஐ மண்டல அளவில் நாம் அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். தூத்துக்குடியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் Linear Accelerator என்ற மிகப் பெரிய கருவியை install செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களைக் கலந்தாலோசித்து செய்து கொண்டிருக்கிறோம். அது மண்டல புற்றுநோய் மையமாக உருவாக்கப்படுகின்றபோது கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். கன்னியாகுமரி மருத்துவமனைக்குத் தாங்கள் விரும்புகிற மருத்துவ வசதிகளை அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை வழி நடத்தக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அத்திக்கடவு-அவிநாசித் திட்டத்திற்காக 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதிக்குட்பட்ட விஜயமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம்

*2020 பிப்ரவரி 18]*

*4 வழிச் சாலையிலே அமைந்திருக்கிறது. அந்த 4 வழிச் சாலையிலே விபத்து நடைபெறுகிறபோது காயமடைந்தவர்களை 10 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய பெருந்துறை பகுதிக்குத்தான் அழைத்து செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கால்நடைக் கிளை நிலையத்தைத் தரமுயர்த்த ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு) மன்னிக்கவும், ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கனிவோடு ஆய்வு செய்து, பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முத்தான மூன்றாண்டுகால நல்லாட்சியில், தேசத்திலே முதன்மை மாநிலமாகத் தமிழகம் தேர்வு செய்யப்பட்டிருக்கிற நல்ல சூழ்நிலையில், மருத்துவத் துறையிலே இந்தியாவிலே சிறந்த சிகிச்சை தருகிற முதல் மாநிலம் தமிழகம் என்கிற நல்ல பெயர் பெற்றிருக்கிற இந்தச் சிறப்பான சூழ்நிலையில், என்னுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி, இராமபட்டிணம் ஆரம்ப சுகாதார நிலையம் குறித்து நான் 3 ஆண்டுக் காலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறேன். நிறைவேற்றப்படும் என்று கடிதமும் வந்திருக்கிறது. இந்த ஆண்டாவது 30 படுக்கைகள் வசதி கொண்ட தரமுயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித் தருவார்களா என்கின்ற கேள்வியை தங்கள் மூலமாகக் கேட்டு, நல்ல பதிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், மக்கள் நல்வாழ்வுத் துறையில் கேட்ட பணிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கோரிக்கையிலும் அவர் எதிர்பார்ப்பதுபோல, நல்லது நடக்கும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**42—**

## வேளாண்மைக் கல்லூரி

***28764—திரு. எஸ். அம்பேத்குமார்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வந்தவாசி தொகுதி, பெரணமல்லூர் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஆண்டுகள் பேசும் சாதனைகளை 3 ஆண்டுகளில் செய்து முடித்து சாதனை படைத்திட்ட எங்களுடைய கொங்கு நாட்டுத் தங்கம் மரியாதைக்குரிய, வணக்கத்திற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய துணை முதல்வர் அவர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து இன்றைக்கு வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தமிழக விவசாயிகளுடைய சார்பாகக்*

*2020 பிப்ரவரி 18]*

*கோடானு கோடி நன்றிகளைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதியில் அரசு வேளாண் கல்லூரி அமைத்திடுவது குறித்த கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.*

*முற்பகல் 10–55*

**திரு. எஸ். அம்பேத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி சட்டமன்றத் தொகுதியானது விவசாயத்தை மட்டுமே நம்பி உள்ள சட்டமன்றத் தொகுதியாகும். 2006 வரை வந்தவாசி தொகுதி, பெரணமல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்தது. பின்பு 2011 தொகுதி சீரமைப்பின்படி, பெரணமல்லூர் சட்டமன்றத் தொகுதியின் பெரும் பகுதி வந்தவாசி சட்டமன்றத் தொகுதியிலும், மீதமுள்ள 40 சதவிகித தொகுதி போளூர் சட்டமன்றத் தொகுதியிலும் இணைக்கப்பெற்றுள்ளது. இன்று பெரணமல்லூர் தொகுதி, வந்தவாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம் மற்றும் தெள்ளாறு ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ள பகுதியாக உள்ளது. அந்தப் பகுதியின் ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்களின் மாணவச் செல்வங்கள் +2 வரை படித்துவிட்டு மேல்படிப்பினைத் தொடர முடியாத காரணத்தால் அங்கே ஓர் அரசு வேளாண்மைக் கல்லூரியை அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 14 உறுப்புக் கல்லூரிகளும், 28 இணைப்புக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளில் அனைத்து*

மாவட்ட மாணவர்களுக்கும் மதிப்பெண் அடிப்படையில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு படித்து வருகின்றனர். புதியதாக வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 110 ஏக்கர் நிலம் தேவைப்படும். அதிகப்படியாக ஒவ்வொரு பட்டப் படிப்பிற்கும் 110 ஏக்கர் நிலம் கூடுதலாகத் தேவைப்படும். வேளாண் கல்லூரி நிறுவ உத்தேசித்துள்ள இடத்தின் மதிப்பைப் பொறுத்து நிதித் தேவை மாறுபடும். மேலும், ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தேவையான மனித ஆற்றல், கல்லூரி மற்றும் பண்ணையின் அளவினைப் பொறுத்து மாறுபடும். வந்தவாசி தொகுதிக்கு அருகில் வாழவச்சனூரில் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கலசப்பாக்கத்தில் அரவிந்தர் வேளாண்மைக் கல்லூரி ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும், ராணிப்பேட்டை மாவட்டம், கலவையில் ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரியும், தோட்டக்கலை கல்லூரியும், ராணிப்பேட்டை மாவட்டம், சகாயத்தோட்டத்தில் தென்பாஸ்கோ வேளாண்மைக் கல்லூரியும், கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் ஜே.எஸ்.ஏ. கல்லூரியும், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல், அவருடைய பகுதியைச் சுற்றி சுமார் 8 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, மாணவர்களுக்குத் தேவையான வேளாண் கல்வி மற்றும் விவசாயத்திற்குத் தேவையான விதை மற்றும் பயிர் சார்ந்த ஆலோசனைகளை மேற்கண்ட கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம். எனவே, வந்தவாசி தொகுதியில் அரசு வேளாண் கல்லூரி அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.*

**திரு. எஸ். அம்பேத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூர் கிராமம் என்பது திருவண்ணாமலையைக் கடந்து கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, ராணிப்பேட்டை என்பது அருகில் உள்ள வேலூர் மாவட்டத்தைச்*

*2020 பிப்ரவரி 18]*

*சேர்ந்தது. ராணிப்பேட்டை, வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அந்தக் கல்லூரியானது தனியார் கல்லூரி. எங்கள் பகுதி மாணவச் செல்வங்கள், ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்கள், அதிகம் செலவு செய்து படிக்க வைக்க முடியாத காரணத்தினால் படிப்பினைப் பாதியில் நிறுத்திவிடுகின்ற சூழ்நிலை உள்ளது. அதுமட்டுமல்ல, வந்தவாசி சட்டமன்றத் தொகுதியானது வந்தவாசி சட்டமன்றத் தொகுதியைச் சுற்றியுள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய மையப் பகுதியாகும். இந்த மையப் பகுதியில் அரசு நிலங்கள் நமக்குத் தேவையான அளவிற்கு உள்ளதால் இதற்கு தனியார் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, வந்தவாசியைச் சுற்றியுள்ள செஞ்சி சட்டமன்றத் தொகுதி, ஆரணி சட்டமன்றத் தொகுதி, போளூர் சட்டமன்றத் தொகுதி, செய்யாறு சட்டமன்றத் தொகுதி, உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி, மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி என 7 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் வேளாண்மைக் கல்லூரியோ அல்லது தோட்டக்கலைப் பல்கலைக்கழகமோ அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.*

**திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு அன்றைக்கு வேளாண்மைத் துறை அமைச்சராக தஞ்சையைச் சேர்ந்த திரு. கோ.சி. மணி அவர்கள் இருந்தார்கள். அவரிடம் எங்களுக்கு வேளாண்மைக் கல்லூரி வேண்டும் என்று கேட்டபோது, இல்லை, இல்லை, நான் திருச்சிக்குதான் தருவேன் என்று சொல்லி, கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்தபோது திருச்சி லால்குடியில், குமுளூரில் புதிய வேளாண்மைக் கல்லூரியைத் தந்தார்கள். அதற்கான இடமெல்லாம்*

[2020 பிப்ரவரி 18

வாங்கப்பட்டு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டன. ஆனால், 1990 ஆம் ஆண்டு ஆட்சி போய், அம்மையார் அவர்கள் முதலமைச்சராக வந்தபோது, திருச்சியைச் சேர்ந்த திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சராக வந்தபோது எங்கள் ஊரில் அமையவிருந்த கல்லூரியை திருச்சிக்கு அருகில் இருந்த அவருடைய தொகுதிக்கு எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். இப்போது அனைத்து அடிப்படை வசதிகளும் அங்கே இருக்கின்றன. குமுளூரில் வேளாண் பொறியியல் கல்லூரி உள்ளது. Agriculture Polytechnic கல்லூரியும் அங்குதான் இருக்கின்றது. இன்னமும் அங்கே இடம் உள்ளது. அருமையான மண் வசதியும், தண்ணீர் வசதியும் கொண்டது. புதிய கல்லூரியைத் துவங்குவதற்கு அரசு முன்வர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

அடுத்ததாக, நீங்கள் அப்படி இல்லையென்று சொன்னாலும்கூட நாம் இப்போது. . .

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

**திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஆடுதுறையில் நெல் ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. நாம் கண்டுபிடித்த கோ 43, கோ 36 அல்லது ADT 36, ADT 39 போன்ற நெல் இரகங்கள்தான் தொடர்ந்து இருபது ஆண்டுக் காலமாக இருந்துகொண்டிருக்கின்றன. புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அட்சயா நெல் அல்லது தமிழ்நாடு அளவில் கண்டுபிடித்த நெல் இரகங்கள் விவசாயத்திற்கு உகந்ததாக இல்லை; விளைச்சலும் குறைவாக இருக்கிறது. எனவே, இந்த அரசு வேளாண் ஆராய்ச்சிக்கு அதிகமான நிதியை ஒதுக்கி, புதிய இரகங்களைக் கண்டுடிக்க வேண்டும். இன்றைக்கு ஆந்திராவை நம்பித்தான் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆந்திரா பொன்னி வருகிறது, இல்லையென்றால் இப்போது தன்வீர் என்ற ஒரு நெல் வந்திருக்கிறது. NRL என்று ஒரு நெல் வந்திருக்கிறது. தமிழ்நாட்டில் புதியதாக மெலிதாக வரும் அரிசி இரகத்தைக் கண்டுபிடிக்க, ஆராய்ச்சிக்கு நாம் அதிகளவில் நிதி ஒதுக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்க

*2020 பிப்ரவரி 18]*

*வேண்டும். அடுத்தது, பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானிகள் இருக்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, உங்களுக்கு துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுத்தேன், ஒரு கேள்வி கேட்டால் பரவாயில்லை, நீங்கள் தொடர்ந்து அடுக்கிக்கொண்டே போனால், மாண்புமிகு அமைச்சரால் எவ்வாறு பதில் அளிக்க முடியும்? நீங்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமாகக் கேட்டாலும்கூட பரவாயில்லை; நீங்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் கேள்விகளை அடுக்கிக்கொண்டே சென்றால் எப்படி? சுருக்கமாகக் கேட்டு முடியுங்கள்.*

**திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. துரைக்கண்ணு அதிகம் தெரிந்தவர் என்பதால்தான் கேட்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் எனக்கு நேரம் இல்லை; முடியுங்கள்.*

**திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் கேள்வியைக் கேட்டுவிட்டு, பாராட்டு சொன்னார். அவரை விட்டுவிட்டு என்னை மட்டும் கேட்கிறீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள் என்றுதானே சொல்கிறேன்.*

**திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் ஆராய்ச்சிக்கான நிதியை அதிகமாக ஒதுக்கி, புதிய இரகங்களைக் கண்டுபிடிக்க இந்த அரசு முன்வருமா என்று கேட்டு அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருச்சி ஸ்ரீரங்கம் அருகில் மகளிருக்காக ஒரு*

தோட்டக்கலைக் கல்லூரியை நிறுவிய வரலாறு உங்களுக்கெல்லாம் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த முதலமைச்சரின் எண்ணத்திலும் உதித்திராத, அவருடைய எண்ணத்தில் மட்டும் உதித்த ஒரு மாபெரும் சிந்தனையின் அடிப்படையில் மகளிருக்காக ஒரு தோட்டக்கலைக் கல்லூரியை அமைத்த முதல்வர் நம்முடைய மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை முதலில் நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சருக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவதாக, தற்போது திருச்சியில் மறைந்த முன்னாள் அமைச்சர் அன்பில் தருமலிங்கம் அவர்களின் பெயரில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. தேவையான அளவிற்கு அங்கு கல்லூரிகள் இருக்கின்றன. மேலும் 34 வகையான புதிய நெல் இரகங்களை, புதிய விதைகளை நாங்கள் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலமாகக் கண்டுபிடித்திருக்கிறோம்; தொடர்ந்து ஆடுதுறையிலும் ஆராய்ச்சி செய்து வருகிறோம் என்பதை மாண்புமிகு முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**43—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***47754—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி, புதுக்கோட்டை வட்டாரப் போக்குவரத்து அலுவலக நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ்

*2020 பிப்ரவரி 18]*

*வருகிறது. தற்போது கந்தர்வகோட்டை தொகுதியில் 1,250 போக்குவரத்து வாகனங்களும் 5,000 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் உள்ளன. மேலும் ஒரு புதிய பகுதி அலுவலகம் துவக்குவதற்கு குறைந்தபட்சம் 2,500 போக்குவரத்து வாகனங்களும், ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவக்குவதற்கு 7,500 போக்குவரத்து வாகனங்களும் இருப்பது அவசியமாகிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் புதிய பகுதி அலுவலகமோ அல்லது வட்டாரப் போக்குவரத்து அலுவலகமோ அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், இப்பகுதியில் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை வருங்காலங்களில் அதிகரிக்கும்பட்சத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து ஆராயப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம்.*

**திரு. பா. ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகின் அவசியத் தேவை உணவு. நீரின்றி அமையாது உலகு. வேகம் நிறைந்த நம் தமிழ்நாடு அரசு, விவேகத்துடன் நம் தாகம் தீர்க்கும் அரசாக மாறியுள்ளது. இனி வறட்சி இல்லை, பஞ்சம் இல்லை. புதுக்கோட்டைக்கு இனி வறட்சி இல்லை, பஞ்சம் இல்லை, நம் தாகம் தீர்ந்தது. வயிற்றுக்கு பால் வார்த்தீங்கன்னு சொல்லுவாங்க! அதுமட்டுமல்ல, நம் புதுக்கோட்டை மண்ணுக்கு நீர் வார்த்த நம் தாய் வடிவில் வந்த கொங்கு நாட்டுத் தங்கம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், ஜல்லிக்கட்டு நாயகன் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மண்ணின் மைந்தர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களின் முயற்சியால் நீர் வளம், நில வளம் என எல்லா வளங்களும் கிடைத்து விட்டன. இனி நம் புரட்சித் தலைவர் பாணியில் 'என்ன வளம் இல்லை இந்த தமிழ்நாட்டில், என்ன வளர்ச்சி இல்லை அம்மாவின் ஆட்சியில், இனியதோர் வளர்ச்சி பாதையில் புதுக்கோட்டை' என பாடலாம்.*

*முற்பகல் 11–05*

*புதுக்கோட்டையின் 100 ஆண்டு கால கனவு, 40 ஆண்டு காலப் போராட்டம் காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டம்.*

அத்திட்டத்தை இணைத்துக் கொடுத்து, புதுக்கோட்டைக்கு முதல் கட்டமாக ரூ.800 கோடி ஒதுக்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், புதுக்கோட்டை மாவட்டத்தின் மண்ணின் மைந்தர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டையில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பது தொடர்பாக மீண்டும் ஒருமுறை பரிசீலனை செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் செய்து கொடுப்பார்களா எனக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கந்தர்வகோட்டை பகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அந்தப் பகுதிக்கு அருகிலிருக்கிற வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் வாகனங்களினுடைய எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, ஆய்வு செய்து, வாகனங்களினுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்குமாயின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.

**திரு. பா. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில்

*2020 பிப்ரவரி 18]*

*மத்திய அரசாங்கத்தின்மூலம் செயல்படுத்தப்படும்* VAHAN IV software *மூலம் பல்வேறு பணிகள் நடைபெறுவதால் எல்லாப் பணிகளும் மிகவும் காலதாமதமாக நடைபெறுகின்றன என்று போக்குவரத்து வாகனங்களை வைத்திருக்கிறவர்களெல்லாம் சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இந்தப் பணிகள் விரைந்து நடைபெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும். மேலும், வாகனங்களை* loan*-ல் வாங்கினார்களென்றால், மத்திய அரசிடமிருந்து* clearance *வந்தால்தான் அதற்குரிய* entry*-யைப் போட முடிகிறது. குறிப்பிட்ட நேரத்திற்குள் வரவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இதனால் பணிகள் மிகவும் காலதாமதமாக நடக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் போக்குவரத்து வாகனங்களுக்கு விரைந்து உரிமச் சீட்டுகளை* renewal *செய்யும் பணிகளைச் செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், எல்லாப் பகுதிகளிலும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. மேலும்,* petrol, diesel *விலை உயர்வினாலும் வாகனங்களை வைத்திருப்பவர்களெல்லாம் இனிமேல் வாகனமே வேண்டாமென்று சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு வந்தால், அந்த வாகனங்களுக்குத் தேவையான* F.C. *வழங்குவது உள்ளிட்ட பணிகளெல்லாம் விரைந்து நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இன்றைக்கு வாகனங்கள் வைத்திருப்பவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகிற நிலை இருப்பதால், அதனைச் சீர்செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து, மத்திய அரசு* VAHAN IV *என்ற* software*-ஐக் கொண்டு வந்திருக்கிறது என்பது. இந்தியா முழுவதுமுள்ள போக்குவரத்துத் துறை அலுவலகங்களை ஒரு குடையின்கீழ் கொண்டு வருகின்ற அந்த* software*-ஐ* implement *செய்யும்போது, ஒரு சில அலுவலகங்களில் குறைபாடுகள் இருந்தன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த*

[2020 பிப்ரவரி 18

அலுவலகத்தின் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னால், அதைப்பற்றி NIC இடம் எடுத்துச் சொல்லி அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனக்குத் தெரிந்த வரையில், இப்பொழுது எல்லா குறைபாடுகளும் நீக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தற்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு போக்குவரத்துத் துறையில் பணமில்லா பரிவர்த்தனைமூலம் பணிகளைச் செய்யும் முறைகளைக் கொண்டு வந்திருக்கிறது. ஏனென்றால், போக்குவரத்து வாகன உரிமையாளர்களுடைய கால விரயத்தைக் குறைக்க வேண்டும். அவர்கள் போக்குவரத்து அலுவலகங்களில் காத்திருக்கக் கூடாது என்பதற்காகத்தான் பல்வேறு முயற்சிகளை எடுத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அலுவலகத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால், அதிகாரிகளை அனுப்பி, பரிசீலித்து அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**44—**

## இலக்கியப் பயிற்சிப் பட்டறை

***47597—திரு. சு. புகழேந்தி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம், ஈசூர், பூதூர், மோச்சேரி ஆகிய ஊர்களில் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*2020 பிப்ரவரி 18]*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டில் உருவாக்கிய புதுமைத் திட்டம், இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறைத் திட்டம் ஆகும். இருக்கிற இடங்களிலெல்லாம் அமைப்பதற்கு இது தொழில் பட்டறை அல்ல. இது ஒரு பயிற்சிப் பட்டறை. மாணவர்களுக்கு* career guidance *கொடுத்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கிற பட்டறை, இந்தப் பட்டறை. 1,800 மாணவர்கள் இந்தப் பட்டறையில் பயிற்சி பெற்று, அவர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது. தி.மு.க. உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் தங்கள் தொகுதியில் உள்ள மதுராந்தகம், ஈசூர், பூதூர், மோச்சேரி ஆகிய ஊர்களிலிருந்து மாணவர்களை இந்தப் பட்டறைக்கு* refer *செய்தால், அவர்களை திருவரங்கத்திலும், மதுரையிலும், தரமணியிலும் நடைபெறுகின்ற பயிற்சிப் பட்டறைகளில் கண்டிப்பாக இணைத்துக்கொள்ள அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

*முற்பகல் 11–10*

**திரு. சு. புகழேந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 முறை தமிழகத்தை ஆண்ட ஐந்தமிழறிஞர், உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர், கலைஞர் அவர்கள் துயில்கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். இன்றைய தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவர், நாளைய தமிழகத்தின் முதல்வர், முழுமையான* Budget *அளிக்கவிருக்கிற மரியாதைக்குரிய தலைவர் தளபதி அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும், இன்றைய இளைஞர்களின் வழிகாட்டி, வருங்கால இளைஞர்களின் வைப்பு நிதி, மரியாதைக்குரிய உதயநிதி அவர்களையும் வணங்கி, இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவராகிய உங்களுக்கும் என் வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*மொழி என்பது விழியைப் போன்றது. நம்முடைய கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவை ஓர் இனத்தினுடைய அடையாளம். இந்த இனத்தினுடைய அடையாளம், அந்த நாட்டில் இருக்கக்கூடிய இலக்கியங்களில்தான் காணப்படுகிறது.*

அந்த இலக்கியங்களைப் போற்றிப் பாதுகாத்திட வேண்டும். பல இளைஞர்கள் இன்றைக்கு வெவ்வேறு வகைகளில், மாற்று மொழி மோகத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்கு மொழிவழியான இலக்கிய உணர்வை உணர்த்துவதற்குப் பயிற்சிப் பட்டறை என்பது அவசியமானது. நம்முடைய மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோன்று, திருவண்ணாமலை மாவட்டத்தில் கூத்துப் பட்டறைகள் இருக்கின்றன, வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கு தொழில் பட்டறைகள் இருக்கின்றன. அதேபோன்று, தமிழ் உணர்வை வளர்ப்பதற்கு இலக்கியப் பயிற்சிப் பட்டறை உருவாக்கப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கருத்தையொட்டித்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை என்று உருவாக்கி, இன்று 10,000 மாணவர்களில் 200 மாணவர்களை நாங்கள் தேர்ந்தெடுத்து, அந்த மாணவர்களுக்கு ஒரு வாரம் பயிற்சி அளித்துக்கொண்டிருக்கிறோம். இந்தப் பயிற்சியை இந்த ஆண்டிலிருந்து விரிவுபடுத்தி, பல்கலைக்கழகங்களுடன் இணைந்து, அங்கேயே இதைச் செய்வதற்கு, 10 முறை பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்போகிறோம். கண்டிப்பாக, பல அம்சங்கள் இவற்றில் அடங்கியுள்ளன. தமிழ் கணினியியல், தமிழ் computing, தமிழ் மருத்துவம், தமிழர் தொன்மை, கல்வெட்டியல், அறிவியல் தமிழ், ஆட்சி மொழித் தமிழ், பொறியியல், சட்டவியல், வானவியல், இயற்கைச்சூழலியல், உளவியல், பண்பாடு இவை அனைத்தையும் உள்ளடக்கி ஒரு வாரத்தில் அவர்களுக்கு நல்ல வேலை கிடைப்பதற்கு, பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழ் படித்தால் வேலை கிடைக்குமா என்ற கேள்விக்குறி இருந்த காலத்தில், இந்தத் திட்டத்தை அம்மா அவர்கள் உருவாக்கினார்கள். 1,700 மாணவர்கள் இதுவரையில் இதில் படித்து, வேலை கிடைத்து நல்ல உன்னதமான இடத்தில் இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை வரும் Budget–ல் கண்டிப்பாக இன்னும் விரிவாக்கி, பல பல்கலைக்கழகங்களுடன் இணைத்து செய்வதற்கு நன்முயற்சி எடுக்கப்படும் என்று தங்கள் வாயிலாக உறுதிகூறுகிறேன்.

*2020 பிப்ரவரி 18]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

**திரு. சு. புகழேந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் குறிப்பிடுகிறபோது தமிழ் படித்தால் வேலை கிடைக்குமா என்கிற கேள்விக் குறி இருப்பதாகச் சொன்னார். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாகவும், அ.தி.மு.க. ஆளும் கட்சியாகவும் இருந்தாலும், இந்த இயக்கத்தினுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தபோது அண்ணாவைப் பார்த்து பத்திரிகையாளர்கள், கேள்வி கேட்டார்கள், சாதாரண சாமானியனான நீங்கள் எப்படி வெற்றி பெற்றீர்கள் என்று. அதற்கு அண்ணா அவர்கள் 'வாய்மை வென்றது' என்று சொன்னாராம். 'வாய்' என்றால் பேச்சு. 'மை' என்றால் எழுத்து. ஆக வாய்மை வென்றது என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு அந்த வழியில், படித்தால், வேலைவாய்ப்பு கிடைக்குமா என்றால், இலக்கியத்தில் பேச்சுப் போட்டியிலே சிறந்து விளங்கினால், சட்டமன்ற உறுப்பினராகவே ஆக முடியும். இன்றைய மன்றத்தைப் பொறுத்தவரையில். பச்சையப்பன் கல்லூரி மாணவனாக இருந்த புகழேந்தியையும், சட்டக் கல்லூரி மாணவனாக இருந்த திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் என்னுடைய அருமை நண்பர், முனைவர் கோவி. செழியனையும், அன்றைக்கு மாணவர் அணிச் செயலாளராக இருந்த இன்றைய சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மரியாதைக்குரிய அருமை அண்ணன் அவர்கள், எங்களை அடையாளம் கண்டுபிடித்து, தலைவர் கலைஞரிடத்திலும், மரியாதைக்குரிய தளபதியிடத்திலும் அறிமுகப்படுத்தினார்கள். தமிழ்நாட்டில் மக்கள் மன்றத்தில் பேசிக்கொண்டிருந்த எங்களை சட்டமன்றப் பேரவையில் பேச வைத்தது இந்தப் பேச்சுத் திறமை என்பதை நான் சுட்டிக்காட்ட விருப்பப்படுகிறேன். இன்னும் ஒரு செய்தியைச் சொல்கிறேன். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்றில்லாமல், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் உயிரோடு இருந்த நேரத்திலும், இன்றைக்கும் எங்கள் தலைவர் மரியாதைக்குரிய தளபதி அவர்கள், தமிழ்நாடு முழுவதும் ஆட்சியில் இல்லை என்று சொன்னாலும், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி நடத்தி, மாவட்ட அளவில் மாத்திரம் அல்ல, மாநில அளவிலும் ஊக்குவிக்கிறார்கள். எங்கள் கட்சி செய்வதுபோல், இந்த ஆட்சியிலும் செய்யப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் படித்தால் அரசியலுக்கு மட்டுமே செல்ல முடியும் என்ற தத்துவத்தை உணர்த்தியது உங்கள் கட்சி. தமிழ் படித்தால் 16 துறைகளில் வேலை கிடைக்கும் என்ற எண்ணத்தை நாங்கள் உறுதிப்படுத்தியிருக்கிறோம். அதனால்தான் தமிழ்நாட்டில் இந்த 3 ஆண்டுகளில்* B.A. *(தமிழ்)* M.A. *(தமிழ்) படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. அது உங்களுக்கும் தெரியும்.* M.A. *(தமிழ்) படிப்பவர்களுக்கு* Stipend *கொடுத்த அரசாங்கம் அம்மாவின் அரசாங்கம். இதுபோன்ற உதவிகள் செய்யப்படுகின்றன. அதேநேரத்தில் படைப்புத் திறனை மையமாகக் கொண்ட பண்பாட்டுத் தொழில்கள்* Creative and Cultural Industries, *தமிழகத்தில் அதிகமாவதற்கு வித்திட்டதே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். வேலைவாய்ப்பினை உருவாக்கியிருப்பதனால்தான் மருத்துவம், பொறியியல் மற்றும் சட்டம் படித்த 20 சதவிகித மாணவர்கள் இளந்தமிழர் இலக்கியப் பட்டறையில் கலந்துகொள்கிறார்கள். அரசியல் தவிர்த்து மற்ற துறைகளில் நல்ல வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தது அம்மாவின் அரசு. அரசியலை நாங்கள் தொழிலாகப் பார்க்கவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**45—**

### அரசுப் பள்ளி

***43377—திரு. பி.வி. பாரதி:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*2020 பிப்ரவரி 18]*

*சீர்காழி தொகுதி, திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான மேல்நிலைப் பள்ளியை அரசுப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முத்திரை பதித்த 3 ஆண்டு, முதலிடமே அதற்கு சான்று' என்ற இலக்கணத்திற்கு ஏற்ப, தமிழகத்தில் சிறப்பான ஆட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மாவின் அருளாசியோடு இந்த பதிலினை அளிக்கிறேன்.*

*திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலின் நிருவாகத்தின்கீழ் செயல்படும் மேல்நிலைப் பள்ளி தற்போது சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளி 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை அரசு உதவிபெறும் பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகள் மட்டும் சுயநிதி பிரிவாக இயங்கி வருகின்றன. மேல்நிலைப் பள்ளி வகுப்புகளை சுயநிதி முறையிலிருந்து அரசு உதவிபெறும் பிரிவாக மாற்றுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

**திரு. பி.வி. பாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். எங்களுடைய காவேரி டெல்டா பாசன விவசாயிகளுடைய வயிற்றில் பால்வார்த்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், கவர்ச்சித் திட்டங்கள் இல்லாமல், மக்கள் மனம் கவர்ந்த திட்டங்களை அறிமுகப்படுத்திய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயில் அமைந்துள்ள ஊர் என்னுடைய சொந்த ஊர். அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி*

திருக்கோயிலுக்குச் சொந்தமான 3 பள்ளிகள் திருவெண்காட்டிலே செயல்பட்டு வருகின்றன. நான் படித்த மெய்கண்டார் தொடக்கப் பள்ளியும், அதற்குப் பின்னாலே, 1974 ஆம் ஆண்டில் திருக்கோயிலுக்குச் சொந்தமான உயர்நிலைப் பள்ளியும் துவங்கப்பட்டன. 2002 ஆம் ஆண்டு +1, +2 வகுப்புகள் சுயநிதி அதாவது self-finance முறையில் தொடங்கப்பட்டு அது மேல்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டது. நான் அந்தப் பள்ளியிலே உயர்நிலைக் கல்வியைப் பயின்றவன் என்ற முறையிலும், என்னுடைய சொந்த ஊர் என்ற முறையிலும், 1974 ஆம் ஆண்டிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்த அண்ணன் திரு. சம்பத் அவர்கள் எங்களுடைய ஊர்க்காரரர் என்பதாலும், அந்தப் பகுதி மாணவர்கள் உயர் கல்வி பயில்வதற்கு ஏறத்தாழ 20 கி.மீ. செல்ல வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலும், இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றினார்கள். ஆனால், 2002 ஆம் ஆண்டிலே, +1, +2 சுயநிதி முறையில் துவங்கப்பட்டதன் காரணமாக இன்றைக்கு பள்ளி சீர்குலையும் நிலைக்கு வந்துவிட்டது என்பதை மெத்த வருத்தத்துடன் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், 2002 ஆம் ஆண்டு +1, +2 துவங்கப்பட்ட நேரத்திலே அந்தப் பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை 1,072 ஆக இருந்தது. ஆனால், இன்றைக்கு +1, +2 படிக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 26 ஆக உள்ளது. ஆகமொத்தம் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை 166 மாணவர்கள் மட்டுமே படிக்கின்ற ஒரு நிலைக்கு வந்துவிட்டது. நான் சட்டமன்ற உறுப்பினர், அந்த ஊர்க்காரன் என்ற முறையிலே தாங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்திலும், நான் பல்வேறு முறையிலே இந்தக் கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். இந்தப் பள்ளியை அரசு உதவி பெறும் பள்ளியாக மாற்ற வேண்டும் என்பதை இந்த நேரத்தில் மெத்த பணிவன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளியை சுயநிதி பிரிவிலிருந்து அரசு மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு

*2020 பிப்ரவரி 18]*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

**திரு. பி.வி. பாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இன்னொரு கோரிக்கையையும் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமான* S.S.D. Girls High School *1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திருக்கோயிலின் மூலமாக இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் பூம்புகார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெண்கள் உயர்நிலைப் பள்ளியில், 2005 ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ 800 மாணவிகள் படித்துள்ளனர். இப்போது, அந்தப் பள்ளியினுடைய மாணவிகளின் எண்ணிக்கை 293 ஆகும். இந்த* S.S.D. Girls High School*-ஐ அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையானது ஆன்மிகப் பணிகளுடன் சேர்த்து, 6 கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகளையும்; 36 பள்ளிகளையும் மற்றும் ஆன்மிக நெறிகளையும், பண்பாடு மற்றும் சமய கோட்பாடுகளையும், இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கத்தோடு 12 பாடசாலைகளையும் நடத்தி வருகின்றது. திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலின் நிருவாகத்தின்கீழ் செயல்பட்டு வரும் அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளியாக இப்பள்ளியை மாற்றுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு*

எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகரத்தில் செய்யாற்றின் கரையில் அமைந்திருக்கின்ற அனுபாம்பிகை ரிஷிகேஸ்வரர் ஆலயம் என்பது 600 ஆண்டுகள் பழமையான ஆலயம். நான் 2016 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, எனது கன்னிப் பேச்சிலேயே அந்தக் கோயிலை புனரமைத்து, கும்பாபிஷேகம் செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்தேன். இப்போது நான்காவது ஆண்டும் கடந்து கொண்டிருக்கின்றது.மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். சமீபத்தில் பத்திரிகைச் செய்தி ஒன்றைப் பார்த்தேன். ஒன்றுபட்ட வட ஆற்காடு மாவட்டத்தில் 32 ஆலயங்களுக்கு திருப்பணி செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால், அவர் இந்தக் கோயிலை அறிந்தவர். இது 600 ஆண்டுகளுக்கு முந்தைய மிகவும் பழமை வாய்ந்த ஒரு புராதன கோயில்; எனவே, அந்தக் கோயிலை இந்த ஆண்டு சிறப்பினமாகக் கருதி புனரமைப்பதற்கு அரசு முன்வருமானால், அதற்கு நன்கொடை கொடுக்க நன்கொடையாளர்களும் தயாராக இருக்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினரான நான் இதர அனைத்துப் பணிகளிலும் அவரோடு இணைந்து செயல்பட்டு, கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு துணை நிற்பேன். அரசிற்கு எந்தெந்த வழியில் நிதி உதவியைப் பெற்றுத் தர முடியுமோ, அத்தனையையும் பெற்றுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரிலேயே இந்தக் கோயிலைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்வதற்கு சிறப்பு அனுமதியை பெற்றுத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் திருக்கோயிலுக்கு ஏற்கெனவே மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மாவட்ட மண்டல கமிஷ்னர் ஆகியோரின் பரிந்துரைகளை ஏற்று இந்த வருடம் அந்தத் திருக்கோயிலின் குடமுழுக்கை இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் நிதியிலிருந்து மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று விரைவாக அந்தத் திருக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.

**திரு. ஏ. இரத்தினசபாபதி:** பேராண்மைமிக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்று சொல்வார்கள். ஓர் அறிவிப்பு கல்லின் மூலமாக எங்கள் பகுதிக்கு மூன்று திட்டங்களை பெற்றுத் தந்திருக்கின்ற முத்தான மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அதற்கான நிதியை ஒதுக்கித் தந்திருக்கிற மாண்புமிகு துணை முதலமைச்சர், ஜல்லிக்கட்டு நாயகர் அருமை அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், எங்கள் பகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

முற்பகல் 11–25

காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு 7,677 கோடி ரூபாய் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டது. எங்களுடைய மாவட்ட மக்களுடைய நீண்டநாள் கனவாகிய காவேரி–தெற்கு வெள்ளாறு வரையிலான இணைப்புக் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு முதற்கட்டமாக 700 கோடி ரூபாயை எங்களுக்கு வாரி வழங்கியும், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த நெடுவாசல் கிராமத்தை உள்ளடக்கிய சோழ மண்டலத்தினுடைய அனைத்துப் பகுதிகளையும் பாதுகாக்கப்பட்ட விவசாய பகுதியாக அறிவித்ததும், கல்லணைக் கால்வாய் கோட்டத்தினுடைய புனரமைப்பிற்காக 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததில், முதற்கட்டமாக 300 கோடி ரூபாயை ஒதுக்கியும் தந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களுக்கு மீண்டும் மீண்டும் எனது நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வறட்சி மாவட்டத்தினுடைய விவசாயிகளிடம் நீண்ட காலமாகஇருக்கும்வேதனைகளும்,சோதனைகளும்இவ்வளவுதூரம் ஏன் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்றால், நீண்ட காலத்திற்குப் பிறகு தமிழகத்திலே ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து, விவசாயியாக வளர்ந்து, விவசாயியாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுடைய வேதனைகளை அறிந்து, இந்தத் திட்டங்களையெல்லாம் வழங்கி எங்களுக்கு மிகப் பெரிய வாழ்வாதாரத்தைத் தந்திருக்கிறார்கள் என்பதனால்தான் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களையெல்லாம் பெற்றுத் தருவதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி பாராட்டுகிறேன்.

எனது தொகுதியிலுள்ள திருக்கோயில்களில் முக்கியமான திருக்கோயில்களான, அறந்தாங்கி ஒன்றியம், கம்மங்காடு ஊராட்சி, பத்தரசர்கோட்டை சிவன் கோயிலிலும், ஆவுடையார்கோவில் ஒன்றியம், பொன்னமங்கலம் ஊராட்சி, சேமங்கோட்டை திருக்கோயிலிலும், ஆவுடையார்கோவில் ஒன்றியம், பொன்பேத்தி ஊராட்சி, பொன்பேத்தி பெருமாள் கோயிலிலும் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய திருக்கோயில்கள் மிகவும் பழமை வாய்ந்த திருக்கோயில்களாகும். அந்தத் திருக்கோயில்களில் ஏற்கெனவே ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில், மண்டல கமிஷன் பரிந்துரையையும், மாநில கமிஷன் பரிந்துரையையும் ஏற்று, அதற்குரிய மதிப்பீடு தயார் செய்து, நிதி ஆதாரத்தைப் பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, குடமுழுக்கு நடத்த பரிசீலிக்கப்படும் என்பதை

*2020 பிப்ரவரி 18]*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. உரிமை மீறல் பிரச்சினை

### இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது குறித்து மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் 8-1-2020 அன்று தெரிவித்த கருத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உரிமைப் பிரச்சினை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது தொடர்பாக 8-1-2020 அன்று அவையிலே நடைபெற்ற விவாதத்தின்போது, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து குறித்து, அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை பேரவை விதி 219-ன்கீழ், அவையில் எழுப்புவதற்கு அனுமதி கோரி அறிவிப்பு கொடுத்துள்ளார். அவருக்கு நான் அனுமதி வழங்குகிறேன். பேரவை விதி 223-ன்கீழ் பேரவையின் தலையீடு ஏன் அவசியமாகிறது என்பது குறித்து சுருக்கமாக விளக்கமளிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

**திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது 8 ஆம் தேதி நடைபெற்ற விவாதத்தில், இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது என்பது சாத்தியமில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச்சொன்னபோது, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்*

[திரு. தங்கம் தென்னரசு] [2020 பிப்ரவரி 18

குறுக்கிட்டு, 'இல்லை, இல்லை, அது சாத்தியம்தான். இரட்டைக் குடியுரிமை வழங்க முடியும்' என்ற கருத்தை இங்கே தெரிவித்தார். ஆனால், இந்தியக் குடியுரிமைச் சட்டம், 1955-ன் அடிப்படையில் இரட்டைக் குடியுரிமை வழங்கக்கூடிய வாய்ப்பே கிடையாது. அதற்கு சட்டத்திலே இடமே இல்லை என்று பாராளுமன்றத்தில் மத்திய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

*முற்பகல் 11–30*

எனவே, எங்களைப் பொறுத்தமட்டில், இரட்டைக் குடியுரிமை சாத்தியமேயில்லை, சட்டத்தில் இடமில்லை என்று தெரிந்ததற்கு பிறகும், இந்த விஷயத்தில், இலங்கைத் தமிழர்களாக அங்கேயிருந்து இங்கே வந்து—பல்வேறு துயரங்களை அனுபவித்து—அவர்கள் சட்ட விரோதமாக இங்கே குடியிருக்கிறார்கள் என்ற அந்த சட்டத்தை, அந்த விதியை நீக்கி அவர்களுக்கு இந்தியாவிலேயே குடியுரிமை—இப்போதிருக்கக்கூடிய குடியுரிமைச் சட்டத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட வேண்டுமென்பது, இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கையாக இருக்கிறபோது, அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டுமென்று, இல்லாத பூனையை இருட்டு வீட்டிலே தேடிக் கொண்டிருப்பதைப்போல நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே ஒரு தவறான தகவலை இங்கே சொல்லி, அந்தத் தகவலும் நாடாளுமன்றத்திலேயே மத்திய உள் துறை அமைச்சர் அவர்களாலே மறுக்கப்பட்டு, இன்றைக்குத் தெளிவுரை கொடுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, வேண்டுமென்றே, இந்த விஷயங்களெல்லாம் தெரிந்திருந்தும்கூட, இலங்கைத் தமிழர்கள் இங்கே நிரந்தரமாகக் குடியுரிமை பெற்றுவிடக் கூடாது, அவர்களுக்குரிய அந்தப் பலன் அவர்களுக்குக் கிடைத்துவிடக் கூடாது என்ற உள்நோக்கத்தோடு இந்த அவையை தவறாக வழிநடத்தி இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்மீது இந்த அவையில், அவர் தவறான தகவலைக் கொடுத்ததற்கும், தவறாக வழிநடத்தியமைக்கும், அவர், OCI என்று சொல்லக்கூடிய Overseas Citizenship of India என்கின்ற அந்தப் பிரச்சினையையும், இரட்டைக் குடியுரிமையையும் தவறாகப் புரிந்துகொண்டு, அதற்குத் தேவையற்ற பல்வேறு விளக்கங்களைச் சொல்வதாக, இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு, இங்கே வந்திருக்கக்கூடிய தமிழர் நலனுக்கு

*2020 பிப்ரவரி 18]* [திரு. தங்கம் தென்னரசு]

*முற்றிலும் ஊறுவிளைவிக்கக்கூடிய வகையில், அவருடைய விளக்கங்களும், இந்த அவையில் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துகளும் இடம்பெற்றிருக்கக்கூடிய காரணத்தால், பேரவை விதி 219-ன் அடிப்படையில் அவர்மீது உரிய நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இங்கே கேட்டுக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்த அவையின் வேறொரு உறுப்பினர் குறித்த பிரச்சினை என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் விளக்கம் அளிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் தமிழக ஆளுநர் அவர்களால், ஜனவரி 6 ஆம் தேதி அன்று ஆற்றிய உரையில் குறிப்பிடப்பட்ட ஒரு கருத்தைக் குறித்து இந்த விவாதம் தொடங்கியது. கவர்னர் அவர்கள், 13-வது பக்கம், 13-வது பத்தியில், 'இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டுமென தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்தும்' என்ற கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடுத்த இரண்டு நாட்களில் இந்த அவையில் இந்தக் கருத்தை பதிய வைத்தார். தி.மு.க.-வுக்கும், அ.தி.மு.க.-வுக்கும் ஓர் அடிப்படை வித்தியாசம் இருக்கிறது, இலங்கைத் தமிழர் பிரச்சினையில், இலங்கைத் தமிழர்கள் இங்கே அகதிகள் முகாமில் இருக்கிறவர்களுக்கும், அகதிகள் முகாமிற்கு வெளியில் இருக்கும் 32,000 பேருக்கும் இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டுமென்பது கலைஞர் அவர்களுடைய கருத்து, தி.மு.க.-வுடைய கருத்து.*

*ஆனால், அ.தி.மு.க.-வுடைய கருத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அவையில் பதிய வைத்த கருத்து என்னவென்றால், அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டும். அம்மா அவர்கள் ஜூன் மாதம் 2016 ஆம் ஆண்டு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது, இரட்டைக் குடியுரிமை எதற்காக வழங்க வேண்டுமென்பதை அழகாக விளக்கியிருக்கிறார். இங்கே இருப்பவர்கள் எத்தனை பேர்? இந்த* issue*-வுடைய ஆதி, அந்தம் என்ன என்பதை எழுத்து வடிவில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்கு பாரதப் பிரதமரிடம் கொடுத்திருக்கிறார்கள்.*

அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 3 விதமாக இலங்கைத் தமிழர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். நீங்கள் சொன்ன அந்தக் குழப்பம் என்ன என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். 1964–ல் முதல் முறையாக வந்தனர். 1974–ல் இந்தியா–இலங்கை ஒப்பந்தம் போடப்பட்டு, அதில் 9,75,000 தமிழர்கள் நாடற்றவர்களாக, no State or Stateless என்று அங்கே classify செய்யப்பட்டு, அதில் 6 இலட்சம் பேரை இந்தியா ஏற்றுக்கொள்ளும். 3,75,000 பேருக்கு இலங்கை, குடியுரிமை தரும் என்று ஒப்பந்தம் போடப்பட்டது. அதற்குப் பிறகு, 1983–ல் உள்நாட்டு கலவரம் வெடிக்கும்வரை 4,61,432 பேருக்கு இந்தியா குடியுரிமை வழங்கியிருக்கிறது. இதையும் அதே உள் துறை அமைச்சர் அதே பேச்சில் எடுத்துச் சொல்லியிருக்கிறார். பாராளுமன்றத்தில் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களின் கேள்விக்கு பதில் கொடுத்திருந்த உள் துறை அமைச்சர் தெளிவாக அதைச் சொல்லியிருக்கிறார். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதை எடுத்துச் சொன்னார்கள் என்றால், camp–ல் வந்தவர்கள், இப்பொழுது இருப்பவர்கள் எத்தனை பேர்? 113 camps முதலில் இருந்தன, இப்பொழுது 107 camps இருக்கின்றன. அந்த 107 camps–ல் இருக்கிற அகதிகள் refugees என்று classify செய்யப்பட்டவர்கள். இதில் பெரிய குழப்பம் எதில் வருகிறது என்றால், Refugees என்றால் என்ன, Repatriates என்றால் என்ன என்பதில்தான். இதற்கு High court இப்பொழுது தீர்வு வழங்கியிருக்கிறது. சென்ற ஜூன் மாதம் கோட்டப்பட்டு camp–ல் போட்ட case–ல், அதற்கான விளக்கத்தை ரொம்ப அழகாக Judge தீர்ப்பில் கொடுத்திருக்கிறார்.

முற்பகல் 11–35

மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன முதல் கருத்து 4,61,432 பேருக்கு நாம் இங்கே குடியுரிமை தந்திருக்கிறோம். அதிலே ஒரு gap இருக்கிறது என்பதுதான் இவர்களுடைய கோரிக்கை. டாக்டர் இளம்பரிதி அவர்களை specific ஆக quote செய்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். டாக்டர் இளம்பரிதி ஓர் ஆராய்ச்சியாளர். அவர் அகதிகள் முகாம்களுக்குச் சென்று பார்த்து, அகதிகள் முகாம்களில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், வெளியே எவ்வளவு பேர் இருக்கிறார்கள்; இதில் claim என்னவென்றால், அந்த 4,61,432 பேருக்கு நீங்கள் குடியுரிமை வழங்கியிருக்கிறீர்கள்; அதிலே இன்னும் 1,39,000 பேருக்கு gap இருக்கிறது. முகாமுக்குள் இருக்கின்ற மற்றும் வெளியே இருக்கின்றவர்களையும் சேர்த்து அனைவருக்கும் இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. அகதிகள் முகாம்களிலும்,

2020 பிப்ரவரி 18] [திரு. க. பாண்டியராஜன்]

வெளியிலும் இருப்பவர்களுக்காக டாக்டர் இளம்பரிதி அவர்கள் வைக்கின்ற கோரிக்கை இதுதான்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இலங்கைக் குடியுரிமையை இழந்து இந்தியக் குடியுரிமையை அவர்கள் பெறுவது என்பது, அவர்கள் தங்கள் சொத்து, சுகங்களை மீட்டெடுப்பதற்கான வாய்ப்பே இல்லை என்றாகிவிடும் என்பதுதான். அ.தி.மு.க.–வின் கருத்தும் அதுதான். அகதிகளாக இங்கு வந்த ஒரு இலட்சம் பேர்களில் camp–ல் தற்பொழுது இருப்பவர்கள் 59,000 பேர்தான். United Nations High Commissioner for Refugees மூலமாக 10,000 பேர் அங்கே திரும்பிச் சென்றிருக்கிறார்கள். மீண்டும் வந்து, இங்கிருந்து பல நாடுகளுக்குச் சென்றவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் சேர்த்துதான் 40,000 பேர்; இதுதான் அந்த அகதிகள் முகாம்களில் எண்ணிக்கை குறைந்திருப்பதற்குக் காரணம். இன்னொன்று, அகதிகள் முகாம்களில் அவர்களுக்கான அனைத்தையும் செய்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். பாராளுமன்றத்தில் தொடுத்த கேள்விக்கு என்ன பதில் சொல்லியிருக்கிறார்கள் என்றால், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. மோடி அவர்கள், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் என்ன காரணம் என்று கேட்டிருந்தார். அதற்கு விளக்கம் சொல்வதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதிலே குறுக்கிட்டுப் பேசுவதற்கு யாருக்கும் வாய்ப்பு இல்லை. அமைதியாக இருங்கள். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், அவர்கள் அந்த இடத்திற்குப் போய் குடியேறி, தங்களுடைய சொத்து சுகங்களை மீட்டெடுக்கும் வாய்ப்பை உருவாக்குவதற்காக, 50,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக, அம்மா அவர்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக ரூ.1,372 கோடி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் முடிவு செய்து, அங்கு

[திரு. க. பாண்டியராஜன்] [2020 பிப்ரவரி 18

நேரில் சென்று 46,000 வீடுகளைத் திறந்து வைத்தார். அதேபோல, அவர்களுக்கு என்னென்ன செய்திருக்கிறோம் என்பதையெல்லாம் பட்டியலிட்டுச் சொல்லி, மேலும் என்ன சொன்னார்களென்றால், அந்த இடத்தில் இருக்கின்ற வசதியும், வாய்ப்பும் மீண்டும் வரும்பொழுது, இங்கே இருப்பவர்கள் அங்கே சென்று தங்களது குடியுரிமையை மீட்டெடுத்து அங்கு போக வேண்டும் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டாவதாக, அகதிகளாக வருபவர்கள் வேறு; Repatriates ஆக வருபவர்கள் வேறு. தாயகம் திரும்புபவர்கள் என்பதற்கு தனி classification. நீதிமன்றத்தில் கடந்த 2019, ஜூன் மாதம், திருச்சி மாவட்டம், கோட்டப்பட்டு என்ற இடத்தில் உள்ள 68 முகாம்களில் உள்ளவர்கள் தொடுத்த வழக்கில் மாண்பமை நீதிபதி இதற்குத் தெளிவாக விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். இதற்கான முழு authority மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. இந்த வழக்கில் மத்திய அரசாங்கம் முடிவெடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு direction கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் Repatriates-ஆ அல்லது Refugees-ஆ என்று classification செய்ய வேண்டியது மத்திய அரசாங்கத்தின் முழு ஆளுகைக்குட்பட்ட ஒரு விஷயம். அதையும் மாண்பமை நீதிபதி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

நாங்கள், அ.தி.மு.க.-ல் என்ன கேட்கிறோம் என்றால், அம்மா அவர்களின் வார்த்தைகளில் சொல்லப்போனால், அவர்கள் இங்கே business செய்வதற்கும், அவர்களுக்கு இங்கே வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும் அவர்களுக்கு என்ன குடியுரிமை தேவைப்படுமோ அதையும் தாருங்கள் என்பதுதான். அதிலும் இரண்டு classifications இருக்கின்றன. ஒன்று dual citizenship; அங்கேயும் ஓட்டு போடலாம்; இங்கேயும் ஓட்டு போடலாம் என்பது dual citizenship. *(குறுக்கீடு)* முடித்துக்கொள்கிறேன். இரண்டாவது, ஒரே citizenship; citizen of India. *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியாதது இல்லை. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் அவை உரிமை மீறல் பிரச்சினை தொடர்பாகக் கேட்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. *(குறுக்கீடு)* நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* உரிமை மீறல் பிரச்சினையில் அறிவிப்பு

*2020 பிப்ரவரி 18]* [பேரவைத் தலைவர்]

*கொடுத்த உறுப்பினருக்குத்தான் நான் பேசுவதற்கு அனுமதி அளித்திருக்கிறேன். அனுமதிக்கப்பட்டவர் பேசி முடித்துவிட்டார். அதன் மீதான விளக்கம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உரிமை மீறல் பிரச்சினைக் குறித்து கேட்டிருந்தீர்கள். அது பற்றிப் பேச உங்கள் உறுப்பினருக்கு அனுமதி கொடுத்தேன். ஏன் என்பதற்கு காரண, காரியங்களை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் கேள்வி எழுப்பிய காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்ல நான் அழைத்திருக்கிறேன். அவர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவ்வளவுதானேயொழிய, குறுக்கே இதிலே யாருடைய விளக்கமோ,* point of order*-ஓ ஒன்றும் வராது. (குறுக்கீடு) இல்லை, இல்லை, இதற்கு மேலே எதுவுமே வராது. நான் அனுமதிக்க முடியாது. அவர் பதில் சொன்னதற்குப் பிறகு நான் தீர்ப்பு சொல்வேன். அவ்வளவுதான். இது இவ்வளவுதான். இதற்கு மேற்கொண்டு வாய்ப்பு இல்லை. மாண்புமிகு அமைச்சர் விளக்கத்தை முடிக்கவும்.*

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு திரு. க பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் இந்த நிகழ்ச்சி நடந்த அடுத்த நாள் இலங்கை வட மாகாணத்தின் முன்னாள் முதல்வர்* Justice C.V. *விக்னேஸ்வரன் அவர்கள், தமிழகத்திற்கு வந்து தமிழகத்தின் நிலைப்பாடு, அரசினுடைய நிலைப்பாடு என்பது மிகவும் சரியானது என்று தெளிவாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். தமிழகத்தின் நிலைப்பாடு, இரட்டைக் குடியுரிமை சார்ந்த நிலைப்பாடு. இதே இடத்திற்கு வந்து திரு.* C.V. *விக்னேஸ்வரன் சொல்லியிருக்கிறார். அதே திரு. இளம்பரிதி அவர்கள் எங்களுடைய நிலைப்பாட்டை அங்கீகரித்து அறிக்கை விட்டிருக்கிறார். எங்களைப் பொறுத்தவரைக்கும் கண்டிப்பாக இரட்டைக் குடியுரிமை என்பதன்மூலம்* OCI*-ல் கிடைக்கிற அதே வசதிகள் கிடைக்கும்.* OCI*-யைப் பொறுத்தவரையிலும் இங்கே ஓட்டு போட முடியாது. ஆனால்,இங்கேவந்துசிலசொத்துக்களைவாங்கலாம்.வேலைவாய்ப்பு கிடைக்கும்;* Private Sector*-ல் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். இந்தக் கேள்விக்கு திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். 2 இலட்சம் பேர்களுக்கு* OCI–Overseas Citizenship of India *1984 ஆம்*

[திரு. க. பாண்டியராஜன்] [2020 பிப்ரவரி 18

ஆண்டிலிருந்து இன்று வரை அளிக்கப்பட்டிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் அங்கிருக்கிறவர்கள் OCI மூலமாக அவர்கள் ஏற்கெனவே பெற்றிருக்கிறார்கள். இன்னும் பெறுவதற்குத் தடைகள் இல்லை. ஆனால், Refugees-ஆ அல்லது Repatriates-ஆ என்று classify செய்வதில் கேள்வி இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் திரு. அமித்ஷா அவர்களைச் சந்தித்து, இதுதொடர்பாக கோரிக்கை விடுத்திருக்கிறார். வெளிப்படையாக, பகட்டான வார்த்தைகளால் பேசாமல் இலங்கைத் தமிழர்களுக்கு நல்லது செய்கிற அரசாங்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் பொறுத்தவரைக்கும், எவ்வளவு quiet ஆக இவ்வளவு சாதித்திருக்கிறோம். இன்றைக்கு திரு. C.V. விக்னேஸ்வரன் அவர்கள் தமிழகம் வந்து அரசாங்கத்தினுடைய நிலைப்பாடு சரியானது என்றும், அவர்களை எப்படி நீங்கள் அண்ணன் தம்பிகளாக treat செய்து எல்லா விஷயங்களையும் செய்து கொடுக்கிறீர்கள் என்பதிலிருந்து அவர்கள் smooth ஆக அங்கே போவதற்கு வரை எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தீர்கள் என்று தெரிவித்துள்ளார்கள். 90,000 விதவைத் தாய்கள் அங்கே இருப்பவர்களுக்கு சேவா மூலமாகப் பயிற்சியளித்து, அவர்களுக்கு மிக, மிக முக்கியமான வாழ்வாதாரத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. தமிழக அரசாங்கம் கொடுத்த அழுத்தத்தினால் மத்திய அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் செய்து கொண்டிருப்பதனால்தான், இங்கே பாருங்கள் நாங்கள் செய்தது இது, நீங்கள் என்ன செய்தீர்கள்? முள்ளிவாய்க்கால் மறந்து விட்டதா? (குறுக்கீடுகள்) முள்ளிவாய்க்காலில், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், விளக்கத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** நீங்கள் எடுத்த நிலைப்பாடோ, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நிலைப்பாடோ, அண்ணன் எடப்பாடியார் அவர்கள் எடுத்த நிலைப்பாடோ எந்தத் தவறும் கிடையாது. இரட்டைக் குடியுரிமை என்பதற்கு interpretation இருக்கிறது. அந்த interpretation-ல் ஒன்று ஒரு பக்கம் அவர்களுக்கு குடியுரிமை,

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள், உட்காருங்கள்.

*2020 பிப்ரவரி 18]*

**மாண்புமிகு திரு. க பாண்டியராஜன்:** *இங்கே வந்து அவர்களுக்கு* OCI *கொடுப்பதற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது. நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள், (குறுக்கீடு) இருங்கள், உட்காருங்கள். அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்களால் ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டு, அதுகுறித்து சம்பந்தப்பட்ட வேறோர் உறுப்பினரான மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் அளித்ததற்குப் பின்னால், இதில் எவ்வித அவை உரிமை மீறலும் இல்லையென்று தீர்ப்பு வழங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

*இல்லை, இல்லை (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது உங்களுடைய உரிமை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மைக் கொடுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மைக் கொடுத்தாகிவிட்டது.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமை பிரச்சினையிலே இரண்டுதான். ஒன்று உரிமை மீறல் உண்டா, இரட்டைக் குடியுரிமையா, . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் அதைப்பற்றி விளக்கம் சொல்ல முடியாது. நான் ஒரு தீர்ப்பு சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் ஒரு தீர்ப்பு சொல்லிவிட்டேன். அந்தத் தீர்ப்பின் மேலே நீங்கள் மேற்கொண்டு எதுவும் பேச முடியாது. வேறு ஏதாவது பிரச்சினை சொல்வதாக இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) வேறு பிரச்சினை ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

*முற்பகல் 11–45*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் உரைத்த தீர்ப்பின்மீது நான் எந்தக் கருத்தையும்*

சொல்லமாட்டேன். தங்களுடைய தீர்ப்புதான் இறுதியானது என்பதை நான் அறிவேன். ஏனென்று கேட்டால் இன்னும் பல தீர்ப்புகளை நீங்கள் சொல்லப் போகிறீர்கள். ஆகையினால் நாங்கள் இப்போது வெளிநடப்புச் செய்யப் போகிறோம். ஆனால், என்ன சொல்லிவிட்டுப் போகிறோம் என்று கேட்டால், இரட்டைக் குடியுரிமை கொடுக்க முடியாது என்று மத்திய சர்க்கார் சொல்கிறது. அவர்கள்தான் கொடுக்கிறவர்கள். ஆகையால், இவரால் அது முடியாது. ஆனால், அதைத் திசைதிருப்புவதற்காக ஒரு சவாலாகச் சொல்லியிருக்கிறார். எனவே, அதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

## 3. வரவு–செலவுத் திட்டம், 2020–2021, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2020–2021 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரை வணங்குகின்றேன். பேரறிஞர் அண்ணாவை வணங்குகின்றேன். எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் வாழ்கின்ற இந்திய துணைக் கண்டம் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு. திராவிட இயக்க அரசியலின் அடிப்படையான சமூக நீதி மற்றும் மதச் சார்பின்மை ஆகிய இந்தக் கோட்பாடுகள் இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்தை ஆளுகின்ற மத்திய பா.ஜ.க. அரசால் மிகப் பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. எந்தச் சூழ்நிலையிலும் அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள இந்தியா ஒரு சமத்துவ, மதச் சார்பற்ற, குடியுரிமை பெற்ற நாடு என்ற அடிப்படை கோட்பாட்டில்,எள்ளளவு சேதாரமும் வரவிட மாட்டோம். அதுபோன்று, இன்றைக்கு மதத்தின் அடிப்படையில் குடியுரிமை சட்டத் திருத்தம் கொண்டு

2020 பிப்ரவரி 18] [திரு. த. மனோ தங்கராஜ்]

வருவதைத் தடுத்து நிறுத்துவோம். தமிழக சட்டமன்றத்திலும் CAA, NPR, NRC ஆகியவற்றிற்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வலுவாக வைக்க விரும்புகிறேன். தமிழகத்தில் மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டத்தில் வாழ்கின்ற அனைத்து மக்களுடைய பேராதரவைப் பெற்று, தமிழகத்தின் ஒப்பற்றத் தலைவராக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அன்புக்குரிய தளபதியார் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியோடு நான் இந்த நேரத்தில் வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. நேற்றையதினம், நிதிநிலை அறிக்கையில் பொது நிதி மேலாண்மை கோணத்திலிருந்து எங்களின் இயக்கத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் P.T.R. அவர்கள் அழகாக கருத்துகளை எடுத்து வைத்தார்கள். இன்றைக்கு ஒரு சாமானியனுடைய பார்வையில் இந்த நிதிநிலை அறிக்கை எப்படியிருக்கிறது என்பதை நான் பார்க்கின்ற நேரத்தில், ஏழை, நடுத்தர மக்களினுடைய வாழ்வை இலகுவாக்குகின்ற, அவர்களுடைய வருமானத்தை பெருக்குகின்ற திட்டங்கள் இல்லை என்பது வேதனையைத் தருகிறது. தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான குறு, சிறு தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து இருக்கிறார்கள். அவற்றைத் திறக்க, வேலைவாய்ப்பை அளிக்க எந்த முக்கியமான அறிவிப்பும் இல்லாதது, உண்மையிலேயே நாம் தீவிரமாகப் பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவில் பொருளாதார மந்தநிலை என்றிருந்தாலும், தொழில் முதலீடு செய்கின்ற மாநிலமாகத்தான் தமிழ்நாடு இருந்து கொண்டிருக்கிறது. Recent ஆக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் CEAT நிறுவனம் ரூ.4,000 கோடியில் மதுரமங்கலத்தில் திறக்கப்பட்டது. அதற்கு முன்பு Ford-னுடைய R&D System, சிறுசேரியில் 1,500 கோடி ரூபாயில் திறக்கப்பட்டிருக்கின்றது. மேலும், Foxconn நிறுவனத்தில் 20,000

[திரு. எம்.சி. சம்பத்] [2020 பிப்ரவரி 18

பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. Nokia–ல் Salcomp நிறுவனம் வருகிறது. Salcomp–ல் கிட்டத்தட்ட 20,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எந்தத் தொழிற்சாலையும் மூடப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தூத்துக்குடியில் Al–Kharafi என்ற ஒரு நிறுவனம் 49,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வந்திருக்கிறது. Haldia Petrochemicals 50,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் facilitation MoU போட்டிருக்கிறது. தொழிற்சாலைகள் மூடப்பட்டன, மூடப்பட்டன என்று சொல்வது உண்மைக்கு மாறான தகவல் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எந்தத் தொழிற்சாலையும் மூடப்படவில்லை. நோக்கியா நிறுவனம் உங்கள் ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டது. இப்பொழுது திறக்கப்பட்டிருக்கிறது. Salcomp நிறுவனம் வந்திருக்கிறது. (குறுக்கீடு) நோக்கியா நிறுவனத்தில் Income tax problem உங்கள் ஆட்சிக் காலத்தில்தான் வந்தது. Retrospective effect என்பதால் மூடப்பட்டது. மூடப்பட்ட தொழிற்சாலையைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். Salcomp நிறுவனத்தில் கிட்டத்தட்ட 20,000 பேருக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது. தொழிற்சாலைகள் மூடப்பட்டன, மூடப்பட்டன என்று சொல்வது உண்மைக்கு மாறான தகவல் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம்பொதுவாக MSME மூடப்பட்டன என்ற தவறான செய்தியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பொருளாதார நிலை மாற்றங்கள் உள்ளிட்ட அத்தனை சவால்களையும், போட்டி சூழலையும் எதிர்கொள்ள ஏதுவான வகையிலும், அவற்றின் நீடித்த நிலையான வளர்ச்சியை உறுதிசெய்வதற்கு ஏதுவான வகையிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்பேரில்

2020 பிப்ரவரி 18] [திரு. பா. பென்ஜமின்]

மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு புதிய திட்டங்களையும், முன்னோடி நடவடிக்கைகளையும் தொடர்ந்து உருவாக்கி வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. தொழில் துறை வளர்ச்சிக்காக உலக தொழில் முதலீட்டாளர்களின் இரண்டாவது மாநாடு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான தொழில் சூழலையும், ease of doing business-ஐயும் மேம்படுத்துவதற்காக புதிய ஒருங்கிணைந்த இணையவழி ஒற்றைச் சாளர தகவல் (single window portal), புதிய start up கொள்கை உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. 36 புதிய தொழிற்பேட்டைகள் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுப் பணிகள், தனியார் தொழிற்பேட்டைகளை ஊக்குவிக்க உட்கட்டமைப்பு மானியங்கள், குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான பொது வசதி மையங்கள், மாநில அரசின் சொந்த நிதியின்கீழ் micro cluster திட்டம் என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு மேற்கொண்டு வருகிறது. மேலும், தொழில்முனைவோருக்கான பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க புதிய அமைப்பினை உருவாக்குவது என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முன்னேற்றத்திற்கான பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு மேற்கொண்டு வருகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்குத் தேவையான ஊக்கத்தை அளித்திடும் வகையில் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2018 ஆம் ஆண்டு 30 இலட்சம் ரூபாய் என்று உயர்த்தப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை, 2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். முதலீட்டு மானிய வரம்பு 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மானியம் பெறுவதற்கான அனைத்து நடைமுறைகளும் தற்போது இணையம் வாயிலாக

[திரு. பா. பென்ஜமின்] [2020 பிப்ரவரி 18

மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வித தேக்கமுமின்றி உடனுக்குடன் மானியங்கள் வழங்குவது உள்ளிட்ட புதிய நடைமுறைகள்மூலம் பல்வேறு மானியத் திட்டங்களின் செயலாக்கத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு மேற்கொண்டு வருகிறது. இந்த நிதியாண்டு மட்டும் 1-4-2019 முதல் 31-12-2019 வரையிலான காலத்தில் 1,580 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் 115 கோடியே 23 இலட்சம் ரூபாய் மூலதன மானியமும், 194 தொழில்முனைவோர்களுக்கு 44 இலட்சம் ரூபாய் பின்முனை வட்டி மானியமும், 645 தொழில்முனைவோர்களுக்கு 4 கோடியே 48 இலட்சம் ரூபாய் குறைந்தழுத்த மின் மானியமும், 138 தொழில்முனைவோர்களுக்கு 74 இலட்சம் ரூபாய் மின்னாக்கி மானியமும் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். இதன்விளைவாக 1-4-2019 முதல் 31-12-2019 வரையிலான காலத்தில் 3,00,542 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது என்பதையும், 32,205 கோடியே 75 இலட்சம் ரூபாய் முதலீட்டில் மொத்தம் 4,824 புதிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தொடங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி குறித்த விமர்சனங்கள் அடிப்படை ஆதாரமற்றவை என்பதையும், தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தொடர்ந்து நீடித்த வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் பேசுங்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய இலட்சோப இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் விளைவிக்கக்கூடிய பொருட்களுக்கு அவர்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனவே, உற்பத்திச் செலவைக் கணக்கில்கொண்டு அவர்களுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். நாங்களும் வலியுறுத்தி வருகின்றோம். இந்த நிதிநிலை அறிக்கையில்கூட முக்கியப்

*2020 பிப்ரவரி 18]* [திரு. த. மனோ தங்கராஜ்]

பொருட்களான கரும்பு, நெல் போன்றவற்றிற்கான அடிப்படை விலை நிர்ணயிக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-55*

நம் மாநிலத்தினுடைய கடன் 4 இலட்சத்து 56 ஆயிரம் கோடி ரூபாய்; இது நம்முடைய உள்நாட்டு உற்பத்தியில் 25 சதவிகிதமாக இருக்கிறது; இது உச்சவரம்பிற்குக் கீழேதான் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அதைப்போன்று, நிதிப் பற்றாக்குறை 59 ஆயிரத்து 346 கோடி ரூபாய்; அதுவும் 3 சதவிகிதம் என்ற உச்சவரம்பிற்குள்ளேதான் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். நாம் ஒரு மருத்துவரைச் சந்திக்கின்றோம். அவர், உங்களுக்கு சர்க்கரை நோய் வந்துள்ளது, சர்க்கரையின் அளவு border line-ஐ தாண்டிவிட்டது என்று சொல்கிறார். நாம் நேரே வீட்டிற்குச் சென்று, சர்க்கரையின் அளவு border line-ஐத்தான் தாண்டியிருக்கிறது, உச்சவரம்பு வரும் வரை பொறுமையாக இருப்போம் என்று இருப்பதுண்டா? இல்லை. நாம் உடனடியாக மருத்துவம் செய்து, சர்க்கரையின் அளவை border line-க்குக் கீழே கொண்டு செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றோம். நாங்கள் ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலே, இந்த அரசினுடைய நிதி நிலைமையில், இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் இருப்பது நிச்சயமாக நிதி நெருக்கடியில் கொண்டு சென்று சேர்த்துவிடும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம். எனவே, நீங்கள் அதனைப் பரிசீலனை செய்யுங்கள் என்ற உணர்வோடுதான் நாங்கள் அதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

அதைப்போன்று, வருவாய்ப் பற்றாக்குறை 14,315 கோடி ரூபாயாக இருக்கும் என்று திட்டமிடப்பட்டது. ஆனால், 25,072 கோடி ரூபாயை எட்டியுள்ளது. இது கணிக்கப்பட்ட தொகையைவிட சுமார் 80 சதவிகிதம் அதிகமான தொகையாகும். இதற்கு வருவாய் வரவினங்களில் ஏற்பட்ட சரிவும், வருவாய்ச் செலவினங்கள் அதிகரிப்பும் காரணம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இதைப் பார்க்கின்றபோது, நிதி மேலாண்மையில் இன்னும் திறம்பட செயல்பட வேண்டிய தேவை இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. இன்றைக்கு, வருவாய் வரவினங்களை, செலவினங்களைப் பொறுத்தவரையில், கடன்களுக்கான வட்டியாக மட்டும் நம் வருவாயில் 6-ல் ஒரு பங்கை செலுத்தி வருகிறோம். அரசு

[திரு. த. மனோ தங்கராஜ்] [2020 பிப்ரவரி 18

ஊழியர்களின் ஊதியங்கள், ஓய்வூதியங்கள் ஆகியவை 96 ஆயிரம் கோடி ரூபாய்க்கு சென்று கொண்டிருக்கிறது. வருவாய் செலவினங்கள் வரிசையில் 2 இலட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாயும், மூலதனச் செலவிற்கு மொத்தம் 36 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே செலவழிக்கப்படுகிறது. இது 13 சதவிகித செலவை உள்ளடக்கியது. அப்படியானால், நம்முடைய மொத்த வருவாய் வரவில் 13 சதவிகிதத்தை மட்டுமே மூலதனத்திற்காக நாம் செலவழித்தால், இதர வருவாய்களை நாம் எப்படிப் பெருக்க முடியும்? இன்றைக்கு வருவாய் வரி இல்லாத வளங்களைத் திரட்ட எந்த முன்முயற்சியும் எடுக்கப்படாததற்கு, நமக்கு இயற்கையாகக் கிடைக்கக்கூடிய கச்சாப் பொருட்கள் மற்றும் இயற்கை வளங்கள் போன்றவற்றைக் குறைந்த வருவாய்க்கு அரசு கொடுத்து விடுவதுதான் காரணம் என்கின்ற ஒரு எண்ணம் இந்த வருவாய் வரவினங்களைப் பார்க்கின்றபோது தெரிகிறது.

அதுமட்டுமல்ல, தற்போது மத்திய அரசு பல வழிகளில் நம்மை வஞ்சித்து வருகிறது என்று திராவிட முன்னேற்றக் கழகம் பட்டியலிட்டு சொல்லிக் கொண்டிருக்கிறது. தற்போது, நிதிநிலை அறிக்கையில்கூட, 14–வது நிதிக் குழு, மானியத்தில் வர வேண்டிய 2 ஆயிரம் கோடி ரூபாய் பாக்கித் தொகை, 2017–2018 மற்றும் 2018–2019 ஆம் ஆண்டுகளுக்கான உள்ளாட்சித் துறையில் செயல்முறை மானியம் மற்றும் உள்ளாட்சி அடிப்படை நிதி 7 ஆயிரத்து 825 கோடி ரூபாய், GST நிலுவைத் தொகை 12,263 கோடி ரூபாய், GST இழப்பீடு 940 கோடி ரூபாய், சென்னை நிரந்தர வெள்ளத் தடுப்பிற்கு பிரதமர் மோடி அவர்கள் தருவதாக அறிவித்த 7 ஆயிரம் கோடி ரூபாய் என 30,028 கோடி ரூபாய் மத்திய அரசு நமக்குத் தர வேண்டிய நிதி பாக்கி இருக்கிறது.

அதைப்போன்று, நாம் திருப்பியனுப்பிய தொகை— அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் ரூ.1,627 கோடி ரூபாய் திருப்பியனுப்பப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், நிலம் கையகப்படுத்துவதில் தாமதம், ஒப்பந்தப்புள்ளிகள் தாமதம் போன்றவற்றால் 1,022 கோடி ரூபாய் திருப்பியனுப்பப்பட்டுள்ளது. அதேபோன்று, நவீன நீர்ப்பாசன மேலாண்மைத் திட்டத்தில் 1,729 கோடி ரூபாய், புயலால் பாதிப்பிற்குள்ளாகும் இடங்களில், புயல் அடித்தால்கூட அங்கிருக்கக்கூடிய மக்களுக்கு மின்சார இணைப்பு பாதிக்கக்கூடாத வகையில், அவர்களுக்கு மின்சாரக் கம்பிகள் போடுவதற்காக வழங்கப்பட்ட 5,821 கோடி ரூபாய், குடிநீர்த் திட்டங்களுக்கான

*2020 பிப்ரவரி 18]* [திரு. த. மனோ தங்கராஜ்]

*2,064 கோடி ரூபாய், சாலை, மேம்பாலத் திட்டங்களுக்கான 2,034 கோடி ரூபாய் உள்ளிட்ட மொத்தம் 28,179 கோடி ரூபாய் கடந்த காலங்களில் திருப்பியனுப்பப்பட்டுள்ளன.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தாரக மந்திரங்களில் ஒன்று 'அமைதி'. உண்மையிலேயே நீங்கள் அமைதியாக இருக்கின்றீர்கள். மத்திய அரசு எந்தத் தவறிழைத்தாலும், எந்த அநீதி இழைத்தாலும் நீங்கள் அமைதியாக இருக்கின்றீர்கள்; நாங்கள் பாராட்டுகின்றோம். அதுபோன்று மத்திய அரசும் உங்களிடத்திலே பாசமாக இருக்கின்றது.*

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினராக இங்கே அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள், இப்போது பேசிய உறுப்பினர் ஆகியோர், 'எப்பொழுதுமே மத்திய அரசு கொண்டு வருகின்ற சட்டங்கள், திட்டங்கள் எதையுமே நீங்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள், பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், எதையுமே தட்டிக் கேட்க மாட்டேன் என்கிறீர்கள்' என்கின்ற ஒரு குற்றச்சாட்டை இந்த அவையிலே தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி நதி நீர் ஆணையத்தை அமைக்கின்றபோது, ஆணையம் அமைப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்காமல் காலதாமதம் செய்த நேரத்தில், நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைத் தலைமையேற்று நடத்துகின்ற அண்ணன் எடப்பாடியார் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசை எதிர்த்து, நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடுத்தவர் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில், 16½ ஆண்டுக் காலம் மத்தியிலே கேபினெட் மந்திரிகளாக அங்கம் வகித்து திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து கோலோச்சி வந்ததை இந்த நாடு அறியும். இந்த 16½ ஆண்டுக் காலத்தில் நீங்கள் மத்திய அரசிடத்திலே எதைக் கேட்டு பெற்றீர்கள்? மாநில அரசுக்கு விரோதமான பல*

காரியங்கள் நடைபெற்றன. எந்தச் சட்டத்தை நீங்கள் தடுத்து நிறுத்தினீர்கள்? உதாரணத்திற்கு, காவேரி நடுவர் மன்றத்திலே அன்றைக்குத் தீர்ப்பு வந்தது. அன்றைக்கு நீங்கள்தான் மத்திய ஆட்சியுடன் கூட்டணியில் இருந்தீர்கள். எப்பொழுதாவது அதை அரசிதழிலே வெளியிட வேண்டும் என்று வற்புறுத்தினீர்களா? கேட்டுப் பெற்றீர்களா? எங்களுடைய முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து அந்தத் தீர்ப்பைப் பெற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னால், ஆணையம் அமைப்பதற்கு மத்திய அரசு காரணங்களைச் சொல்லிக்கொண்டே இருந்தது. அதற்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்தான் நீதிமன்றத்திலே தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி, வெற்றி பெற்றுக் கொடுத்தாரே தவிர, நீங்கள் அதை வற்புறுத்தினீர்களா, கேட்டீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இன்றைக்கு வேகமாகப் பேசுகிறீர்கள். மாநில சுயாட்சி குறித்து ஓங்கி ஒலிக்கிறீர்கள். நீங்கள் மத்திய ஆட்சியிலே அங்கம் வகித்த காலத்திலேதான் கல்வி, மாநில பட்டியலிலிருந்து மத்திய பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அதை என்றைக்காவது நீங்கள் பேசியிருக்கிறீர்களா? அதுமட்டுமல்ல, சிறு வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடு என்கிற சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தபோது (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? செயற்குழுவைக் கூட்டித் தீர்மானம் போட்டார்கள், 'நாங்கள் ஏற்க மாட்டோம்'; பொதுக் குழுவை கூட்டி தீர்மானம் போட்டார்கள், 'நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம்' என்றெல்லாம் சொன்னீர்கள். ஆனால், அந்தச் சட்டம் நாடாளுமன்றத்திலே வந்தபோது, நிறைவேற்றிக் கொடுத்தது, திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்டத்தை எதிர்த்து, அந்தச் சட்டத்திற்கு மறுப்பு தெரிவித்து, எதிர்த்து ஓட்டுப் போட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எந்த ஒரு சூழ்நிலையிலும் மத்திய அரசு மக்கள் விரோத நடவடிக்கையோ அல்லது தமிழ்நாட்டு மக்களுடைய ஜீவாதார உரிமைகளுக்கு விரோதமாகவோ நடவடிக்கை அல்லது சட்டம்,

*எது கொண்டு வந்தாலும் சரி, அதை எதிர்த்து நிற்கின்ற ஒரே கட்சி தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அல்ல. அதை நீங்கள் திரும்பத் திரும்பச் சொல்வது தவறான ஒன்று. என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. சக்கரபாணி, இல்லை, அவர் பேசிக் கொண்டிருக்கிறார். உங்கள் கட்சியின் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) உங்கள் கட்சியின் உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

*பிற்பகல் 12-05*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, கல்வி, மாநில பட்டியலிலிருந்து மத்திய பட்டியலுக்குச் சென்றது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் என்று சொன்னார். அன்றைக்கு தி.மு.க. ஆட்சி இல்லை.* Emergency *காலத்திலே அன்றைக்கு கல்வி, மத்திய பட்டியலுக்கு மாற்றப்பட்டதேயொழிய, தி.மு.க. ஆட்சியில் இல்லை. இதுபோன்று பல்வேறு குற்றச்சாட்டுகளை இங்கே சொன்னார்.* NEET *தேர்வை இன்றைக்கு தமிழகத்திலே மத்திய அரசு கொண்டு வந்தது. நீங்கள் இரண்டு முறை இங்கே சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றினீர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் நான் சொல்லிவிடுகிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நான் சொன்ன பிறகு பேசுங்கள்.(குறுக்கீடு) இரண்டு முறை சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினீர்கள். இப்போது உச்ச நீதிமன்றத்தில் அது முடியாது என்று சொல்லிவிட்டது மத்திய அரசு. ஆனால், இன்றைக்கு நீங்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறீர்கள். இதனால், தமிழகத்தில் எத்தனையோ ஏழையெளிய மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்காக நீங்கள் பல ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி, அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களும் 'நீட்'*

தேர்வில் வாய்ப்பு பெறலாம் என்ற அந்த நிலையை ஏற்படுத்திக் கொடுத்தும்கூட, இன்றைக்கு அந்த மாணவர்களெல்லாம் தேர்ச்சி பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆக, இன்றுவரை நீங்கள் மத்திய அரசுடன் இணக்கமாக இருக்கின்றீர்கள். இதை நீங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழகத்தைப் பாதிக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை மத்திய அரசு புகுத்திக் கொண்டிருக்கின்றது. இன்றைக்குக்கூட விவசாயிகளுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் விவாதத்தில் உரையாற்றுவதுபோல் உரையாற்றாதீர்கள். (குறுக்கீடு) நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. அர. சக்கரபாணி:** ஒரேயொரு நிமிடம். விவசாயிகளுக்கு, இன்றைக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 3 சதவிகிதம்தான் வட்டி இருந்தது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. அர. சக்கரபாணி:** இன்றைக்கு மத்திய அரசு அதை 8½ சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறது. அதைக்கூட நீங்கள் தட்டிக் கேட்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்டி சதவிகிதத்தைப் பற்றி உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். உங்களுடைய மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்குதானே அமர்ந்திருக்கிறார்கள். குரல் கொடுங்கள். அதற்குத்தானே மக்கள்

உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு பேச வேண்டியதை இங்கு பேசலாம். அங்கு பேச வேண்டியதை அங்கு பேசலாம். அதுதான் நடக்கும். இங்கு பேசி பிரயோஜனம் இல்லை. விவசாயிகள் பாதிக்கப்படுகின்றதை, அவர்களுடைய துன்பத்தை, வட்டியைக் குறைக்க வேண்டுமென்று நாடாளுமன்றத்தில் எடுத்துச் சொன்னீர்கள் என்றால், அது நிறைவேறும். இங்கு சொன்னால், நாங்கள் என்ன செய்ய முடியும்? நாங்கள் கேட்கத்தான் முடியும். அதை நிறைவேற்ற முடியுமா? நிறைவேற்ற வேண்டியது நாடாளுமன்றம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணன் பேசுகின்றபோது—'நீட்' தேர்வை மத்திய அரசு கொண்டுவந்தது என்று சொன்னார்கள். இதைத்தான் நான் தொடர்ந்து அவையில் சொல்லியிருக்கிறேன். மத்திய அரசில் அங்கம் வகித்தது நீங்கள்தானே! (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஒத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) 'நீட்' தேர்வுக்கு பிள்ளையார் சுழி போட்டது நீங்கள். அதாவது, 'நீட்' தேர்வில் மாணவர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றார்கள் என்று சொல்வதற்கான அந்த உரிமையே உங்களுக்கு இல்லை. காரணம் என்னவென்றால், பலமுறை நான் இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். 'நீட்' தேர்வில், 2010-ல். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது. (குறுக்கீடு) உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், உட்காருங்கள். (குறுக்கீடு) அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** திராவிட முன்னேற்றக் கழகம், மத்திய அரசோடு கூட்டணி அரசில் இருந்தபோதுதான் 2010-ல் 'நீட்' தேர்வுக்கான notification போடப்பட்டது. அதைக் கொண்டுவந்தது காங்கிரஸ் அரசாங்கம்தான். அப்போது நீங்கள் தட்டிக் கேட்கவில்லை. "தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடித்தீர்கள்" என்று, அதைத்தான் நான் பலமுறை இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். அப்போது, தும்பை விட்டுவிட்டு, இப்போது நீங்கள் வாலைப் பிடிக்கிறீர்கள் இதுதான் சப்ஜெக்ட்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2020 பிப்ரவரி 18

அதேபோல, ஹைட்ரோ கார்பன் திட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்தபோதும், நீங்கள் தட்டிக் கேட்கவில்லை. ஏன், இன்றைக்கு நான் சார்ந்திருக்கக்கூடிய புதுக்கோட்டை மாவட்டம், நெடுவாசல் போராட்டத்திற்குக் காரணம் நீங்கள்தான், மீத்தேன் திட்டத்தைக் கொண்டுவந்தபோதும் நீங்கள் தட்டிக் கேட்கவில்லை. ஏன், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, மத்திய அமைச்சராக இருந்த திரு. டி.ஆர். பாலு அவர்கள் பேசியது இன்றைக்கு Whats App–ல் வந்திருக்கிறது. "நான், நான் என்று என்னையே சொல்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம்தான் கொண்டுவந்தது. நானும், மத்திய இணை அமைச்சராக இருந்த திரு. பழனிமாணிக்கமும் சேர்ந்துதான், தஞ்சை மாவட்டம் வளம் பெறுவதற்காக இந்த ஹைட்ரோ கார்பன், மீத்தேன் திட்டங்களைக் கொண்டுவந்தோம்" என்று (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பேசியது இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் Whats App–ல் வந்து கொண்டிருக்கிறது. இன்னொன்றையும் சொல்கிறீர்கள். வேண்டுமென்றால், அதற்கான ஆதாரத்தை நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் கொடுக்கின்றேன். மத்திய அரசிடம் நீங்கள் அமைதியாக இருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். தேசிய மருத்துவ மசோதா, அதாவது, NMC Bill. NMC Bill–ல் 'நீட்' இன்றைக்கு ஓர் அங்கம். கடந்த ஆண்டு NMC Bill–ஐ மத்திய சுகாதார அமைச்சர் கொண்டுவந்தபோது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையைப் பெற்று, மிக வலுவான எதிர்ப்பை பாராளுமன்றத்தில் தெரிவித்ததும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு. அதனால் கொள்கை ரீதியாக, திட்டங்களுடைய அடிப்படையில், ஷரத்துகளுடைய அடிப்படையில், மத்திய அரசை பல்வேறு நேர்வுகளில் மாநில அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு, வலுவான கருத்துகளை நாடாளுமன்றத்தில் ஓங்கி, அழுத்தமாக எடுத்து வைக்கிறது. ஏன், நாடாளுமன்றத்தையே எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடக்கிய வரலாறு எல்லாம் நாடறிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதையெல்லாம் நீங்கள் மறந்துவிட்டு, அமைதி என்ற ஒரு வார்த்தையை வைத்துக்கொண்டு நீங்கள் களங்கம் கற்பிக்க வேண்டாம். எல்லா களங்கமும் திராவிட முன்னேற்றக் கழகத்திலேதான் இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், நீங்கள் பேசுங்கள்.

*2020 பிப்ரவரி 18]*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், கொறடா அவர்கள் இங்கே உணர்ச்சிவசப்பட்டு, பேசினார்கள். நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான், அன்றையதினம், உங்களுடைய அமைச்சர் அங்கே பொறுப்பிலே இருந்தபோதுதான், விவசாயிகளுக்கு வழங்கிய மானியத் தொகையை, பூச்சி மருந்தாக இருந்தாலும், உர மானியமாக இருந்தாலும் அப்போது இரத்து செய்தபோது, அங்கே வேடிக்கை பார்த்தவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், நீங்கள் பேசுங்கள். இல்லையென்றால், அவர் பேசட்டும். (குறுக்கீடு) இது போதும். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் பேசட்டும். (குறுக்கீடு) இல்லை, பின்னர் பேசலாம். உங்கள் உறுப்பினருடைய நேரம்தான் போகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உங்கள் உறுப்பினர் பேசுகிறார் (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) நேரமில்லை, சுருக்கமாகப் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகளைப் பற்றி, உர மானியத்தைப் பற்றி பேசினார். அன்றைக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இருந்த சமயத்திலே சுமார் 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவிலான விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்தது தி.மு.க.-வும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும்தான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மதுரை உயர் நீதிமன்றக் கிளை பெரும் விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்யலாம் என்று சொன்னது. அதற்கு நீங்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை வாங்கிக் கொண்டு வருகிறீர்கள். விவசாயிகளுடைய பாதுகாவலர் என்று சொல்கிற அரசு ஏன் இந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய மாட்டேன் என்கிறது? ஏன் அதற்காக உச்ச நீதிமன்றம் சென்று தடையாணை வாங்கிக் கொண்டு வருகிறீர்கள்? அதற்குப் பதில் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கொறடா அவர்கள் பேசினார்கள். நான் ஒன்றே ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உர விலை ஏறியதற்கு யார் காரணம்? அன்றைக்கு உங்கள் அமைச்சர் இருந்தபோது உர விலைக்கு டெண்டர் போடுவதில் காலதாமதம் ஏற்பட்டதன் விளைவாகத்தான் வேறு நாடுகளிலிருந்து உரங்களை இறக்குமதி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டதன் அடிப்படையில் உர விலை ஏறியது. ஒரு மூட்டைக்கு ரூ.200/- ஏறியதை வேடிக்கை பார்த்தது நீங்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா, ஏன் இப்படி செய்கிறீர்கள்? நீங்கள் தேர்தல் அறிக்கையிலே என்ன கொடுத்தீர்களோ, அதை நிறைவேற்றினீர்கள். எங்கள் தேர்தல்*

*2020 பிப்ரவரி 18]* [திரு. செல்லூர் கா. ராஜு]

*அறிக்கையில் என்ன கொடுத்திருந்தோம் என்றால், குறு மற்றும் சிறு விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்லியிருந்தோம். அதன்படி தள்ளுபடி செய்திருக்கிறோம். திரும்பத் திரும்ப இதை நீங்கள் மூடி மறைக்கிறீர்கள். இப்போது உச்ச நீதிமன்றத்திற்குப் போனது விவசாயிகளின் கடனுக்காக மட்டுமல்ல; இந்த மாபெரும் சபையிலே நிதி மேலாண்மையை ஓர் அரசு கொண்டு வந்து, அதற்குத் தீர்வு கண்ட பிறகு அதுகுறித்து உயர் நீதிமன்றமோ அல்லது அது எந்த மன்றமாக இருந்தாலும் சரி, அது தவறு என்று சொல்லக் கூடாது. அதில் குறைபாடுகள் இருக்கும்பட்சத்தில், அதைச் சுட்டிக்காட்டலாம். எனவே, அப்படியிருக்கின்ற சூழ்நிலையில் உயர் நீதிமன்றம் இந்த மாதிரி தகவல் சொல்லியிருக்கிறது, இது சரியா? உயர் நீதிமன்றம் கொடுத்திருக்கிற தகவல் சரியா? ஏனென்றால், இது மாபெரும் சபை. நிதி ஆளுமை இந்த மாமன்றத்திற்குத்தான் இருக்கிறது. எதற்கு இப்போது சட்டமன்றத்தைக் கூட்டியிருக்கிறோம்? எதற்கு நீங்கள் கருத்துகளைச் சொல்கிறீர்கள்? நம்முடைய கருத்துகளைச் சொல்லி, நிதி மசோதாவை நிறைவேற்றும் சபை. நிறைவேற்றிய நிதி மசோதாவை நாளைக்கு ஒரு நீதிமன்றம் தவறு என்று சொன்னால், அதை எடுத்துக்கொள்வதா? அப்படி அந்த மாதிரி எத்தனை மசோதாக்கள்? இதற்காகத்தான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களின் அரசு நீதிமன்றம் போயிருக்கிறது. வேறொன்றுமில்லை.*

*இன்னொன்று, உங்களை மாதிரி நாங்கள் தவறு என்று சொல்லவில்லை. எதைத் தள்ளுபடி செய்வோம் என்று சொன்னோமோ அதைத் தள்ளுபடி செய்கிறோம். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஓரிடத்திற்குச் சென்று 7,000 கோடி ரூபாய் அளவிற்கான விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தோம் என்று சொல்கிறார். நீங்கள் தள்ளுபடி செய்தது 5,361 கோடி ரூபாய். 5,361 கோடி ரூபாயில் 506 கோடி ரூபாயை கொடுக்காமல் போய்விட்டீர்கள். 506 கோடி ரூபாயை கொடுக்காமல் போனது உங்கள் அரசு. நீங்கள் இதையெல்லாம் உங்களிடம் வைத்துகொண்டு, வெறும் 4,500 கோடி ரூபாயை கொடுத்துவிட்டு, இப்போது எங்களைக் குறை சொன்னீர்கள் என்றால், என்னப்பா நியாயம்? கொறடா இப்படிப் பேசலாமா? இப்படிப் பேசக் கூடாது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், பேசுங்கள்.*

[2020 பிப்ரவரி 18

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் மத்திய அரசிடம் நன்றாக இருக்கிறீர்கள். மத்திய அரசும் உங்களிடம் நன்றாக இருக்கிறது. அதற்கு நல்ல கைமாறு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இப்படி பேசி நேரம் வீணாகிறது. (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து அரை மணி நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, அரை மணி நேரமாகிவிட்டது. நேரத்தைப் பாருங்கள். 28 நிமிடங்கள் ஆகிவிட்டன, பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசைப் பற்றியே சொல்லிக்கொண்டிருக்கிறார். இப்போது நடைபெறுகிற மத்திய அரசுடன் 5 ஆண்டுக் காலம் பதவி சுகத்தை அனுபவித்தது நீங்கள்தான், நாங்களல்ல. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அவையின் வெளியே இருந்தால் பெயரைச் சொல்லக் கூடாது. ஓராண்டுக் காலம் ஒருவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது, அவர் இலாக்கா இல்லாத அமைச்சராக அப்பொழுது இருந்தார். அப்பொழுதெல்லாம் மத்திய அரசைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் அமைச்சரவையில் இடம் பெறவே இல்லை. ஆனால், நீங்கள் மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தீர்கள். அதனால்தான் இந்தக் கேள்வி எழுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சரியாக அரை மணி நேரமாகிவிட்டது.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நின்ற இடத்திலேயே நிற்கிறீர்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** இல்லை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீங்கள் நாடாளுமன்றத்தில் உங்களுடைய உறுப்பினர்களை வைத்துப் பேசுங்கள் என்று சொன்னார். நாடாளுமன்றத்தில் இன்றைக்கு மத்திய அரசுக்கு சிம்ம சொப்பனமாக எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்

இருக்கிறார்கள். இதை ஊர் அறியும்; உலகறியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நிலைப்பாட்டோடு இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நம்முடைய அரசு இந்திய குடிமக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சவாலுக்கு, CAA–க்கு எதிராக ஒரு தீர்மானம் போடுமா என்ற ஒரு கேள்வியை நாங்கள் கேட்கின்றோம். நீங்கள் அவர்களோடு நல்ல உறவோடு சென்று கொண்டிருக்கின்றீர்கள். அவர்களைப் பகைக்க நீங்கள் விரும்பவில்லை என்று நாங்கள் எங்களுடைய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதைத்தான் பேசி, அவர்கள் பதில் சொல்லியாகிவிட்டது. பின்னர் நான் வேறோர் உறுப்பினரைப் பேச அழைத்துவிடுவேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதையே சொல்லிச் சொல்லி நீங்கள் நாட்டு மக்களை ஏமாற்றிக் கொண்டே இருக்கிறீர்கள். இதனால் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், சொல்லுங்கள். நாங்கள் தீர்வு காண்கிறோம். தமிழ்நாட்டில் வாழ்கின்ற, தமிழ் மண்ணில் பிறந்த எந்த சிறுபான்மையின மக்களாவது பாதிக்கப்படுகிறார்கள் என்று சுட்டிக்காட்டுங்கள். நாங்கள் அதற்குப் பதில் சொல்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை விட்டுவிட்டு மக்களை ஏமாற்றி, நாடகமாடி, தவறான, அவதூறான செய்தியைச் சொல்லி, இன்றைக்கு நல்ல அமைதியாக இருக்கின்ற நம்முடைய மாநிலத்தில் அமைதிக்குக் குந்தகம் ஏற்படுகின்ற நிலையை ஏற்படுத்துகிறீர்கள். என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) யார் பாதித்திருக்கிறார்கள், விளக்கம் சொல்லுங்கள். நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோ தங்கராஜ், நீங்கள் பேசுங்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக தெலுங்கானாவில் தீர்மானம், கேரளாவில் தீர்மானம், பல மாநிலங்களில் தீர்மானம். வட நாட்டிலிருந்து தென்னாடு வரை

தீர்மானங்கள் போடுகிறார்கள் என்று சொன்னால் தெரியாமலா போடுகிறார்கள்? அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இதனால் பாதிப்பு ஏற்படும் என்பதைத் தெரிந்துதான் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நீங்கள் வெளிநடப்புச் செய்தீர்கள். என்ன சொன்னீர்கள், இரட்டைக் குடியுரிமை வழங்கக்கூடிய அதிகாரம் மத்தியிலே இருக்கிறது என்று சொன்னீர்கள். இப்போது இந்த அதிகாரம் மத்தியில்தான் இருக்கிறது. மாநிலத்தில் அல்ல. (குறுக்கீடு) நீங்கள் ஏற்கெனவே சொல்லிவிட்டு வெளியே சென்றீர்கள். மாநிலத்திற்கு அதிகாரம் இல்லை. அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி நடிக்கவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வருவாய் வரவினங்களை நாம் பார்க்கின்ற நேரத்தில், பெரும்பாலும் இரண்டை அடிப்படையாகக் கொண்டுதான் இருக்கிறது. ஒன்று TASMAC மூலமாகக் கிடைக்கக்கூடிய வருமானம்; இன்னொன்று பெட்ரோல், டீசலின் VAT வரி மூலமாகக் கிடைக்கக்கூடிய வருமானம். இவை சுமார் 20,000 கோடி ரூபாய்க்கு வந்துவிடுகிறது. வரி இல்லாத வரவுகள் வெறும் ரூ.15,898 கோடிதான் வந்திருக்கிறது. உண்மையிலேயே TASMAC வருமானம் double ஆகியுள்ளது, நம்முடைய கடன்களின் அளவும் double-ஐயும் தாண்டி சென்று கொண்டிருக்கிறது. 2011-ல் TASMAC வருவாய் ரூ.16,900 கோடி ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பலமுறை இந்த அவையில் நிதிநிலை அறிக்கையின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நிதிப் பற்றாக்குறை எப்படிக் கையாளப்படுகிறது, வருவாய் பற்றாக்குறை எப்படிக் கையாளப்படுகிறது, கடனுடைய அளவு

எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகிறது என்பதையெல்லாம் தீர, நன்கு விளக்கமாகச் சொல்லிவிட்டேன். திரும்பத் திரும்ப அது குறித்தே நீங்கள் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தால், என்னுடைய பதிலும் அதுவாகத்தான் இருக்கும். நிதிப் பற்றாக்குறை நம்முடைய மாநிலத்தில் உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதத்திற்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்றுதான் இருக்கிறது. எனவே கட்டுப்படுத்திக்கொண்டு வருகிறோம். ஒரே ஒரு வருடம் 2016-2017-ல் கூடுதலாகச் சென்றது. அதற்கு விளக்கம் சொல்லியாகிவிட்டது. UDAY திட்டத்தின்கீழ் ரூ.22,000 கோடி நம்முடைய மாநிலத்தினுடைய பொறுப்பாக ஏற்கவேண்டியிருந்தது. அதற்குரிய வட்டி ரூ.1,776 கோடியை வருடா வருடம் நாம் கட்ட வேண்டியிருக்கிறது. அதனால் அவ்வாறு ஏற்பட்டது. எனவே, Fiscal Responsibility Act-ல் திருத்தம் (Amendment) கொண்டுவந்தோம். அதோடு அது முடிந்தது. எந்த வருடமும் நாங்கள் நிதிப் பற்றாக்குறையை, வருவாய்ப் பற்றாக்குறையை, 3 சதவிகிதத்திற்குமேல் கொண்டுபோகவில்லை. கடன் அளவும் 25 சதவிகிதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றுதான் இருக்கிறது. கடன் அளவும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. வாங்கப்படுகிற கடன் மூலதனச் செலவுகளுக்கு மட்டுமே செலவழிக்கப்பட வேண்டும் என்று நேற்றையதினம் நீங்கள் சொன்னீர்கள். சரியான வாதம்தான். ஆனால் மூலதனச் செலவிற்குச் செலவழித்ததுபோக, மீதமிருக்கின்ற தொகையை வளர்ச்சித் திட்டப் பணிகளுக்குச் செலவழிக்கிறோம். அவ்வாறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கும் மூலதனச் செலவுகளுக்கும் செலவழிக்கின்றபோது உற்பத்தி பெருகும், உற்பத்தி பெருகுகின்றபோது நம்முடைய பொருளாதார நிலை உயரும். பொருளாதார நிலை உயரும்போது, நம்முடைய வருவாயும் உயரும். இந்த அடிப்படையில்தான் நிதிநிலை அறிக்கை மற்றும் அரசினுடைய செயல்பாடுகள் இருக்கின்றன. உங்களுடைய ஆட்சியில்கூட, 2009-2010 மற்றும் 2010-2011 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் 3 சதவிகிதத்திற்கும் மிகைப்படுத்தி, முறையே 3.28 மற்றும் 3.38 என்ற அளவிற்கு exceed ஆகியிருக்கிறது. அதையும் நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும். இப்போது நிதிப் பற்றாக்குறை UDAY திட்டம் வந்ததால்தான் மேலே சென்றது. ஆனால், இந்த வருடம் போகவில்லை. இதையெல்லாம் நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். நிதிப் பற்றாக்குறை, வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் கடன் அளவு போன்றவற்றிற்கு நாங்கள் சரியான காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதையே திரும்பத் திரும்பக்

*கேட்டுக்கொண்டிருந்தீர்கள் என்றால், அதே பதிலை திரும்பத் திரும்ப நான் சொன்னதால், அண்ணன் துரைமுருகன்* bore *அடிக்கிறது. திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் என்று முனகிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, உங்கள் பேச்சை, சாராம்சத்தை சுருக்கமாகக் கேளுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேச ஆரம்பித்து 34 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு). உங்கள் உரையை 6 நிமிடங்களில் முடியுங்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவை படிப்படியாக ஒழிப்போம் என்பது உங்களுடைய தேர்தல் வாக்குறுதி,*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் குறுக்கீடு வராமல் பேசுங்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவேதான் சொல்கின்றேன். அந்த வருவாய் 2011-ல் இருந்ததைவிட இன்றைக்கு பல மடங்கு அதிகரித்து சுமார் 35,000 கோடியை எட்டும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்போது* TASMAC *விலை கூடியிருக்கிறது. இதன்மூலம் 2500 கோடி ரூபாய் வருவாய் அதிகரிக்கும் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே, நெடுஞ்சாலையின் அருகிலிருந்த சில கடைகள் மூடப்பட்டன. இன்றைக்கு அந்தக் கடைகளெல்லாம் மீண்டும் திறக்கப்பட்டு, 6,500 கடைகளாக உயர்ந்திருக்கின்றன. எனவே, இந்த அரசாங்கம் மது விற்பனையின்மூலம் கிடைக்கும் வருவாயை நம்பித்தான் இருக்கிறதா என்கிற ஒரு கேள்வியை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல் தருகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 23-5-2016 அன்று முதலமைச்சராகப் பதவியேற்றபோது, 6,715 கடைகள்தான்*

இருந்தன. நீங்கள் எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே பாருங்கள். நாங்கள் அந்தக் கடைகளை உடனே மூடுவோம் என்று எங்குமே சொல்லவில்லை. தேர்தல் அறிக்கையில் நாங்கள் படிப்படியாகக் குறைப்போம் என்று சொல்லியிருக்கின்றோம். அதிலும் என்ன சொல்லியிருக்கின்றோம் என்றால், விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்; மக்களுக்கு எங்கெல்லாம் பாதிப்பு இருக்கின்றதோ, அங்கெல்லாம் முதலில் கடைகள் அடைக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றோம். அவர்களைப்போன்று, நாங்கள் ஒரே நாளில் கையெழுத்து போட்டு, அந்த மதுக் கடைகளை மூடுவோம் என்று சொல்லவேயில்லை. படிப்படியாக மூடுவோம் என்றுதான் சொன்னோம். மாண்புமிகு அம்மா அவர்கள் 23-5-2016 அன்று பதவியேற்றபோது, 500 கடைகளை மூடுவோம் என்று சொன்னார்கள். அதேபோல, இரண்டு மணி நேரம் கடையின் வேலை நேரத்தைக் குறைப்போம் என்று சொன்னார்கள். அடுத்த நாளே, (24-5-2016) கடைகளின் வேலை நேரம் இரண்டு மணி நேரம் குறைக்கப்பட்டது. 19-6-2016 அன்று முதல் 500 கடைகள் குறைக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்கின்றபோது, மீண்டும் 500 கடைகளைக் குறைத்தார்கள். 6,715 கடைகளில் 1,000 கடைகளைக் குறைத்த பின்னர், 5,715 கடைகள் இருக்கவேண்டும். ஆனால், இப்போது இருப்பது, 5,262 கடைகள்தான். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் நீங்கள் ஒரு கடையையாவது குறைத்தீர்களா? நீங்களும் அந்தக் கடைகளை வைத்து வியாபாரம்தானே செய்து கொண்டிருந்தீர்கள்? உங்களுடைய கொள்கையும் அந்தக் கொள்கையாகத்தானே இருந்தது? இன்றைக்கு rate ஏறுகிறது. Rate ஏறும்போது வருமானம் revenue அதிகமாகிறது. நீங்களே ஒரு பக்கம் வருவாய் குறைகிறது என்று சொல்கிறீர்கள். ஒரு பக்கம் இதனால் வருவாய் அதிகமாகிறது என்று சொல்கிறீர்கள். அன்றைக்கு quarter மதுவின் விலை என்ன? இன்றைக்கு quarter மதுவின் விலை என்ன? சொல்லுங்கள். நீங்களே சொல்லுங்கள். மக்கள் (குறுக்கீடு) குடிக்கிறார்கள். (குறுக்கீடு) அதற்கென்ன செய்ய முடியும்? உங்கள் ஆட்சியிலும் அப்படித்தானே இருந்தது? மக்களுக்கு வாங்கும் சக்தி அதிகமானது மட்டுமல்ல. அன்றைக்கு TASMAC வருவாய் ரூ.16,000 கோடி என்றால், அன்றைக்கு உங்களுடைய பட்ஜெட் ஒன்றரை இலட்சம் கோடிதான். முதலில் பட்ஜெட் எவ்வளவு என்று தெரிந்துகொள்ளுங்கள். அன்றைய காலக்கட்டத்தில் உங்களுடைய நிதிநிலை அறிக்கையில் மொத்தத் தொகை எவ்வளவு என்று பாருங்கள். அன்றைக்குப் பார்த்தால், TASMAC-னுடைய வருமானம்தான் அதிகமாக இருந்தது. ஏதோ

[திரு. பி. தங்கமணி] [2020 பிப்ரவரி 18

மற்றதெல்லாம் அதிகமாக இருந்து, TASMAC வருமானம் குறைவாக இருந்தது என்றில்லை. 2011 ஆம் ஆண்டு, நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கின்றபோது, உங்களுடைய நிதிநிலை அறிக்கையில் மொத்தத் தொகை எவ்வளவு? அதில் TASMAC வருமானம் எவ்வளவு? அதனை நீங்கள் compare செய்து பாருங்கள். எங்களுடைய கொள்கை பூரண மதுவிலக்குத்தான். நீங்கள் எத்தனை முறை சொன்னாலும் சரி, எங்களுடைய பூரண மதுவிலக்குக் கொள்கையை, நாங்கள் படிப்படியாகக் கடைகளைக் குறைத்து, அமல்படுத்துவோம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. நாங்கள் எங்களுடைய தேர்தல் அறிக்கையில் உங்களைப்போல, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஒரே கையெழுத்தில் எல்லா கடைகளையும் மூடுவோம் என்று எப்பொழுதுமே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோ தங்கராஜ், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். எப்பொழுது பார்த்தாலும் எழுந்து நிற்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோ தங்கராஜ், நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 47 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் நேரத்தைப் பாருங்கள். நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சராக இருக்கின்ற, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்றார். அதற்குப் பின்னால் தொடர்ந்து பேரவை விதி 110–ன்கீழ் பல அறிவிப்புகள் வருகின்றன. 2016 ஆம் ஆண்டில் 29 அறிவிப்புகள், 2017 ஆம் ஆண்டில் 29 அறிவிப்புகள், 2018 ஆம் ஆண்டில் 39 அறிவிப்புகள், 2019 ஆம் ஆண்டில் 43 அறிவிப்புகள். ரூ.20,243 கோடி மதிப்புள்ள அறிவிப்புகள். இது மிகப் பெரிய பட்ஜெட்டுக்கு நிகரான அறிவிப்புகள். பட்ஜெட்டில் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு இருக்கிற தொகை, இந்த அறிவிப்புகளில் வந்துவிடுகிறது.

*2020 பிப்ரவரி 18]*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,* budget*-ல் துறைவாரியாக* amount *ஒதுக்கப்படுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கும் அறிவிப்புகள் அனைத்தும்* within the budget. Within the budget*-க்குள் வேறு ஏதாவது திட்டங்களுக்கு நாம் அறிவித்தோம் என்றாலும் அல்லது திட்டங்களைச் செயல்படுத்தினோம் என்றாலும் அது* R.E.*-ல் வந்துவிடும். கடைசியாக அந்த ஆண்டு முடியும்போது, அவற்றிற்கான துணை மதிப்பீடுகள் பேரவையின்முன் வைத்து, அங்கீகாரம் பெறப்படும். இதுதான் நடைமுறை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோ தங்கராஜ், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அறிவிப்பை ஏன் நிதிநிலை அறிக்கையிலேயே நாம் சொல்லிவிடக் கூடாது? அதிலும் ஏதாவது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்த அறிவிப்பாக இருக்கலாம். ஆனால், ஏன் இவ்வளவு அடுக்கடுக்கான அறிவிப்புகளை அறிவிக்க வேண்டும் என்பது என்னுடைய கேள்வி. இரண்டாவது, ஓர் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 2019-2020 ஆம் ஆண்டில், நிதிநிலை அறிக்கையில் 2,000 பேருந்துகள், . . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுனாமியோ, புயலோ எப்பொழுது வரும், எப்பொழுது போகும் என்பது நிதிநிலை அறிக்கையை*

வழங்கும்போது தெரியாது. சுனாமி வந்து, அதனால் பாதிப்பு ஏற்பட்டால் அதற்காக ஒதுக்கப்படுகிற நிதியை எப்படி நாம் கணித்துச் சொல்ல முடியும்? அதைப்போலத்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோ தங்கராஜ் அவர்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** 2019-2020 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் BS IV தரத்தில் 2,000 பேருந்துகளும், 500 Electric பேருந்துகளும் விடப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். மீண்டும் பேரவை விதி 110-ன்கீழ் 17-7-2019 அன்று அதே அறிவிப்பு வருகிறது. பேருந்துகள் விடப்படுவதாக இப்படி நிறைய அறிவிப்புகள் வெளியிடப்பட்டாலும், அந்தளவுக்குப் பேருந்துகள் விடப்பட்ட மாதிரி தெரியவில்லை. அதில் பாதியளவிற்குக்கூட பேருந்துகள் விடப்பட்டதுபோலத் தெரியவில்லை. என்னுடைய தொகுதியில்கூட பல வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பழைய பேருந்துகள் ஆபத்தான நிலையில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 12-25

வறுமை ஒழிப்பு பற்றி நீங்கள் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 12-ல் குறிப்பிடும்போது சரியான கொள்கை முடிவுகளை மேற்கொள்வதற்கு ஜெ-பால் நிறுவனத்துடன் இணைந்து ஆய்வுகள் நடத்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியானால் நீங்கள் initial stage-ல், அதாவது துவக்க நிலையில்தான் இருக்கிறீர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால், அதே நிதிநிலை அறிக்கை, பக்கம் 9-ல் ஐ.நா. சபை நிர்ணயித்துள்ள நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கான இலக்குகள்—Sustainable Development Goals— அந்த 17 goals-ல் நாங்கள் 2020 ஆம் ஆண்டில், . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து (குறுக்கீடு) இல்லை, அதற்குமேல் நேரம் ஒதுக்க முடியாது. இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். நேரத்தைப் பாருங்கள், (குறுக்கீடு) நேரத்தைப் பாருங்கள், இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் தயவுசெய்து குறுக்கிடாமல் இருங்கள்.

*2020 பிப்ரவரி 18]*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுவதைத் தவறாகப் பேச வேண்டாம்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏதும் தவறாகப் பேசவில்லை, உங்களுக்கு பிரயோஜனப்படும். அதாவது அந்த* Sustainable Development Goals*-ல், . . .(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி இன்னும் 5 நிமிடங்களில் நீங்கள் உரையை முடித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் நான் முடித்துவிடுவேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த* Sustainable Development Goals*-ல், முதல் இலக்கு வறுமை ஒழிப்பு. அந்த வறுமை ஒழிப்பிற்கு கொள்கை முடிவுகள் எடுக்கக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய நீங்கள், எப்படி நாங்கள்* Sustainable Development Goals *17-ஐயும் 2020 ஆம் ஆண்டிற்குள் முடிப்போம் என்று சொல்கிறீர்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை. அதேபோன்று வறுமைக்கோடு பட்டியல். 2018-2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 85 இலட்சம் மக்கள் மட்டும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்கள் என்று நீங்கள் அறிவித்தீர்கள். அது நம்முடைய மக்கள் தொகையில் 11.28 சதவிகிதம். ஆனால் 2019-2020-ல் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள 60 இலட்சம் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதல்வர் ரூ.2,000/- வீதம் அன்றைக்கு அறிவித்தார்கள். நான் கேட்கிறேன், வறுமை அதிகரித்துள்ளதா? கணக்கீடு தவறாகச் சென்றதா? இல்லை, நாடாளுமன்றத் தேர்தலில் உங்களுக்கு வாக்கு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அந்தக் குடும்பங்களுக்கு நீங்கள் நிதி வழங்கினீர்களா என்று நான் கேட்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வறுமை ஒழிப்பிற்கு கொள்கை முடிவுகளை இப்போதுதான் தொடங்குகிறீர்களா என்று வினா எழுப்புகிறார். தமிழ்நாட்டில்*

[திரு. ஓ.எஸ். மணியன்] [2020 பிப்ரவரி 18

பசி, பஞ்சம், பட்டினி என்ற இந்த வார்த்தைகளே இல்லையென்ற நிலையை உருவாக்குகிற வழியில்தான் எங்களுடைய மறைந்த முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாதாமாதம் ஏழையெளிய மக்களுக்கு 20 கிலோ விலையில்லா தரமான அரிசியை வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) பட்டினி என்ற வார்த்தையில்லாத ஒரு நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார் என்பதையும், சமுதாயத்தில் பின்தங்கியிருக்கிற மக்களுக்கு 35,000 ரூபாய்க்குக் கறவை மாடுகளை வழங்குகிற ஒரே அரசு, தமிழ்நாடு அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும், சாதாரண ஏழையெளிய மக்களுக்கு 12,000 ரூபாய்க்கு 4 வெள்ளாடுகளை வழங்குகிற திட்டத்தைத் தந்துகொண்டிருக்கிற அரசும் இந்த அரசுதான் என்பதையும், ஒவ்வொரு சாதாரண குடும்பத்திற்கும் புழக்கடைக் கோழி வளர்ப்புக்காக 50 கோழிக் குஞ்சுகளைக் கொடுத்து சாதாரண மக்களை, ஏழையெளிய கிராமத்து, குக்கிராமத்து மக்களை வாழவைக்கிற அரசு, அம்மா அவர்களுடைய அரசு என்பதையும், மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் காலணி 4, சீருடை, மதிய சத்துணவு, பாடப் புத்தகம், note, pencil, pen, colour pencil என அனைத்தையும் கொடுத்து, laptop கொடுத்து, (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நீங்கள் பேசும்போது நாங்கள் அமைதியாக இருக்கிறோம் அல்லவா? Laptop கொடுத்து, cycle கொடுத்து, ரூ.50,000/- பணம் கொடுத்து, 8 கிராம் தங்கம் கொடுத்து, ரூ.25,000/- பணம் கொடுத்து, 4 கிராம் தங்கம் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) தாலிக்குத் தங்கம் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் திட்டங்களையும், 60,000 கோடி ரூபாய்க்குமேல் சமுதாயத்தில் பின்தங்கியிருக்கிற மக்களுக்கு நலத் திட்ட உதவிகளை அள்ளி, அள்ளி, வாரி, வாரி வழங்குகிற காரணத்தினால்தான், எங்களுடைய முதலமைச்சர் இன்றைக்கு இந்தியாவிலேயே முதன்மை முதலமைச்சர் என்கிற பெயரைப் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதன்மை மாநிலம் என்கிற புகழைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அதையெல்லாம் பார்க்காமல், மஞ்சள் காமாலைக்காரனுக்கு காண்பதெல்லாம் மஞ்சள் என்பதுபோல் நீங்கள் பேசுவது சரியில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.(குறுக்கீடு) ஏன் உள்ளதைத்தானே சொல்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லாததையா சொல்கிறோம், உள்ளதைத்தானே சொல்கிறோம்.

*2020 பிப்ரவரி 18]* [*திரு. ஓ.எஸ். மணியன்*]

*நீங்கள் வறுமையில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்று சொல்வது, தவறு, தவறு, தவறு.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றிச் சுற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாங்கள் சொல்வதைத்தான் சொல்கிறார். நாங்கள் சொல்கிறோம், . . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. துரைமுருகன்:** *நியாயம் என்று சொல்லுங்கள், நான் உட்காருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்களே இதனை நியாயம் என்று சொன்னால் நான் பேசாமல் உட்காருகிறேன் அல்லது முன்னவர் சொன்னால் உட்கார்ந்து விடுகிறேன். ஓர் உறுப்பினருக்கு உங்களிடம் கெஞ்சி 5 நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பு வாங்கிக் கொடுத்திருக்கிறேன். அதற்குள் எழுந்து நின்றுகொண்டு, கூட்டத்தில் பேசுவதுபோல் பேசினார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கிட்டு பேசக் கூடாதென்று நான் சொல்ல மாட்டேன். ஏனென்றால், நானும் அமைச்சராக இருந்தவன். ஆனால் இது குறுக்கீடு இல்லை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது வேறு மாதிரி.*

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறுமை இருப்பதால்தான் மக்கள் இலவச அரிசி பெறுவதற்கு காத்து நிற்கிறார்கள். வறுமை இருப்பதால்தான் உங்களுடைய இப்படிப்பட்ட நலத் திட்டங்களைப் பெறுவதற்கு*

காத்திருக்கிறார்கள். அதைத்தான் நான் உங்களிடத்திலே குறிப்பிட்டுச் சொல்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறைக்கு கடந்த 3 ஆண்டுகளில் சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மூலதனச் செலவைக் கணக்கிட்டால் வெறும் 1.2 சதவிகிதம்தான். அதனால்தான் இன்றைக்கு பல பள்ளிக்கூடங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள், குடிநீர், சுகாதாரம், கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட வசதிகள் இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் கொஞ்சம் இருங்கள், அவர் உரையை முடிக்கிறார். அவர் முடித்தவுடன் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, NEET coaching centre-ஐ பள்ளிக்கூடங்களிலே நடத்துகிறீர்கள். +2 தேர்வில் அரசு பள்ளிகளிலே 100 சதவிகிதத் தேர்ச்சி, 93 சதவிகித தேர்ச்சி என்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தை பொறுத்தளவில், இது சமூக நீதிக்கான மாநிலம். எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அதிக நிதி ஒதுக்கீடு, குறிப்பாக 80,000 கோடி ரூபாய் ஒதுக்கி, சமூக நீதிக்கான மாநிலம் என்ற அந்த உறுதியைப் பெற்ற ஒரே மாநிலம் நம்முடைய தமிழ்நாடு என்கின்ற அந்த வரலாறு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 1979 ஆம் ஆண்டு communal G.O. போட்டதிலிருந்து social justice-ஐ காக்கின்றோம். என்னுடைய கேள்வி விலையில்லா அரிசி வழங்குவதை

நிறுத்திவிடச் சொல்கிறீர்களா? சமூக நீதிக்கான திட்டங்களை நிறுத்திவிடச் சொல்கிறீர்களா? இதுதான் உங்கள் கட்சியினுடைய கொள்கையா? அதை நீங்கள் தெளிவுபடுத்துங்கள். (குறுக்கீடுகள்) சமூக நலத் திட்டங்களை அதிகப்படுத்துவதன்மூலம்தான் தனிநபர் வருமானமும் கூடியிருக்கிறது. அதை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள். முக்கால் மணி நேரம் ஆகிவிட்டது.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் திட்டங்களின் முன்னோடி திராவிட முன்னேற்றக் கழகம். எந்த சமூக நலத் திட்டங்களையும் தடுக்கவோ, நிறுத்தவோ நாங்கள் சொல்லவில்லை. ஆனால், அரசு திட்டங்களையே நம்பி மக்கள் வாழ்ந்தால் என்றைக்கு நாம் Sustainable Development Goals என்று சொல்லக்கூடிய அந்த நிலைக்கு நம்முடைய மக்களை நாம் எடுத்துச் செல்வோம் என்ற கேள்விக்கான பதிலை முன்னால் வைத்துவிட்டு நீங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கை.

பள்ளிக்கூடங்களில் NEET தேர்வு மையங்கள் இருக்கின்றன. 93 சதவிகிதம் நம்முடைய மாணவர்கள் +2-வில் தேர்ச்சி பெறுகிறார்கள். ஆனால் NEET தேர்வில் தேர்வு செய்யப்பட்டவர்கள் வெறும் 4 பேர். சென்னையில் இருக்கக்கூடிய IIT-ல் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய இடம் ஏழே ஏழு இடம். இதை நாம் தெளிவாகப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

பெண்கள் பாதுகாப்பை உயர்த்துவதற்கு 'நிர்பயா நிதி'. நேற்றைக்குக்கூட பேசினார்கள், மத்திய அரசு கொடுத்த நிதியில் 17 கோடி ரூபாய் செலவு செய்யப்படவில்லை. அம்மாவின் அரசு என்று சொல்கிறீர்கள், பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். அண்மையில் மதுரை பேருந்து நிலையத்தில் பாலூட்டும் அறையில் மது குடிக்கின்ற செயல் பற்றிய செய்தி, சமூக வலைத்தளங்களில் வெளியானது. பொதுமக்கள் மத்தியில் நிறைய comments வந்தது. என்னவென்றால் இது பாலூட்டுவதற்காகக் கட்டப்பட்டதா அல்லது மது அருந்துவதற்காகக் கட்டப்பட்டதா என்று. இதையெல்லாம் நீங்களும் பார்த்திருப்பீர்கள். பெண்களின் பாதுகாப்பு இன்னும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். 'நிர்பயா நிதி' போன்ற திட்டங்களில் கிடைக்கக்கூடிய நிதியை பயன்படுத்தி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்தவுடன் பேசலாம் என்றிருந்தேன். ஆனால் உறுப்பினர் பேசிக்கொண்டேயிருக்கிறார். உரையை முடிக்கப்போவதில்லை என்று தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை அவர் முடித்துவிடுவார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் உரையாற்ற 5 நிமிடங்கள் கேட்டார்கள். பேசி முடித்தவுடன் நான் பேசலாம் என்று நினைத்தேன். NEET தேர்வு பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். நான் ஒன்றே ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அரசின் சார்பாக NEET தேர்வுக்கு பயிற்சி அளிக்கும் மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான்; 2 இலட்சம் ரூபாய் கொடுத்தால்தான் தனியார்மூலம் NEET தேர்வுக்காக பயிற்சி பெற முடியும். அந்த நிலையை மாற்றிக் காட்டியது இந்த அரசு. இந்த ஆண்டு +2 பாடத் திட்டத்தில் கொண்டுவந்திருக்கும் பாடங்களை படித்தாலே, எதிர்காலத்திலே NEET தேர்வின் 80 சதவிகித வினாக்களுக்கான விடைகள் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கூறினார். நீங்கள் இருந்தபோதும் இருந்த நிலையை மாற்றி இப்போது நாங்கள் படிப்படியாக அதற்கான திட்டங்களைத் தீட்டி, தனியார் மூலமாக, சமூக நிறுவனங்கள் மூலமாக CSR fund மூலமாக ஏறத்தாழ 117 கோடி ரூபாய்க்கு பல்வேறு இடங்களில் கட்டமைப்புகளைத் தொடர்ந்து உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். அதேபோல compound சுவர்கள், புதிய கட்டடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. கூரை போடப்பட்டிருக்கிற இடங்கள் எல்லாம் concrete கட்டடங்களாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதுபோன்ற அடிப்படை வசதிகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. உங்களைக்காட்டிலும், சிறப்பான

*2020 பிப்ரவரி 18*][திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

*முறையிலே—மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதியை வழங்குவது மட்டுமல்ல, தமிழகத்திலே பள்ளிக் கல்வித் துறை வரலாற்றை படைத்துகொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 12-35*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது பாலூட்டும் அறைகளைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய தாய்மார்கள் பொது இடங்களில் குழந்தைக்குப் பாலூட்டுவதில் ஏற்படும் சிரமத்தை அறிந்து, அதனைத் தவிர்ப்பதற்காக, தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்காக ஓர் அறையை அமைப்பது என்கிற ஒரு திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள்.*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், சமூக வலைதளங்களில் ஏதாவது போடுவார்கள், ஏதோ ஓர் இடத்தில் அதுபோன்று தவறாக நடந்திருந்தால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். பாலூட்டும் தாய்மார்களுக்காகத்தான் அந்த அறை கட்டப்பட்டுள்ளது. பெண்களுடைய சிரமத்தை எண்ணி, அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்காகக் கொண்டு வந்ததா அல்லது இதற்காகக் கொண்டு வந்ததா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் பேசுகிறார். இப்படிப் பேசுவதே தவறு. பெண்கள் பொது இடங்களில் சிரமப்படக் கூடாது என்பதற்காகக் கொண்டு வந்த திட்டம் அது. அதனை கொச்சைப்படுத்தக்கூடாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு)*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் கொஞ்சம்தான் உள்ளது. (குறுக்கீடு) சீக்கிரம் முடித்து விடுகிறேன்.*

[2020 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து முக்கால் மணி நேரம் ஆகிவிட்டது. சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில், வேலைவாய்ப்பற்றவர்கள் சராசரியாக 4.6% என இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை 7.6%-ல் இருக்கிறது. அரசுத் துறைகளில் பல்லாயிரக்கணக்கான இடங்கள் காலியாக உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் புதிதாக புள்ளிவிவரங்களுக்குள் போகிறீர்கள். நேரமாகிக் கொண்டிருக்கிறது. சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் எனது உரையை முடித்துவிடுகிறேன். நிதிநிலை அறிக்கையில் சாலை விபத்து இல்லாத தமிழ்நாடு என்று ஓர் அழகான வார்த்தை இருக்கிறது. அந்த வார்த்தையைப் பார்க்கும்போது மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. எங்களுடைய குமரி மாவட்டத்தில் மட்டும் சென்ற ஆண்டில் 1,421 விபத்துகளில், 211 பேர் மரணம், நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம், பலர் நிரந்தர ஊனமடைந்துவிட்டார்கள். சாலைகளுக்கு tender விடப்பட்டு, அது காலாவதியான பிறகும், அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, தயவுசெய்து அதைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

பத்து பேரில் ஒருவர் புற்று நோயினால் இறக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்று இன்றைக்கு உலக சுகாதார அமைப்பு கூறியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு பேசியபோது, வேளாண் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை, விவசாயிகளுக்குத் தேவையான வசதிகள் செய்யப்படவில்லை என்ற குறையை இங்கே சுட்டிக்காட்டினார்.

*2020 பிப்ரவரி 18]* [திரு. இரா. துரைக்கண்ணு]

*மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் என்பதால், விவசாயிகளுக்கு ஒரு சிறு துரும்பு அளவு இன்னல்கள் ஏற்பட்டாலும், தனக்கு ஏற்பட்டதுபோல், அதனைத் தானே ஏற்றுக்கொண்டு, விவசாயிகளுடைய நலனிற்காக, அவர்கள் விளைவித்த விவசாய விளை பொருட்களுக்காக, விலையை மட்டும் பரிந்துரைப்பதோடு மட்டுமல்லாமல் விளை பொருட்களை வைப்பதற்குண்டான கிட்டங்கிகளையும், குளிர்பதனக் கிடங்குகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு நெல்லிற்கு, மோட்டா இரகத்திற்கு குவிண்டாலுக்கு 1,865 ரூபாயும், சன்ன இரகத்திற்கு குவிண்டாலுக்கு 1,905 ரூபாயும், சோளம் ஒற்றை இரகம் குவிண்டாலுக்கு 2,550 ரூபாயும், கம்பு குவிண்டாலுக்கு 2,000 ரூபாயும், கேழ்வரகுக்கு குவிண்டாலுக்கு 3,150 ரூபாயும், மக்காச் சோளத்திற்கு குவிண்டாலுக்கு 1,760 ரூபாயும், துவரைக்கு குவிண்டாலுக்கு 5,800 ரூபாயும், பச்சை பயறுக்கு குவிண்டாலுக்கு 7,050 ரூபாயும், கொண்டைக் கடலைக்கு குவிண்டாலுக்கு 4,620 ரூபாயும், உளுந்திற்கு குவிண்டாலுக்கு 5,700 ரூபாயும், நிலக் கடலைக்கு குவிண்டாலுக்கு 5,090 ரூபாயும் என விலைகளை கிடைக்கச் செய்து, இன்றைக்கு விவசாயிகள் விளைவிக்கின்ற பொருட்களுக்குத் தகுந்த விலையை நிர்ணயிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்குரிய பாதுகாப்பையும் தருகின்ற அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் நடக்கின்ற அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோ தங்கராஜ், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. வாய்ப்பில்லை. நேரமாகிவிட்டது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முகவரியைக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது தொகுதி பணிகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற எங்கள் மாவட்ட அமைச்சர்களான, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.சி. கருப்பணன் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த அவைக்கு அனுப்பி வைத்த எனது தொகுதி மக்களுக்கும், எனக்கு உறுதுணையாக இருக்கின்ற கழகப் பொறுப்பாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சியின் மூன்று ஆண்டுகள் முடிவுற்று, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் சாதனை முதல்வர், ராசியான முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கும் விதத்தில், நான் எனது உரையை 20 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவிற்குப் பின்னர், இந்த அரசின் ஆட்சி நீடிக்காது, ஆட்சி மாறிவிடும் என்றெல்லாம் சிலர் கூறி வந்தனர். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில், அவர்தம் நல்லாசிகளுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மிகத் திறமையுடன் செயல்பட்டு வரும் அம்மாவின் அரசு, அனைத்து விமர்சகர்கள் மற்றும் எதிர்ப்பாளர்களின் கருத்துகளைப் பொடிப்பொடியாக்கி தொடர்ந்து நல்லாட்சி புரிந்து வருவதோடு மட்டுமல்லாமல், மென்மேலும் வலுவடைந்து, மக்கள் நம்பிக்கையைப் பூரணமாகப் பெற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில், துணை முதல்வர் ஒத்துழைப்போடு பீடு நடை போட்டு வருகிறது.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நிருவாகத் திறமையால், 2019 ஆம் ஆண்டின் சிறந்த ஆட்சிக்கான, நல் ஆளுமை விருதினை மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. மேலும், இந்தியா டுடே பத்திரிகை, தொடர்ந்து இரண்டாண்டுகளாக சிறப்பாகச்

*2020 பிப்ரவரி 18*][திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்]

செயல்பட்டு வருகின்ற மாநிலம் என்று நமது தமிழகத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்னும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் பல்வேறு நலத் திட்டங்களை இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் நமது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதை, நல் உள்ளம் கொண்டோர் அனைவரும் வரவேற்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக சிலர் உள்ளேயும், வெளியேயும் தொடர்ந்து குறை கூறிக்கொண்டு வந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் ஒத்துழைப்போடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் நாளன்று மத்திய அரசு வெளியிட்ட நல் ஆளுமைத் திறனுக்கான குறியீட்டுப் பட்டியலில், ஒட்டுமொத்த தரவரிசையில், நாட்டிலுள்ள 18 பெரிய மாநிலங்களில், தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்று, ஏளனம் செய்தவர்களுக்குப் பதிலடி கொடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியா டுடே பத்திரிகை நவம்பர் 2019-ல் "மாநிலங்களின் நிலை" என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் "ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க மாநிலம்" என்று தமிழ்நாடு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தியாவிலேயே சிறந்த நிருவாகத் திறமைமிக்க முதலமைச்சராக நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் விளங்குகிறார் என்பதை இந்தியாவுக்கே வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கான இழப்பீட்டுத் தொகை இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும், விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளில், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கான இழப்பீட்டுத் தொகை நான்கு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும், விபத்தினால் நிரந்தரமாக ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகை இரண்டு இலட்சம் ரூபாய் வரையும் கணிசமாக

உயர்த்தி வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக 250 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது தமிழக மக்களின்மீது உள்ள அக்கறையை எடுத்துக் காட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார வளர்ச்சியையும், மக்கள் நல்வாழ்வினையும் பேணுவதற்காக சட்டம்-ஒழுங்கைத் திறம்படக் கையாள்வது முக்கியமானதாகும். இதற்காக மொத்தமாக 8,876.57 கோடி ரூபாய் காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழக மக்கள் நலனுக்காகவும், தமிழகம் அமைதிப் பூங்காவாக இருப்பதற்கும், தொடர்ந்து காவல் துறை தனது பணியைத் திறம்பட செய்வதற்கும் இந்த நிதியை ஒதுக்கீடு செய்திருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பாதுகாப்பு என்பது இன்றியமையாத ஒன்றாகும். 2018 ஆம் ஆண்டில் சிறப்பான சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான விருதை, மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு பெற்றதும், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டில் சாலை விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 38.87 சதவிகிதம் குறைந்துள்ளதும், அவசர சிகிச்சைப் பிரிவில் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 8.3 சதவிகிதத்திலிருந்து 2.7 சதவிகிதமாகக் குறைந்துள்ளதும், 'சாலை விபத்தில்லா தமிழ்நாடு' என்ற இலக்கை அடைவதற்காக, அனைத்து முயற்சிகளை மேற்கொள்வதும், சாலைப் பாதுகாப்பிற்கான நிதியொதுக்கீடு 500 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும், தமிழ்நாடே வரவேற்கக்கூடிய விஷயமாகும். இதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், நிதி ஒதுக்கீட்டை அறிவித்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகத்திற்கென 1,403.17 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீதி நிருவாகத்தின்மீது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொண்டுள்ள அக்கறையை இது எடுத்துக்காட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பகுதியினை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

அறிவித்தது, தமிழக அரசு வேளாண்மைத் துறைக்கு அளித்துவரும் பெரும் முக்கியத்துவத்தையே உணர்த்துகிறது. தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயிகள், துறை அதிகாரிகளைத் தொடர்புகொண்டு பெறுவதற்கு “உழவர்-அலுவலர் தொடர்புத் திட்டத்தை” அரசு அறிமுகம் செய்யும் என்ற அறிவிப்பும், 2020-2021 ஆம் ஆண்டில் 1,844.97 கோடி ரூபாய் செலவில் 7.41 இலட்சம் ஏக்கர் நிலங்கள் நுண்ணீர்ப் பாசன வசதி பெற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த நடவடிக்கை, சத்தமில்லாமல், விளம்பரமில்லாமல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோர் விவசாயிகள்மீது வைத்துள்ள அக்கறையை எடுத்துக்காட்டுகிறது.

2020-2021 ஆம் நிதியாண்டில் பயிர்க் கடனாக மொத்தம் 11,000 கோடி ரூபாய் கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக வழங்கப்படும் என்ற அறிவிப்பு விவசாயிகள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளதாக அமைந்துள்ளது.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையை மேலும் வலுப்படுத்தும் விதமாக, சேலம் மாவட்டம், தலைவாசலில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கால்நடை அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான மேம்பட்ட நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டியுள்ளார்கள். எதிர்கால விவசாய சந்ததிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமராமத்துத் திட்டத்தின்கீழ், இதுவரை 4,865 பணிகளை 930.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு, 4,059 பணிகள் நிறைவடைந்துள்ளதும், 2020-2021 ஆம் ஆண்டில் 1,364 நீர்ப்பாசன பணிகள் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதும், 5,000 ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள சிறிய பாசன ஏரிகள், கிராம ஊராட்சிகளின் பராமரிப்பில் உள்ள 25,000 குளங்கள் மற்றும் ஊருணிகளுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டு வருவதும், இதுவரை மொத்தம் உள்ள 30,000 பணிகளில் 21,444 பணிகள் நிறைவடைந்துள்ளதும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குடிமராமத்து நாயகன் என்பதையும் விவசாயிகளின் விடிவெள்ளி என்பதையும் இது தமிழக மக்களின் தாகத்தை நிரந்தரமாகத் தீர்க்க எடுக்கும் முயற்சி என்பதையும் இது உணர்த்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்][2020 பிப்ரவரி 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறைக்கு 1,229.85 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மீனவர்களுடைய நண்பன் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வில், 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5,306.95 கோடி ரூபாயும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 6,754.30 கோடி ரூபாயும் நிதிப்பகிர்வாக வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற, நகர்ப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகளை மேற்கொள்ள அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டுக்குரியது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஊரக வளர்ச்சித் துறைக்காக 23,161.54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது கிராமப் பகுதி மக்களின் வாழ்வின் வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நெடுஞ்சாலைத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை 15,850.54 கோடி ரூபாயாக கணிசமாக உயர்த்தியுள்ளது, சாலைகளின் தரத்தை உயர்த்துவதுடன், தமிழக மக்கள் பயணம் செய்வதற்கும், கால நேரம் சேமிப்பாவதற்கும் அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் பயனுள்ளதாக அமையும் என்பது நிச்சயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசு பேருந்து கட்டணங்களை உயர்த்தாமல் வைத்திருப்பதுடன், பேருந்துகளில் பயணம் செய்யும் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், கண்காணிப்புக் கேமராக்கள் அனைத்துப் பேருந்துகளிலும் பொருத்தப்படும் என்ற செய்தியும், 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 2,716.26 கோடி ரூபாய் போக்குவரத்துத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும், பாதுகாப்பான பயணத்திற்கு பயனுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடையில்லா மின்சாரத்தை வழங்கி தமிழக மக்கள் தடையில்லா வாழ்க்கை வாழ்வதற்கும், தடையில்லா நம்பகமான மின் வசதியை தொடர்ந்து வழங்குவதற்கும், கிராமப்புற, நகர்ப்புறப் பகுதிகளில் மின் விநியோக

உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துத் துறைகளுடன் ஒப்பிடும்பொழுது பள்ளிக் கல்வித் துறைக்கு வரவு-செலவுத் திட்டத்தில் அதிகபட்சமாக 34,181.73 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத் தமிழகத்தைப் பாதுகாப்பதற்கும், வருங்கால சந்ததிகளை உருவாக்குவதற்கும் தமிழகத்தில் படிப்பதற்கும் குறையே இல்லாத அளவிற்கு பள்ளி மாணவ, மாணவியருக்குப் புத்தகப் பைகள், பள்ளிச் சீருடைகள், காலணிகள், குறிப்பேடுகள், பாடப் புத்தகங்கள், வடிவியல் பெட்டிகள் மற்றும் வண்ணப் பென்சில்கள் ஆகிய படிப்புக்குத் தேவையான பொருட்களை விலையின்றி வழங்குவதன்மூலம் குழந்தைகளை பள்ளியில் தக்கவைப்பதை அரசு உறுதிசெய்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலேயே சுகாதாரத்துறையில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரண்டு பேறுகாலம் வரை 18,000 ரூபாய் நிதியுதவியாக வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் மட்டுமே 99.9 சதவிகிதப் பிரசவங்கள் மருத்துவமனையில் நடைபெறுவது, இத்திட்டத்தின் வெற்றியைச் சுட்டிக்காட்டுகிறது. இதில் 65 சதவிகித பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 60.64 இலட்சம் ஏழை கர்ப்பிணித் தாய்மார்கள் 6,033.81 கோடி ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளனர். உதவித் திட்டத்தினை செயல்படுத்த 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 959.21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்காக 1,033.29 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழகத்தின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை ஏழையெளிய மக்களின் மீதும் குறிப்பாக பெண்கள் மீதும் கொண்டுள்ள அக்கறையை சுட்டிக்காட்டியுள்ளது பாராட்டுக்குரியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின் மூலமாக 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களுக்காக 726.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அம்மா இரு

சக்கர வாகனத் திட்டத்தின்கீழ் இதுவரை 1.88 இலட்சம் பணிபுரியும் மகளிருக்கு இரு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டிலும் 253.14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்ற செய்தி பெண்களின் சுய முன்னேற்றத்திற்கு பெரும் உதவியாக அமையும் என்பதை அம்மாவின் அரசு நிரூபித்துள்ளது.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் முன்னேற்றமடைய, 2020-2021 ஆம் ஆண்டிற்கு 4,109.53 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாவலன் அம்மாவின் அரசுதான் என்பதைத் தொடர்ந்து நிரூபித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிடிக்காதவர்களுக்கு, எதைச் செய்தாலும் குற்றம் என்று நினைப்பவர்களுக்கு மத்தியில், நான் ஒரு விவசாயி என்று வெளிப்படையாகத் தெரிவித்து விவசாயினுடைய கஷ்டங்கள், கூலித் தொழிலாளருடைய கஷ்டங்கள், நெசவுத் தொழிலாளருடைய கஷ்டங்கள், கட்டுமானத் தொழிலாளருடைய கஷ்டங்களை உணர்ந்தும், அவர்களின் கஷ்டங்களைப் போக்கியும் எதிர்காலத்தை மனதில் வைத்தும் நமது முதல்வர் அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வயற்காட்டில் இறங்கி வேட்டியை மடித்துக்கட்டி, தலையில் உருமாலையைக் கட்டி, பயிரைக் கையில் எடுத்து, அந்த விவசாயியிடம், "ஏன் வளர்ச்சி அடைவதற்கு யூரியா போடவில்லை" என்று கேட்க முடியும். ஏன் எடை வருவதற்கு பொட்டாஷ் போடவில்லை என்று கேட்க முடியும். ஆனால் மற்றவர்கள் போட்டோவுக்கு pose கொடுக்க உருமாலையைக் கட்டலாம், வேட்டியை மடித்துக் கட்டலாம், கூலிங் கிளாஸ் அணியலாம். கலர் கலராக சர்ட்டையும், பேண்ட்டையும் அணியலாம். ஆனால் தமிழக மக்களுக்கு நன்கு தெரியும் யார் எதைச் செய்தால் பொருத்தமாக இருக்குமென்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அப்பா முதலமைச்சரோ, பாட்டன் மத்திய அமைச்சரோ கிடையாது. சாதாரண விவசாய குடும்பத்தில்

பிறந்து கஷ்டங்களை உணர்ந்து மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டவர். மாண்புமிகு முதல்வருக்கு செயற்கையான விளம்பரம் தேவையில்லை. இவரின் இயல்பான குணமும், எளிமையான இயல்புமே இவருடைய பக்க பலம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பக்கம் சிலர் பதவிக்கு வர துடித்துப்போய், நிருவாகத் திறமையில்லை என்று சொல்கிறார்கள். மறுபக்கம் இந்தியாவில் தமிழ்நாடு சிறந்த நிருவாகத் திறன் மிக்க மாநிலம் என்று தகுதியுடையோர் ஆதாரப்பூர்வமாகத் தெரிவிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் செயல்படாத அரசு என்று பச்சை பொய்யை வாய் கூசாமல் பேசுகிறார்கள். ஆனால், இந்திய அரசாங்கம் தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்கு சிறப்புமிக்க விருதை வழங்கி வருகிறது. உச்சகட்டமாக, தமிழகத்தில் பாதுகாப்பில்லை, சட்டம்–ஒழுங்கு சரியில்லை என்கிறார்கள். ஆனால், வெளிநாட்டு அதிபரும், இந்தியப் பிரதமரும் சந்திக்க அமைதிப் பூங்காவான தமிழகத்தைத் தேர்ந்தெடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) வந்து சென்று தமிழக முதல்வரையும், அரசையும் பாராட்டிச் செல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, உரையை முடியுங்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மக்கள் குறிப்பாக பெண்கள் சுதந்திரமாகச் சென்று வரும் அளவிற்கு சட்டம்–ஒழுங்கும், பாதுகாப்பும் தமிழகத்தில்தான் உள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. இப்படி எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்ற தமிழக அரசையும், தமிழக முதல்வரையும் சிலர் குறை கூறுவது என்பதை மக்கள் வேறுமாதிரி நினைக்க ஆரம்பித்துவிட்டனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன நேரத்திற்கு முன்னாடியே முடித்துவிடுகிறேன் என்பதை பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். முடியுங்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் கூட்டத்தில் எனது கன்னிப் பேச்சில், எனது முதல் கோரிக்கையாக நான்

வலியுறுத்தியது, ஒரு பக்கம் பவானி ஆறும், மறு பக்கம் காவேரி ஆறும் ஓடிக் கொண்டிருந்தாலும், அந்தியூர் தொகுதியின் மையப் பகுதி வானம் பார்த்த பூமியாக இருக்கிறது. விவசாய மக்களின், பொதுமக்களின் நீண்ட நாள் கனவு இப்பகுதியில் உள்ள ஏரி, குளங்களுக்கு மணியாச்சி மற்றும் மேட்டூர் வலதுகரை வாய்க்கால் திட்டத்தின்மூலம் தண்ணீரைக் கொண்டு வர வேண்டும் என்பதாகும். எனது கோரிக்கையினை மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவுப்படி, மாண்புமிகு அமைச்சரான தாங்கள், 2016 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் மணியாச்சி திட்டத்தின் ஆய்வுப் பணியை அறிவித்தீர்கள். ஆய்வுப் பணியை அலுவலர்களும் மேற்கொண்டு வந்தனர். நானும் ஒவ்வொரு கூட்டத் தொடரின்போதும் தங்களிடம் வலியுறுத்தி வருகிறேன். தமிழக முதல்வரான தாங்களும், அரசு விழாவில் எனது கோரிக்கையினை நிறைவேற்றித் தருவதாகத் தெரிவித்துள்ளீர்கள். தற்போது, இன்னொரு திட்டமான தோணிமடுவு திட்டமும் விவசாய மக்களாலும், பொதுமக்களாலும் வலியுறுத்தப்பட்டு வருவது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இம்மூன்று திட்டங்களால் அந்தியூர் பகுதி மட்டுமல்லாமல், பவானி தொகுதியிலுள்ள அம்மாபேட்டை ஒன்றியத்தின் பல்வேறு பகுதிகளும் பயனடையும் என்பதால் பவானி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன் அவர்களும் மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்காகவும், பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும், செயல்படுத்தியும் வருகிறார்கள். இதனால் எனது தொகுதியிலுள்ள விவசாய மக்களும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தொகுதியில் உள்ள பல பகுதி விவசாயிகளும், முதல்வர்மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு சாட்சியாக மேற்கண்ட திட்டங்களினால் பயனடையும் பகுதியில், நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் மாபெரும் வெற்றியைத் தந்துள்ளார்கள். இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் அம்மாபேட்டை ஒன்றியத்தில் உள்ள ஐந்து ஊராட்சிகளும், ஐந்து

ஒன்றியக் குழு வார்டுகளும் அந்தியூர் தொகுதிக்கு உட்பட்டது. இதில் நான்கு ஒன்றிய கவுன்சிலர் பதவிக்கு கழகத்தின் சார்பில் போட்டியிட்டார்கள். நான்கிலும் மகத்தான வெற்றியைப் பெற்றார்கள். நான்கு ஊராட்சிகளில் கழகம் மற்றும் கழகத்தின் ஆதரவில் போட்டியிட்ட நான்கு பேரும் மகத்தான வெற்றி பெற்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, முடியுங்கள்.

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** அதேபோல அந்தியூர் ஒன்றியத்தில் மேற்கண்ட திட்டத்தில் பயனடையும் பெரிய ஏரிகளான எண்மங்கலம் ஏரி, கெட்டிசமுத்திரம் ஏரி, அந்தியூர் ஏரி, சந்தியபாளையம் ஏரி, வேம்பத்தி ஏரி போன்ற பகுதிகளின் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் பதவிகளுக்கு கழகம் மற்றும் கூட்டணி சார்பில் போட்டியிட்டவர்கள் முழுமையாக வெற்றி பெற்றனர். மேலும், அந்தியூர், அம்மாபேட்டை ஒன்றியக் குழு தலைவர்களும் கழகத்தின் சார்பில் வெற்றி பெற்றுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை பெற்றெடுத்த தொகுதி எனது அந்தியூர் தொகுதியாகும். இதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே தொலைக்காட்சி நிகழ்ச்சியில் வெளிப்படுத்தியுள்ளார். எனவே, தமிழக முதல்வர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, தங்களைப் பெற்றெடுத்த தொகுதிக்கு நீங்கள் நிச்சயம் மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு மேலாக மாண்புமிகு தமிழக முதல்வரிடம் உரிமையோடு கேட்டு வருகிறேன். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வரை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்வது, உங்களைப் பெற்றெடுத்த தொகுதி மக்கள் காலத்திற்கும் உங்கள் பெயரைச் சொல்ல மணியாச்சி திட்டம், மேட்டூர் வலதுகரை வாய்க்கால் திட்டம் மற்றும் தோணிமடுவு திட்டத்தின்மூலம் பவானி மற்றும் காவேரி ஆறுமூலம் பயனடையாத பகுதிகளுக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த, வருகின்ற நடப்பாண்டில் முதல் கட்ட நிதியை ஒதுக்கி தங்களுக்கு வெற்றியைத் தேடித்தந்த மக்களுக்குப் பரிசாக அறிவிக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பெற்றெடுத்த அந்தியூர் தொகுதி மக்களின் சார்பாக தங்களின் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.*

**திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் வசதிக்காகவும், சென்னை மாநகர நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவுமான திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்தில் இருக்கும் என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அது என்னவென்றால், தமிழகத்தின் மத்திய பகுதியில் தலைமைச் செயலகம் அமையுமா என்பதுதான். இதனால் தமிழக மக்களுக்கு சௌகரியமாக இருப்பதோடு சென்னை மாநகரப் போக்குவரத்து நெரிசலும் குறையும் என்று மக்கள் நினைக்கின்றார்கள்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக அரசை காலந்தொட்டு ஆதரித்துக் கொண்டிருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள். அவர்களின் தொகுப்பு வீடுகளைப் பராமரிப்பு செய்வதற்கு தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் ஒட்டுமொத்தமாக கணக்கெடுக்கப்பட்டு, அதற்குண்டான நிதியை வழங்க தங்களின் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதோடு, இது மற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையாகவும் இருக்கும் என்பதையும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையின்கீழ் செயல்படுகின்ற அரசில், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள நிதிநிலை அறிக்கையானது தமிழக மக்களின் பாதுகாப்புக்கும், ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் சிறந்த நிருவாகத்திற்கும் பயன்படுகின்ற அருமையான நிதிநிலை அறிக்கையாகும். நல் உள்ளம் கொண்டோர் அனைவரும் பாராட்டும் நிதிநிலை அறிக்கையாகும். எனவே, சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு மக்களின் சார்பாக பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கையின்மீது கழகத்தின் சார்பில் பேச வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு*

துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும் வாய்ப்பளித்த பேரவைத் தலைவரான தங்களுக்கும் நன்றியினைக் கூறி, நீங்கள் உரையை முடிக்கச் சொன்ன நேரத்திற்கும் முன்பாகவே எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர. முத்தமிழ்செல்வன் அவர்கள்.

***திரு. ர. முத்தமிழ்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க! (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மாவின் புகழ் ஓங்குக! வெல்க, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்! மன்னாதி மன்னன், மக்கள் திலகம், சத்துணவு தந்த சரித்திர நாயகன், ஏழைகளின் இதயங்களில் இன்றளவும் கொலுவீற்றிருக்கிற ஒளி விளக்கு, மாண்புமிகு இதய தெய்வம் பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், ஒட்டுமொத்த உலகத் தமிழ் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து, இன்றும், என்றும், இந்த நாட்டு மக்களுக்காக, தன்னையே அர்ப்பணித்து தவ வாழ்க்கை வாழ்ந்து, பிறருக்குச் சேவை செய்வதே பிறவி எடுத்ததன் பயன் என்கின்ற வகையில், நாட்டுக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த ஞானிகள், தலைவர்கள் இருந்த, இருக்கிற, இப்பாரதக் கண்டத்தில் ஏராளமானோர் வாழ்ந்திருக்கிறார்கள். பொது நலம் ஒன்றே என்னும் குறிக்கோளுடன் வாழ்ந்தவர்களில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவும் ஒருவர். எனக்குப் பின்னும் இந்த இயக்கம் 100 ஆண்டுகள் ஆட்சியில் இருக்கும்; மக்கள் பணியாற்றும் என்று சூளுரைத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ் காத்து, தமிழகம் காத்து, தன்னலம் கருதாமல், பொது நலனுக்காகவே தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து, மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்றும், என் கடன் பணி செய்து கிடப்பதே என்கிற திருநாவுக்கரசரின் வாக்கினை மெய்ப்பித்தும், தன்னுடைய சீரிய திட்டங்களால் மக்கள் மனதில் இன்றும், என்றும், வாழ்ந்து கொண்டிருப்பவர் முத்தமிழ்த் தாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி சங்கரர், இராமானுஜர், மகாவீரா, புத்தர் ஆகிய சமய ஞானிகள், காந்திஜி, நேதாஜி போன்ற தேசத் தலைவர்கள், இவர்களெல்லாம் சேவைக்கென்றே தங்களை அர்ப்பணித்துக்

[திரு. ர. முத்தமிழ்செல்வன்] [2020 பிப்ரவரி 18

கொண்ட தலைவர்கள். அந்த வரிசையிலே தன் கண் முன்னே வலுவோடும், பொலிவோடும், நல்லாட்சி புரிந்து, தன்னுடைய தொலைநோக்குத் திட்டங்களால், சிந்தனையின் வாயிலாக சேவையைத் தவிர தனது தேவை என்ற ஒன்றை அறியாத மனிதருள் மாணிக்கம், மாட்சிமைப் பொருந்திய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, ஒன்றரைக் கோடி தொண்டர்களின் இதயத்திலே தெய்வமாய் கொலுவீற்றிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய இரு பெரும் தங்கத் தலைவர்கள் மீளாத் துயில் கொண்டுள்ள வங்கக் கடலோரம் நோக்கி என்னுடைய கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி என்னுடைய கன்னிப் பேச்சினைப் பணிவோடு துவங்குகிறேன்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆகியோர் அலங்கரித்த இந்த அவையிலே விழுப்புரம் மாவட்டம், காணை ஒன்றியம், விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட, எங்கோ இருக்கிற கல்பட்டு என்னும் குக்கிராமத்திலே ஊராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றிய தம்பதியர் ஆசிரியர் திரு. எம். ரங்கநாதன், திருமதி இந்திராணி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்து, 1985 ஆம் ஆண்டு காணை ஒன்றியக் கழகத்தினுடைய துணைச் செயலாளராகவும், கல்பட்டு கிளைக் கழகச் செயலாளராகவும் பணியாற்றி, 1997 ஆம் ஆண்டு மனிதப் புனிதர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சந்திக்கும் நல்வாய்ப்பினைப் பெற்றேன். அந்த ஆண்டு முதல் ஒன்றியக் கழகத்தினுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா பேரவையின் செயலாளராகவும், 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை காணை ஒன்றியக் குழு துணைத் தலைவராகவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2015–ல் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றிய எனக்கு, விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுகின்ற அரிய வாய்ப்பினைத் தாயுள்ளத்தோடு வழங்கி, விக்கிரவாண்டி தொகுதி முழுவதும் தங்களுடைய அயராத உழைப்பினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசின் சாதனைகளைக் கருவறை முதல் கல்லறைக்குச் செல்கின்ற வரையில் நலத் திட்டங்களையெல்லாம் குறிப்பாக, தாய்மார்கள் பயனடையக்கூடிய திட்டங்களை மக்களிடத்தில் எடுத்துச்

*2020 பிப்ரவரி 18]* [திரு. ர. முத்தமிழ்செல்வன்]

சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சூறாவளி சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார்கள்.

விக்கிரவாண்டி தேர்தல் களத்திலே தருமரைப்போல பணியாற்றிய சேலத்து சிங்கம், கொங்குநாட்டுத் தங்கம், விவசாயக் குடிமகன், சாதனை நாயகன், (மேசையைத் தட்டும் ஒலி) இரும்பு தேசத்து கரும்பு மனிதர், மக்களின் மனம் கவர்ந்த தலைவர், சாமானிய மனிதரும் எளிதில் சந்திக்கக்கூடிய ஏற்றமிகு முதல்வர், கழக இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது பணிவான இதயம் கனிந்த வணக்கத்தினையும், நன்றியையும் இந்தப் பேரவையின் வாயிலாக மெத்த பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பீமரைப்போல பணியாற்றிய ஜல்லிக்கட்டு நாயகன், 10 முறை பேரவையில் நிதிநிலை அறிக்கை தந்த, நிதித் துறையின் நீதி வழுவா மன்னன், தேனி மாவட்டம் தந்த தேனிசைத் தென்றல், கழக ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மரியாதைக்குரிய அண்ணன் அவர்களை இந்த நேரத்தில் பணிவோடு, நன்றியோடு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் தகுதியினை எனக்கு ஏற்படுத்தித் தந்து, கண்ணை இமை காப்பதுபோல, என்னை பரிந்துரை செய்து, நடைபெற்ற தேர்தல் களத்தில் தன்னுடைய மதிநுட்பத்தால், அரசியல் வியூகத்தால், மகாபாரதப் போரிலே எதிரிகளின் (மேசையைத் தட்டும் ஒலி) இரத, கஜ, துரக, பதாதி எனும் நால்வகை சேனைகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்து வெற்றி வாகைசூடிய அர்ச்சுனனைப்போல, அல்லும், பகலும் அயராது உழைத்து, மாவட்டத்திற்குப் பல்வேறு நலத் திட்டங்களைப் பெற்றுத் தந்து எனது வெற்றிக்காகப் பாடுபட்ட விழுப்புரம் மாவட்டத்தின் விடிவெள்ளியும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவரும், விழுப்புரம் மாவட்டத்தில் கழகத்தை வலுவோடும், பொலிவோடும் வழிநடத்திக் கொண்டிருக்கும் விழுப்புரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற எங்களின் வழிகாட்டி, எங்களது பாசத்திற்குரிய அண்ணன் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டம்,

[திரு. ர. முத்தமிழ்செல்வன்] [2020 பிப்ரவரி 18

நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்களை, இந்த நேரத்தில் பணிவோடு, உளப்பூர்வமாக வணங்கி, நெஞ்சார்ந்த நன்றியினை இந்த மாமன்றத்தில் பணிவுடன் பதிவு செய்துகொள்கிறேன்.

எனது வெற்றிக்கு அரும்பாடுபட்ட அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தலைமைக் கழக நிருவாகிகளுக்கும், கழக மகளிர் அணி பொறுப்பாளர்களுக்கும், அனைத்து மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, பேரூர் கழக, கிளைக் கழகத்தினுடைய செயலாளர்களுக்கும், கழகத்தின் அனைத்துப் பிரிவு நிருவாகிகளுக்கும், ஆல விருட்சம்போல் இருக்கின்ற இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் கழகத்தை, ஆணி வேராகக் காத்துக்கொண்டிருக்கின்ற, கண்ணை இமைக் காப்பதுபோல் காத்துக் கொண்டிருக்கிற, கிளைக் கழகத்தினுடைய செயலாளர்களுக்கும், ஊராட்சிக் கழக நிருவாகிகளுக்கும், கழக உறுப்பினர்களுக்கும், அனைத்துக் கூட்டணிக் கட்சி மற்றும் தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும், நிருவாகிகளுக்கும், கடுமையாக உழைத்த தொண்டர்களுக்கும், 45,000 வாக்குகள் வித்தியாசத்தில் தாய் தமிழகமே போற்றத்தக்க வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளின் வியூகத்தைப் பொடிபொடியாக்கி, எதிரிகளே வியக்கும் வண்ணம் மகத்தான வெற்றியைத் தேடித் தந்த விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி அனைத்து வாக்காளர் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை இம்மாமன்றத்தில் பணிவோடு வணங்கி பதிவு செய்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாட்டு மக்களுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, அவர்களின் வாழ்வாதாரம் உயர்வதற்கும்,மக்கள் வளமோடு வாழ்வதற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நம்மோடு இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவுக்குப் பிறகு எதிரிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, இந்த இயக்கத்தைக் கூறுபோட நினைத்தார்கள். இந்த

*2020 பிப்ரவரி 18]* [*திரு. ர. முத்தமிழ்செல்வன்*]

*இயக்கம் உடைந்து போகும், ஒழிந்து போகும், அழிந்து போகும், இல்லாமல் போகும், நில்லாமல் போகும் என்றெல்லாம் ஆருடம் சொன்னவர்களின் எண்ணங்களையெல்லாம் தவிடு பொடியாக்கி, உலக வரலாற்றிலே அதிக வழக்குகளைச் சந்தித்து, இழந்த இரட்டை இலை சின்னத்தை மீட்டெடுத்து, வெற்றி கண்ட ஒரு மாபெரும் இயக்கம் என்றால் அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை இந்த மாமன்றத்தில் பணிவோடு பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*பிற்பகல் 1-05*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, இந்த அரசு இன்று போகும், நாளை போகும் என நாள்தோறும் நாள் குறித்தவர்களின் எண்ணங்களை வரலாறு காணாத அளவில் சட்டப் போராட்டத்தின் வாயிலாக தவிடுபொடியாக்கி இன்று மூன்றாண்டுகளைக் கடந்து நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்து பீடுநடைபோட்டு மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிற மக்களின் முதல்வர் மாண்புமிகு அண்ணன் எடிப்பாடியார் அவர்களை இந்த நேரத்தில் பணிவோடு வணங்குகிறேன்.*

*எதிர்வரும் 9 மாவட்டங்களில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தல்களிலும், தமிழகம் முழுவதும் நடைபெறவுள்ள நகர்ப்புற, மாநகர உள்ளாட்சித் தேர்தல்களிலும் விக்கிரவாண்டி மற்றும் நாங்குநேரி இடைத்தேர்தல்களில் உழைத்ததைப்போல ஒற்றுமையோடு களப்பணியாற்றி 100 சதவிகித வெற்றி பெறுவோம் என்பதை இம்மாமன்றத்தில் பணிவோடு பதிவுசெய்கிறேன். ஆண்ட கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்ததில்லை என்ற 32 ஆண்டுக்கால சாதனையை முறியடித்து தொடர் வெற்றி கண்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல் வருகிற 2021 சட்டமன்றத் தேர்தலிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்கும் என்பதை இம்மாமன்றத்தில் மெத்தப் பணிவோடு பதிவு செய்கிறேன்.*

*அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று கூறினார்கள். இன்று நம்முடைய முதல்வர் அவர்கள் "உங்களால் நான், உங்களுக்காகவே நான்" என்று கூறுகிறார்கள். மக்கள் நலனையே குறிக்கோளாகக் கொண்டு ஆட்சி புரிந்துகொண்டிருக்கிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி*

அம்மாவின் அரசு என்பதை இம்மாமன்றத்தில் பணிவோடு பதிவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

நடுநிலையாக தீர்ப்பு வழங்கி எவ்வகையிலும் துன்பம் நேராது குடிகளைக் காக்கும் அரசன் மக்களால் இறைவனாகப் போற்றப்படுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தலின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதிகளை அளித்தமைக்கு தொகுதி மக்கள் சார்பாக வணங்கி என்னுடைய நன்றியினைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றையெல்லாம் நிறைவேற்றித் தரவேண்டுமாய் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிந்து வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது விக்கிரவாண்டி தொகுதி சம்பந்தப்பட்ட சில விடுபட்ட கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் பணிவோடு சமர்ப்பிக்கின்றேன். அவற்றை நிறைவேற்றித் தந்திட வேண்டுமாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பணிந்து வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட விக்கிரவாண்டி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான நந்தன் கால்வாய்த் திட்டத்தை விரைந்து நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை விக்கிரவாண்டி தொகுதி மக்களின் சார்பாக நான் மெத்தப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். எனது சொந்த கிராமமான கல்பட்டு கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு முத்தாலவாழியம்மன் திருக்கோயிலுக்கு அறநிலையத் துறையின் மூலமாகப் புதிய திருத்தேர் அமைத்துத் தந்திட வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*2020 பிப்ரவரி 18]* [திரு. ர. முத்தமிழ்செல்வன்]

திருவாமத்தூரில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த அருள்மிகு முத்தாம்பிகை உடனுறை அபிராமேஸ்வரர் திருக்கோயிலுக்கு அறநிலையத் துறையின் மூலமாகத் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்திட வேண்டுமாய் இந்த மாமன்றத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எண்ணாயிரம் அருள்மிகு லட்சுமி நரசிம்மபெருமாள் திருக்கோயிலை அறநிலையத் துறையின்மூலம் புனரமைப்புச் செய்து குடமுழுக்கு நடத்திட வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணாயிரம் கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதிகொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று பணிவோடு பதிவுசெய்கிறேன். ஆசூர் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த அவையில் பணிவோடு பதிவுசெய்கிறேன். நேமூரில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைத்துத் தர இந்த மாமன்றத்தில் பதிவுசெய்கிறேன்.

எசாலம் ஊராட்சி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டித் தரவேண்டுமெனத் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் இந்த நேரத்தில் பணிவோடு கோரிக்கையினை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்பேர் மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித் தரவேண்டுமென்ற பணிவான கோரிக்கையினை இந்த மாமன்றத்தில் வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னதச்சூர் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பணிவோடு எனது கோரிக்கையாக இந்த மாமன்றத்தில் வைக்கின்றேன்.

மேலகொந்தையிலிருந்து நரசிங்கனூர் வரை செல்லும் ஏரிக்கரைச் சாலையினை அகலப்படுத்தி தார்ச்சாலை அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு விவசாயிகளின் முதலமைச்சர் அவர்களைப் பணிந்து இந்த அவையிலே கேட்டுக்கொள்கின்றேன்.

பிரசித்தி பெற்ற தும்பூர் அருள்மிகு நாகம்மன் திருக்கோயில் குளத்தைப் புனரமைப்புச் செய்து, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் மூலமாக அன்னதானத் திட்டத்தை செயல்படுத்தித் தர இம்மாமன்றத்திலே கோரிக்கையினை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சொந்த கிராமமான கல்பட்டு கிராமத்தை ஒட்டிச் செல்கின்ற தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்து விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமாய் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

சிறுவாக்கூர் கிராமத்திலே அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த மாமன்றத்தில் என்னுடைய தொகுதி மக்களின் கோரிக்கையாக பணிந்து வைக்கின்றேன்.

குப்பம் கிராமத்திலே துணை மின் நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்ற கோரிக்கையினை பணிவோடு இந்த மாமன்றத்தில் பதிய வைக்கின்றேன்.

கல்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள ஏரியை குடிமராமத்துத் திட்டத்தின்கீழ், தூர்வாரி ஆழப்படுத்தித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தமிழ்செல்வன், மீதமுள்ள தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள், நான் பதிவு செய்து கொள்கிறேன்.

2020 பிப்ரவரி 18]

**திரு. ர. முத்தமிழ்செல்வன்:** மீதமுள்ள தொகுதிக் கோரிக்கைகளை இந்த அவையில் நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தோடு, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி, வளமான தமிழகத்தை உருவாக்கிட, Vision 2023 என்ற தொலைநோக்குத் திட்டத்தைத் தந்து, தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கிட அரும்பாடுபட்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆட்சிக்கான மத்திய அரசின் நல் ஆளுமை விருதைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) புகழ்பெற்ற இந்தியா டுடே பத்திரிகையால், தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டு வரும் மாநிலம் என்ற பெருமையை பெற்றுத் தந்து, தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்த்திருக்கிற அரசு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் பணிவோடு பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதுடில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை உருவாக்க ஒரே தவணையில் 50 இலட்சம் ரூபாயை அள்ளித் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதே வழியில், தாய் 8 அடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும் என்பதற்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தற்போது ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு, உடனடியாக 10 கோடி ரூபாயை வாரி வழங்கியதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) Houston பல்கலைக்கழகம், கௌஹாத்தி பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ் மொழி கற்பித்தலைக் கொண்டு வர சீரிய முயற்சிகள் எடுத்து தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர் நாகரிகத்தின் தொன்மையைப் பறைசாற்றும் வகையிலும், அனைவரும் அறிந்துகொள்ளும் வகையிலும் கீழடி அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்காக, உலகத்தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ்வைப்பகம் அமைத்திட

[திரு. ர. முத்தமிழ்செல்வன்] [2020 பிப்ரவரி 18

12 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நான் வாழ்த்த வயதில்லாமல் பணிவோடு இந்த அவையிலே வணங்குகின்றேன்.

தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு ஒரே ஆண்டில் 5 புதிய மாவட்டங்களை அமைத்து, அரசு நிருவாகத்தை மக்களிடம் நெருக்கமாகக் கொண்டு சென்றுள்ள அரசு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை இந்த அவையில் பணிவோடு பதிவு செய்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை மொத்தம் 24 இலட்சத்து 10 ஆயிரத்து 107 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வீடில்லா ஏழையெளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை இம்மாமன்றத்தில் நான் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இயற்கை மரணங்களால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கான இழப்பீட்டுத் தொகையை 2 இலட்சம் ரூபாயாகவும், விபத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கான இழப்பீட்டுத் தொகையை 4 இலட்சம் ரூபாயாகவும், விபத்தில் ஊனமுற்றோருக்கான உதவித் தொகையை 2 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கியுள்ள மாண்புமிகு மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசை மனதார வணங்கி பாராட்டுகிறேன்.

காவேரி டெல்டா விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, காவேரி டெல்டா பகுதியினை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக அறிவித்து, மீத்தேன், ஹைட்ரோ கார்பன் உள்ளிட்ட. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தமிழ்செல்வன், உரையை முடியுங்கள்.

**திரு. ர. முத்தமிழ்செல்வன்:** விவசாயிகளின் நலனுக்கு எதிரான எந்தவொரு திட்டத்தையும் அனுமதிக்க மாட்டோம் என அறிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியர் அவர்களுடைய அரசை நன்றியோடு இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

2020-2021 ஆம் நிதியாண்டில் மொத்தம் 11 ஆயிரம் கோடி ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்படும் என அறிவித்து விவசாயிகளின்

2020 பிப்ரவரி 18] [திரு. ர. முத்தமிழ்செல்வன்]

நெஞ்சங்களில் பால்வார்த்துள்ள விவசாய முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5 ஆயிரத்து 306 கோடியே 95 இலட்சம் ரூபாயும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 6 ஆயிரத்து 754 கோடியே 30 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளது வரவேற்கத்தக்கது. மேலும், பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், 8 ஆயிரத்து 968 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் 5 இலட்சத்து 27 ஆயிரத்து 552 வீடுகளையும், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தமிழ்செல்வன், உரையை முடியுங்கள்.

**திரு. ர. முத்தமிழ்செல்வன்:** இதுவரை 7 ஆயிரத்து 620 கோடி ரூபாய் செலவில், 3 இலட்சத்து 80 ஆயிரம் வீடுகளை கட்டித் தந்து சாதனை படைத்துள்ள அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் பணிவோடு பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். 2020–2021 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், 2 இலட்சம் வீடுகளும், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், 20 ஆயிரம் வீடுகளும் கட்டித்தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தமிழ்செல்வன், உரையை முடியுங்கள்.

**திரு. ர. முத்தமிழ்செல்வன்:** கிறித்துவ தேவாலயங்களில் பழுதுபார்ப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் நிதியுதவியை 1 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாகவும், மசூதிகளின் பராமரிப்புக்காக வழங்கப்படும் நிதியுதவியை 60 இலட்சம் ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்படும் வருடாந்திர நிருவாக மானியத்தை இரண்டரைக் கோடி ரூபாயாகவும், உயர்த்தி வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மையினர் நலன் காக்கும் ஒரே அரசு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு

[திரு. ர. முத்தமிழ்செல்வன்] [2020 பிப்ரவரி 18

மட்டுமே என்பது மீண்டும் ஒரு முறை நிரூபணம் ஆகியுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தமிழ்செல்வன், உட்காருங்கள்.

*பிற்பகல் 1–15*

**தொகுதிக் கோரிக்கைகள்:**

பள்ளியந்தூர் செல்லும் சாலையில், பம்பை வாய்க்காலில் மேம்பாலம் அமைத்துத் தரக் கோருகிறேன். கடையம் ஊராட்சி, வனத் துறைக்குச் சொந்தமான சாலையைச் செப்பனிட்டு, சீர் செய்திடக் கோருகிறேன். கல்பட்டு–நத்தமேடு செல்லும் ஏரிக்கரைச் சாலையை அகலப்படுத்தி, மின் விளக்கு அமைத்துத் தரக் கோருகிறேன்.

கல்பட்டிலுள்ள பிரசித்தி பெற்ற யோக சனீஸ்வரர் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் நலன் கருதி, மாம்பலப்பட்டு–கல்பட்டு சாலையின் பக்கவாட்டில் மின் விளக்கு வசதி செய்து தரக் கோருகிறேன்.

விக்கிரவாண்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குத் தனியாகக் கட்டடம் அமைத்துத் தரக் கோருகிறேன். விக்கிரவாண்டி–பொன்னம்குப்பம் பாதையில், வராக நதியின் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தரக் கோருகிறேன்.

கெடார் ஊராட்சி மற்றும் பனமலைப்பேட்டையில் பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடைகள் அமைத்துத் தரக் கோருகிறேன்.

காணை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தரக் கோருகிறேன். கல்பட்டு ஊராட்சியிலுள்ள 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இடித்துவிட்டு, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரக் கோருகிறேன். கருங்காலிப்பட்டு கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரக் கோருகிறேன்.

அகரம் சித்தாமூர் அருகே பம்பை வாய்க்காலில் மேம்பாலம் அமைத்துத் தரக் கோருகிறேன். கல்பட்டு ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித்

2020 பிப்ரவரி 18] [திரு. ர. முத்தமிழ்செல்வன்]

தரக் கோருகிறேன். கல்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள ஆரம்ப பள்ளியை மாற்றியமைத்து, பொதுமக்களின் சார்பாக அரசுக்கு வழங்கியுள்ள இடத்தில் புதிய கட்டடம் கட்டித் தரக் கோருகிறேன். பள்ளியந்தூர் ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரக் கோருகிறேன்.

கக்கனூர் ஊராட்சி, குறிஞ்சி நகரில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், மாதாகோவில் தெருவில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைத்துத் தரக் கோருகிறேன். வி. பகண்டை கிராமத்தில் கழிவு நீர் வாய்க்காலுடன்கூடிய சிமென்ட் சாலை அமைத்துத் தரக் கோருகிறேன்.

விக்கிரவாண்டி தொகுதியில், ஆட்சேபணையில்லா புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தியூர் திருக்கை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரக் கோருகிறேன். கல்பட்டு ஊராட்சியிலுள்ள பழுதடைந்துள்ள துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரக் கோருகிறேன். அன்னியூர் கிராமம் மற்றும் வி. பகண்டை கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரக் கோருகிறேன். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மன நலப் பிரிவுக்கு முதல் தளக் கட்டடம் கட்டித் தரக் கோருகிறேன். மேலும், அம்மருத்துவமனைக்குக் கப்பியாம் புலியூர் கிராமத்திலிருந்து குடிதண்ணீர் வழங்கிடக் கோருகிறேன்.

மூங்கில்பட்டு மற்றும் கல்பட்டு கிராமங்களில் கால்நடைக் கிளை மருத்துவமனைகள் அமைத்துத் தரக் கோருகிறேன். விக்கிரவாண்டி பேரூராட்சி, வெங்கடேஸ்வரா நகரில் விளையாட்டு மைதானத்தைச் சுற்றி உயர் கோபுர மின் விளக்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்துத் தரக் கோருகிறேன்.

விக்கிரவாண்டி தொகுதியில் அரசு வேளாண் கல்லூரி, அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி, அரசு தொழிற் பயிற்சி நிலையம் ஆகியவற்றை அமைத்துத் தரக் கோருகிறேன். விழுப்புரத்திலிருந்து திருக்கோவிலூருக்கு மாம்பழப்பட்டு, கல்பட்டு, ஆற்காடு வழியாக புதிய பேருந்து வழித் தடத்தை ஏற்படுத்தித் தரக் கோருகிறேன்.

*[2020 பிப்ரவரி 18*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது இந்த அவையிலே இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. முஹம்மது அபூபக்கர், உங்களுக்கு பேசுவதற்கான நேரம் 15 நிமிடங்கள்தான். அதற்குள் உங்கள் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *இந்த நிதிநிலை அறிக்கையிலே அதிர்ச்சி அளிக்கக்கூடிய வகையிலே வரலாறு காணாத வீழ்ச்சி, நிதிப் பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டே போகின்றது. அதற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை என்பது இங்கே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதைச் சரி செய்யக்கூடிய வகையிலே இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும்.*

*நிதிநிலை அறிக்கையிலே அகழ்வாராய்ச்சி பற்றி கூறப்பட்டிருக்கின்றது. மத்திய அரசாங்கம்கூட ஆதிச்சநல்லூர் பகுதியை அகழ்வாராய்ச்சி செய்யக்கூடிய ஒரு பகுதியாக அறிவிப்பு செய்திருக்கின்றது. ஆனால், ஆதிச்சநல்லூருக்குச் செல்லக்கூடிய பாதை, திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு செல்லக்கூடிய பகுதியில்தான் இருக்கிறது. 'ஆதிச்சநல்லூர்' என்று* board *வைத்திருக்கக்கூடிய அந்த இடம் மிகவும் குறுகலான இடம். அங்கு பாதை சரியில்லாமல் இருக்கின்றது. ஆராய்ச்சி செய்வதற்கு பலரும் அங்கே வருவார்கள். எனவே, அதைக் கருத்தில்கொண்டு விரைவாக அந்தப் பாதையைச் சீரமைக்கக்கூடிய பணிகளைச் செய்ய வேண்டும். அது ஒற்றையடிப் பாதையாக இருக்கின்றது. அதைச் சரி செய்ய வேண்டும்.*

*நிதிநிலை அறிக்கை புத்தகத்தில் வருவாய் நிருவாகம் என்ற தலைப்பிலே புதிய மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த மாவட்டங்களுக்கு ஆட்சித் தலைவர் அலுவலகம் உள்ளிட்ட மற்ற அலுவலகங்களையும் விரைவாக ஏற்படுத்தக்கூடிய பணிகளை இந்த அரசு செய்ய*

2020 பிப்ரவரி 18] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைப் பொறுத்தவரையில், தென்காசி மாவட்டத்தில் 5 தொகுதிகள் இருக்கின்றன. அந்த அலுவலகத்தை அனைவரும் செல்லக்கூடிய ஒரு நல்ல இடத்திலே நீங்கள் அமைத்துத் தர வேண்டும் என்பதையும் இங்கே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஓய்வூதியம் குறித்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. கிராமங்களுக்குச் சென்றால், அங்குள்ள மக்கள் எல்லோரும் ஓய்வூதியம் பெற்றுத்தாருங்கள் என்று வலியுறுத்துகின்றார்கள்.எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யக்கூடியவர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்கக்கூடிய பணிகளைச் செய்ய வேண்டும்.

அதேபோன்று, Tamil Nadu Road Safety Mission. Road Accident Free Tamil Nadu என்ற பகுதியிலே விபத்தில் இறந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கின்றீர்கள், நன்றி. என்னுடைய தொகுதியிலேகூட திரிகூடபுரம் பகுதியிலே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 பேர், தாயும், மகளும் இறந்துவிட்டார்கள். அதேமாதிரி இன்னொரு பெண்ணும் அங்கே இறந்திருக்கின்றார். அந்தக் குடும்பத்திலே ஒருவருக்குக் கருணை அடிப்படையிலே அரசு வேலை வழங்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். அதையும் இந்த அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டும்.

அதேபோன்று, சீரமைக்க வேண்டிய சாலைகளைப் பொறுத்தவரையில், திருமங்கலம்-கொல்லம் சாலை என்னுடைய தொகுதியில்தான் வருகிறது. அதேமாதிரி தென்காசி-திருநெல்வேலி, திருநெல்வெலி-திருச்செந்தூர், இந்தச் சாலைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்தவையாக இருக்கின்றன. அவற்றைச் சீரமைப்பதற்கு ஏற்கெனவே பொதுக் கணக்குக் குழுவினுடைய ஆய்வுக் கூட்டம் திருநெல்வேலியில் நடைபெற்றபோதுகூட, அந்தக் குழுவின் தலைவர் அவர்கள் அங்கே இருக்கக்கூடிய ஆட்சித் தலைவருக்குச் சொன்னார்கள். தென்காசியிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்லக்கூடிய சாலை, அதேபோன்று திருச்செந்தூர் செல்கின்ற சாலை. திருச்செந்தூர் கோயிலுக்குச் செல்பவர்கள் அதிகமானோர் இருக்கின்றார்கள். பழனி செல்வதற்கு எப்படி யாத்ரிகர்களுக்கு தனிப் பாதை அமைத்திருக்கின்றீர்களோ அதேபோன்று ஏற்படுத்த வேண்டும் என்பதைத் தொடர்ந்து நான் சொல்லி வருகின்றேன். அதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டும்.

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2020 பிப்ரவரி 18

காவேரி–டெல்டா பகுதிகள் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதையும் நீங்கள் உறுதிப்படுத்தக்கூடிய வகையிலே, இந்தச் சட்டமன்றத்திலே சிறப்புத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கான பணிகளைச் செய்தால்தான் அந்த அறிவிப்பு சரியானதாக இருக்கும்.

நிதிநிலை அறிக்கையிலே தென்காசி மாவட்டத்தில் உணவுப் பூங்கா அமைக்கப்படும் என கூறப்பட்டிருக்கின்றது. என்னுடைய கடையநல்லூர் தொகுதி விவசாயிகள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. அங்கேயும் இந்த உணவுப் பூங்காவை அமைக்கக்கூடிய பணிகளைச் செய்ய வேண்டும்.

நகராட்சி நிருவாகம்: இதில் திறன்மிகு நகரங்கள் அறிவிக்கப்படவிருக்கின்றன. கடையநல்லூர் நகராட்சியையும் அந்தத் திறன்மிகு நகரங்கள் பட்டியலிலே சேர்க்க வேண்டும். நேற்றுகூட கேள்வி நேரத்திலே நான், கடையநல்லூர் நகராட்சியிலே குடிதண்ணீர் வழங்குவது சம்பந்தமாகச் சொன்னேன். நிதிநிலை அறிக்கையிலே Jal Jeevan Mission என்ற ஓர் அறிவிப்பிலே அனைவருக்கும் குடிநீர் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். தென்காசி மாவட்டத்திலேயே அதிகமாக மக்கள் வாழக்கூடிய பகுதி கடையநல்லூர் நகராட்சி. அறிவிக்கப்பட்ட 6,000 குடிநீர் இணைப்புகளை முன்னுரிமை அடிப்படையிலே இந்த அரசு வழங்க வேண்டும்.

பிற்பகல் 1–20

என்னுடைய தொகுதியிலே, பல்வேறு பகுதிகளுக்குப் பேருந்துகள் செல்வதில்லை என்ற குறையைத் தொடர்ந்து சொல்லி வருகின்றேன். குறிப்பாக, தென்காசி தெற்கு மேடு பகுதியிலே ஏற்கெனவே இயங்கிய பேருந்து வழித்தட எண்கள் 9, 9A தற்போது சரியாக இயங்குவதில்லை. அவற்றை மீண்டும் இயக்குவதற்குண்டான பணிகளைச் செய்ய வேண்டும்.

அதேபோன்று, என்னுடைய சொந்த ஊர் காயல்பட்டணம். காயல்பட்டணத்திற்கு வழித்தடம் இருந்தும்கூட அங்கே பேருந்துகளெல்லாம் உள்ளே செல்லாமல் குறுக்கு வழிச்சாலையில் செல்லும்படி சொல்லிவிடுகிறார்கள். எனவே, அங்கே பேருந்து நிறுத்தம் உறுதி செய்யப்பட வேண்டும். அந்த பேருந்துகளெல்லாம் ஆறுமுகநேரியிலிருந்து காயல்பட்டணத்திற்குச் செல்லாமல்

2020 பிப்ரவரி 18] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

திருச்செந்தூருக்குச் சென்றுவிடுகின்றன. எனவே, அங்கே அதிகாரிகளை நியமித்து, காயல்பட்டணத்திற்கு உள்ளே சென்று வரக்கூடிய வகையிலே பணிகளைச் செய்ய வேண்டும். நம்முடைய திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணாச்சி அனிதா அவர்களும் இங்கே இருக்கின்றார்கள். எனவே, அதைச் சீரமைத்துக் கொடுக்க வேண்டுமென்பதையும் இங்கே வலியுறுத்தி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பள்ளிக் கல்வித்துறைக்கு அதிகபட்சமாக 34,181.73 கோடி ரூபாயை இந்த அரசாங்கம் வழங்கியிருப்பதற்கு நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வளவு அதிகமான நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியிலே, முன்பு கேரளாவில் இருந்த பகுதிகளான சுந்தரேசபுரம், இலத்தூர், வேலாயுதபுரம் போன்ற பகுதிகளிலே ஓடு வேய்ந்த கட்டடமாக இருக்கின்றது. நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கு இல்லை. ஏற்கெனவே அவரிடம் சொன்னேன். சுந்தரேசபுரம், சிறப்புத் திட்டத்திலே இணைக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. சமூக நலக் கூடத்திற்குச் சென்று, மாணவர்களெல்லாம் படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இந்தப் பகுதிகளுக்கும் நீங்கள் நிதியை ஒதுக்கி, ஓடு வேய்ந்த கட்டடங்களையெல்லாம் அகற்றி, நல்ல கட்டடங்களை இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு வழங்க வேண்டும். கடையநல்லூரிலே இருக்கின்ற ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு இந்த வருடம் நூறாவது ஆண்டு. அங்கே கட்டமைப்பு வசதிகளை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்து, நூற்றாண்டு விழாவை அரசு விழாவாகச் சிறப்பாக நடத்த வேண்டும்.

உயர் கல்வித் துறையில் பல்வேறு அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே விதி 110-ன்கீழ் என்னுடைய கோரிக்கையை ஏற்று, மனோன்மணியம் சுந்தரனார் உறுப்புக் கல்லூரி, அரசுக் கல்லூரியாக மாற்றப்பட்டது. ஆனால், அந்தக் கல்லூரிக்கு முதல்வர் அரசு சார்பாக நியமிக்கப்படவில்லை. அதேபோன்று ஆசிரியர்கள் இல்லை; infrastructures உருவாக்கப்படாமல் அந்தக் கல்லூரி இருப்பதன் காரணமாக அதிலே கவனம் செலுத்த வேண்டும். உயர் கல்வித் துறையின்கீழ் இருக்கக்கூடிய Urdu Academy எட்டு வருடங்களாகச் செயல்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே, நான் பல முறை சொல்லியிருக்கின்றேன். தயவுகூர்ந்து சிறுபான்மை உருது மொழிக்கு நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2020 பிப்ரவரி 18

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையிலே பல்வேறு அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், தொகுதியிலே இருக்கக்கூடிய பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே சுற்றுச் சுவர் இல்லை. மிருகங்களெல்லாம் உள்ளே செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சுற்றுச் சுவரை நீங்கள் ஏற்படுத்த வேண்டும். Corona Virus தொற்று நோய் குறித்து விழிப்புணர்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. என்னுடைய தொகுதி என்பது கேரளாவை ஒட்டிய பகுதி. புளியரை பகுதியிலே நடைபெறக்கூடிய அந்தப் பணிகளையெல்லாம் சென்று பார்த்தேன். விழிப்புணர்வுப் பணி மட்டும் நடைபெறுகின்றது. துண்டு பிரசுரங்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் கொடுக்கின்றார்கள். கேரளாவிலேயிருந்து வரக்கூடியவர்களுக்கு—தமிழ் மொழியில் இருக்கக்கூடியவற்றைப் படிக்க முடியவில்லை. மலையாள மொழியிலும், அந்தத் துண்டு பிரசுரங்களை கொடுத்தால் முன்னெச்சரிக்கைக்கு, விழிப்புணர்வுக்கு உகந்ததாக இருக்கும் என்பதையும் அரசுக்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை சம்பந்தமாக பல்வேறு அறிவிப்புகள். என்னுடைய தொகுதி கடையநல்லூர் தொகுதி. அந்த கடையநல்லூர் என்கின்ற பெயரே எப்படி வந்தது என்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய அருள்மிகு கடகாலீஸ்வரர் உடனுறை கரும்பான்மொழி அம்பாள் திருக்கோயிலின் காரணமாகத்தான். புராதனமான கோயில் இது. அங்கே உள்ளவர்கள் எல்லாம் என்னை அழைத்தார்கள். சென்ற வாரம் நானே அங்கே சென்று பார்த்து வந்தேன். சிவபெருமான் தொடர்புடைய ஒரு கோயில். அந்தக் கோயிலில் மரங்களெல்லாம் வளர்ந்து, மழைக் காலங்களிலே தண்ணீர் உள்ளே வருகின்றது. கடைக்கால்நல்லூர் என்பதுதான் மருவி இப்போது கடையநல்லூர் என்ற பெயர்கூட வந்திருக்கின்றது. அவ்வளவு சிறப்பான அந்தக் கோயிலிலே மரங்கள் வளர்ந்திருக்கின்றன. சமூக நலக் கூடத்திற்கு அருகிலே சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தினாலே, சமூக விரோதிகளெல்லாம் இரவு நேரங்களிலே அங்கு வருகின்றார்கள். போதுமான மின் விளக்குகள் அங்கு இல்லை. இரவு நேரங்களிலே பெண்களெல்லாம் அங்கு செல்வதற்கு மிகவும் அச்சப்படுகின்றார்கள். எனவே, கடையநல்லூரிலே இருக்கக்கூடிய அருள்மிகு கடகாலீஸ்வரர் உடனுறை கரும்பான்மொழி அம்பாள் திருக்கோயிலுக்கு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பாக போதுமான

*2020 பிப்ரவரி 18]* [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

*நிதியை ஒதுக்கி தனிக் கவனம் செலுத்த வேண்டும். அங்கே குடிநீர் வழங்குவதற்குண்டான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். கும்பாபிஷேகம் இரண்டு வருடங்களிலே நடத்த வேண்டும். அதையும் நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.*

*பிற்பகல் 1-25*

*சிறுபான்மையினர் நலத் துறையில், மசூதி பராமரிப்பிற்காக, நீங்கள் 5 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறீர்கள். நன்றி. ஆனால், மசூதிகள், தர்காக்கள், கார்கானாக்களையெல்லாம் பராமரிப்பதற்கு, சீரமைப்பதற்கு வக்ஃபு வாரியம் இருக்கின்றது. வக்ஃபு வாரியம் இந்த ஆட்சியிலே ஒன்றரை வருடங்களாகச் செயல்படாமல் இருந்தது. நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தினோம். அதற்குப் பிறகு செயல்பட்டது. (குறுக்கீடு) தயவுசெய்து, பேசி முடித்த பிறகு பதில் சொல்லுங்கள். ஒரு வருடம் செயல்பட்டதைத் திரும்பவும் கலைத்துவிட்டீர்கள். மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான், நீங்கள் வழங்கியிருக்கின்ற இந்த 5 கோடி ரூபாய் நிதியை எந்தெந்த மசூதிகள் பழுதாகி இருக்கின்றன என்று நாங்கள் கண்டறிந்து உங்களிடத்திலே சொல்ல முடியும். மாண்புமிகு அமைச்சரே எல்லா இடங்களுக்கும் செல்ல முடியாது. வக்ஃபு வாரியத்தைக் கலைத்து, இப்போது சிறப்பு அதிகாரியை அறிவித்துவிட்டீர்கள். சிறப்பு அதிகாரி ஏற்கெனவே இரண்டு துறைகளுக்கும் பொறுப்பாக இருக்கிறார். நிதித் துறை (செலவினம்) கவனித்து வருகிறார். இன்னொரு துறையிலும் இருக்கிறார்கள். எனவே, விரைவாக மீண்டும் வக்ஃபு வாரியம் செயல்படக்கூடிய ஒரு காரியத்தை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.*

*அதேபோல, சிறுபான்மையினர் நலத் துறை குறித்து, பல்வேறு விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், எங்களுக்கெல்லாம் என்ன வேதனை என்றால், சிறுபான்மை முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த சிறுபான்மை மக்களெல்லாம், மத்திய அரசாங்கத்தினுடைய குடியுரிமை திருத்தச் சட்டம்,* NRC, NPR *போன்ற சட்டங்களால் மிகப் பெரிய பாதிப்புக்குள்ளாகி, மிகவும் கவலைப்பட்டவர்களாக இருந்து கொண்டிருக்கிறோம். பல விளக்கங்களை இங்கே சொல்லுங்கள். ஆனால், யதார்த்தத்தில் என்ன விஷயங்கள் இருக்கின்றன என்பது குறித்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் சொல்வது, இது சிறுபான்மையினருக்கு எதிரான ஒரு சட்டம் என்பது மட்டுமல்ல, நம்முடைய முதல் ஜனாதிபதி, சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், 'எத்தனை*

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2020 பிப்ரவரி 18

சட்டங்களை நாம் நிறைவேற்றினாலும், கொண்டுவந்தாலும் மதத்தினுடைய அளவுகோலை வைத்து பாகுபாடு காட்டக்கூடாது. எல்லோருக்குமான ஒரு சட்டத்தைத்தான் கொண்டுவர வேண்டும்' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நம்முடைய Constitution-ன் Preamble-லிலேயே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியா என்பது எல்லோருக்குமான நாடு. தேசப் பிதா மகாத்மா காந்தி என்ன சொன்னார்கள் என்றால் (குறுக்கீடு) தயவுசெய்து, பேசி முடித்த பிறகு பேசுங்கள். நான் ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு) தயவுசெய்து, குறுக்கிட வேண்டாம். நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) குற்றச்சாட்டே கிடையாது. தயவுசெய்து, நான் பேசி முடித்த பிறகு சொல்லுங்கள். காந்தி மகான் என்ன சொன்னார் என்றால், 'Ishwar Allah Tere Naam Sab ko San mati De Bhagwaan' இறைவன் ஒன்றுதான். இன்றைக்கு மதங்கள் பலவாறாக இருந்தாலும்கூட, ஒரு மனிதனுடைய ஆன்மாவிலிருந்துதான் நாம் எல்லோருமே படைக்கப்பட்டிருக்கின்றோம். Ishwar-ம், Allah-ம் கடவுளினுடைய பெயர்தான். எல்லோருக்கும் நீ 'Sab ko San mati De Bhagwaan' என்றுதான் அவரே சொல்லியிருக்கிறார். அடிப்படையிலே நாம் வணங்கிக் கொண்டிருந்தால் எந்தப் பிரச்சினையும் கிடையாது. நம்முடைய தமிழகத்தைத்தான் 'ஆதி மனிதன் பிறந்த பூமி' என்று நாம் சொல்கின்றோம். அதற்கு அடையாளமாக இலங்கைக்குச் சென்று பாருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குடியுரிமை திருத்தச் சட்டம் மற்றும் அதனுடைய உரிமைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அதுசம்பந்தமாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். நேற்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அதை இங்கே சுட்டிக்காட்டினார்கள். இன்றைக்கும் அவர்கள் அந்தக் குடியுரிமை திருத்தச் சட்டத்தைப்பற்றி விளக்கம் சொல்கின்றார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், ஏற்கெனவே, இச்சட்டம் சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை.

*2020 பிப்ரவரி 18]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் அதுகுறித்து நிறைய விவாதம் செய்தாகிவிட்டது. உங்களுக்குக் கொடுத்த நேரத்தை ஏன்* waste *செய்கிறீர்கள்? (குறுக்கீடு) உரையை முடியுங்கள். (குறுக்கீடு) தங்களுடைய பேச்சை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்பது நியாயம்தான். நான்கூட இந்துவாகப் பிறக்காமல் இஸ்லாமியராகப் பிறந்திருந்து, 50 ஆண்டுக் காலம் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்கள் இப்படிப்பட்ட ஒரு விளக்கத்தைச் சொல்வார்களேயானால், பயப்படத்தான் செய்வேன். ஆனால், உண்மை அதுவல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இந்த முப்பது ஆண்டுக் காலத்திலே, இந்தத் தாய் தமிழகத்திலே ஓர் இஸ்லாமியர் பாதிக்கப்பட்டிருந்தால், நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) குடியுரிமை திருத்தச் சட்டம் குறித்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்றது. இன்னும் இதற்கான* rules *எதுவுமே* frame *செய்யப்படவில்லை. ஆக, இதைப்பற்றி நாம் விவாதத்திலே எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கின்றோம். இதில் அச்சம் இருக்கின்றது என்று சொல்லி, ஜனநாயக நாட்டில் எல்லோரும் போராடுவதற்கு உரிமை உண்டு. அப்படிப் போராடுபவர்களையும் காப்பாற்றுகின்ற கடமை அரசுக்கு உண்டு. அச்சத்தின் காரணமாக பெண்கள் போராடுகிறார்கள், சிறுவர்கள் போராடுகிறார்கள், குழந்தைகள்கூட போராடுகிறார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு உண்டு. ஆகவே, அதைப்பற்றி நாங்கள் விவாதிக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் சொல்லிவிட்டார்கள். இதுசம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றபோது, உறுப்பினர் அவர்கள் மீண்டும், மீண்டும் அதைச் சொல்கின்றபோது, அது தவறான. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, அதுகுறித்து நான் பேச வேண்டாமென்று சொல்கிறேன். (குறுக்கீடு)*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *அதைப்பற்றிதான் சொன்னேன். வேறெந்த குற்றச்சாட்டையும் நான் சொல்லவே இல்லை.*

[2020 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. அபூபக்கர், உங்களுக்குக் கொடுத்த நேரம் முடியப் போகிறது. (குறுக்கீடு) நீங்கள் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** தயவுசெய்து, நான் ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்றைக்கு நேரமில்லை. (குறுக்கீடு) நேரமில்லை, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** நான் எந்தக் குற்றச்சாட்டும் சொல்லவில்லை. அறிவிப்புகளுக்கு நன்றி சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை மட்டும் சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** அதேமாதிரி இலங்கைக்குப் போய்ப் பாருங்கள். இலங்கையிலே ஆதாம்பாவா மலை என்று இருக்கிறது. சிவனடி பாதம் என்று இந்துக்கள் சொல்கிறார்கள். கிறித்தவர்கள் ஆதாம்–ஏவாள் என்றும், முஸ்லிம்கள் ஆதம் ஹவ்வா என்றும், இந்துக்கள் சிவன்–பார்வதி என்றும் கூறுகின்றனர். இவர்களுக்குப் பிறந்தவர்கள்தான் எல்லா மக்களும். எந்த மதமும் தீவிரவாதத்தைப் போதிக்கவில்லை. எல்லா மதங்களும் அன்பு, நேர்மை, ஒழுக்கத்தைப் பற்றித்தான் சொல்கின்றன. அதைத்தான் நாங்களும் சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அபூபக்கர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** எங்கள் தொகுதி மக்களின் சார்பாக மின்சார வாரியத்திடம் துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டோம். சாம்பவர் வடகரையில் அமைத்துக் கொடுத்ததற்கு நன்றி. அச்சன்புதூரில் நெல் கொள்முதல் நிலையம் வேண்டுமென்று கேட்கப்பட்டது. அதையும் அமைத்துக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய பாமரரையும் பத்திரிகை படிக்க வைத்த சாதனையாளர் ஐயா ஆதித்தனாருடைய அருமை மகனார் திரு. சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் உருவாக்கிக் கொடுக்கக்கூடிய இந்த

அரசுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கெனவே வணிக வரித் துறையின் சார்பாக Sub-Registrar Office-ஐ கடையநல்லூரில் புதிய கட்டடத்தில் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அந்தப் பணிகளும் நிறைவு பெற்றுவிட்டன. அந்த அலுவலகத்தை விரைவாகத் திறக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகிறேன். எல்லா நிலைகளிலும் நீங்கள் சிறுபான்மை சமுதாயத்தினருக்கு உற்ற தோழனாக இருக்க வேண்டும். எந்த நிலையிலும் வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சக்கூடிய காரியத்திலே யாரும் ஈடுபட வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. M.S.R. ராஜவர்மன் அவர்கள். (குறுக்கீடு) வேண்டாம், உட்காருங்கள். திரு. M.S.R. ராஜவர்மன், 15 நிமிடங்களில் உங்களுடைய உரையை முடியுங்கள்.

***திரு. M.S.R. ராஜவர்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அருளாசியோடு முத்தான பல சாதனைகளைச் செய்து வெற்றிகரமாக மூன்று ஆண்டுகளை முடித்து, ஆட்சியின் நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாடு போற்றும் நல்லாட்சி நாயகன், சேலத்து செம்மல், எடப்பாடி தந்த ஏந்தல், சிலுவம்பாளையத்தின் செல்லப்பிள்ளை, (மேசையைத் தட்டும் ஒலி) 'விவசாயிகளால் நான், விவசாயிகளுக்காகவே நான்' என வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களைப் பாராட்டி, வணங்கி, வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிறுவனத் தலைவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். கழகமும், தமிழகமும் தன் குடும்பம் என வாழ்ந்திட்ட எங்கள் குலதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன். இந்தப் பேரவையை பேராண்மையுடனும், பெருமையுடனும் சிறப்பாக வழி நடத்தி வரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும் என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. M.S.R. ராஜவர்மன்] [2020 பிப்ரவரி 18

தங்கத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., தங்கத் தலைவி புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா ஆகியோர் அமர்ந்த இந்த மாமன்றத்தில் ஒரு சாதாரணத் தொண்டனாக தமது அரசியல் வாழ்வைத் துவங்கி, படிப்படியாக உயர்வு பெற்று, இன்றையதினம் கம்பீரமாக இந்த அவையில் அமர்ந்து அரசாட்சி நடத்திவரும் சேலத்து சிங்கம், தமிழகத்தின் தங்கம், குடிமராமத்து நாயகன், மக்கள் போற்றும் மனிதநேயத் தலைவர், வெற்றிடத்தை நிரப்பிய வீரத்திருமகன், அறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகிய முப்பெரும் தலைவர்களின் முதன்மைத் தொண்டர், மாண்புமிகு அம்மா அவர்களின் வழித்தோன்றல், ஆளுமையின் சின்னமாய் இன்று அடையாளம் காணப்பட்டு வருகின்ற அருமை அண்ணன் மாண்புமிகு தமிழக முதல்வர், எங்களின் நெஞ்சத்திற்கு நெருக்கமான மனிதநேயர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் பாதம் பணிந்து என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளராகவும், துணை முதல்வராகவும் இருந்து இந்த ஆட்சிக்கும், கட்சிக்கும் சிறிதும் பங்கம் ஏற்படாமல் பாதுகாத்து வரும் இனிய பண்பாளர், அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஆற்றலரசர், ஏச்சுக்கள், பேச்சுக்கள், ஏளனம், எகத்தாளம் என எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும், அவை அத்தனையையும் ஒரு மௌன புன்னகையால் வீழ்த்திவிட்டு, எதிரிகளைப் புலம்பவிட்டு, அமைதியின் வடிவமாய், அடக்கத்தின் உருவமாய்த் திகழும் எங்களின் தென்பாண்டிச் சிங்கம் மாண்புமிகு துணை முதல்வர் எங்கள் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்றோரும், சான்றோரும், பல முக்கியத் தலைவர்களும் அமர்ந்து மக்கள் பணியாற்றிய இந்த அவையில், சாதாரண, சாமானியத் தொண்டனான நானும் இடம்பெற்று, வரலாற்றுச் சிறப்புமிக்க வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட இந்த பட்ஜெட் உரைமீது பேசுகிற வாய்ப்புக் கிடைத்ததை என் பிறவிப் பயனாகக் கருதுகிறேன். அதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை என் பணிவான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். விருதுநகர் மாவட்ட கழகச் செயலாளர்,

*2020 பிப்ரவரி 18]* [திரு. M.S.R. *ராஜவர்மன்]*

*பால் வளத் துறை அமைச்சர் எனது அருமை அண்ணன், பாசமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், அவை உறுப்பினர்களுக்கும் நன்றியைச் சொல்லி, எனது உரையைத் தொடங்குகிறேன்.*

*பிற்பகல் 1-35*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் உரையின்மீது என் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு முன்பு இந்த பட்ஜெட்டை உருவாக்கிட்ட மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு துணை முதல்வர் மற்றும் அம்மாவின் அரசினைப் பற்றி ஒருசில கருத்துகளை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். சோழ நாடு சோறுடைத்து என்பார்கள். நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை பூமி என பெருமை பேசி வந்தோம். மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த பூமி நம் தஞ்சை பூமி என்று வரலாறு பேசுகின்றது. இதற்கெல்லாம் காரணம் யார் தெரியுமா? தஞ்சை மண்ணின் வளம் காக்க, அந்தப் பகுதியில் வேளாண்மை பெருகிட, சம்பா, குறுவை, தாளடி என முப்போகமும் விளைந்திட பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே காவேரி ஆற்றின் குறுக்கே வலுவான கல்லணையைக் கட்டினானே மாமன்னன் கரிகால் பெருவளத்தான், அவர்தான் காரணம். அத்தகைய சிறப்பும், பெருமையும் வாய்ந்த தஞ்சைத் தரணியை, தமிழ் மக்களுக்குச் சோறு தந்த புண்ணிய பூமியை, காப்பாற்றியே தீருவேன் என சபதம் எடுத்து காவேரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக அறிவித்திட்ட, விவசாயக் குடும்பத்தில் பிறந்த வீரத் திருமகன் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை இரண்டாம் கரிகால் சோழன் என மக்கள் கொண்டாடி மகிழ்வார்கள். இனிவரும் காலங்களும், தலைமுறையும் அவரைப் பாராட்டும். இந்த அறிவிப்பை வெளியிட்டதற்காக கட்சி பேதமின்றி அனைத்துத் தரப்பினரும் பாராட்டியதை நாம் அறிவோம். இங்குள்ள தமிழ் மக்கள் மட்டுமல்ல, உலகமெங்கும் வாழ்கின்ற 10 கோடிக்கும் அதிகமான தமிழர்களும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழித்தொண்டனாக வந்த நம் மாண்புமிகு தமிழக முதல்வர், அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களை இன்றைக்கு பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் எதிர்க்கட்சியினர் உணர்கின்றார்கள். ஏதோ நினைத்தோம், என்னவோ நடந்துவிட்டது, எப்படி இது சாத்தியமானது? சாதாரணமானவர் என்று நாம் கருதினோமே! இன்றைக்கு சாதனையாளராக, சாமர்த்தியசாலியாக இருக்கின்றாரே என நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நினைத்து மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சரியப்படுகின்றார்கள், அதிசயிக்கின்றார்கள். இன்றைக்கு நம் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அரசியல் வித்தை கற்றுத்தரக்கூடிய அளவிற்கு புதிய அர்த்த சாஸ்த்திரத்தைப் படைத்து வருகின்றார். ஒரு வாரம், ஒரு மாதம், இரண்டு மாதம் என கெடு வைத்தவர்கள் நிலைமையெல்லாம் இப்போது கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழிக்கு ஒப்பாகிவிட்டது. நாற்காலி கனவு கண்ட அவர்கள் நிலைமை இப்போது அந்தோ பரிதாபம் என்று ஆகிவிட்டது. எம்.ஜி.ஆர். என்னும் மூன்றெழுத்து, அம்மா என்னும் மூன்றெழுத்து மந்திரங்கள், இ.பி.எஸ். மற்றும் ஓ.பி.எஸ். என்னும் மூன்றெழுத்துகளுள் ஐக்கியமாகி இவர்களுக்கு வெற்றி என்ற மூன்றெழுத்தைத் தந்து வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் எதிர்க்கட்சிகளுக்கு தோல்வி, கவலை என்ற மூன்றெழுத்துக்களே தொடரும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்றையதினம் எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலைக்கு வந்த எதிர்க்கட்சியினர் இப்போது தங்களின் நிருவாகிகளையும், தொண்டர்களையும், ஏன் தமிழ் மக்களைக்கூட நம்பாமல் வட நாட்டிலிருந்து ஒரு மூளையைக் கொள்முதல் செய்து வந்து, இந்த வளமான தமிழ் மண்ணை மீண்டும் வளைத்துப் போட்டு, வாரி சுருட்டிக்கொள்ளலாம் என கணக்குப் போட்டு, அந்த மூளைக்கார ஆசாமிக்கு கோடிகளைக் கொட்டிக்கொடுக்கின்றார்களாம். இந்தத் திராவிட பூமியில், இந்தத் தமிழ் மண்ணில் உலகிற்கே அரசியலைக் கற்றுக் கொடுத்த இந்தத் தமிழ் மக்களிடம் வடநாட்டு வசிய மருந்து பலிக்காது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அம்பேத்குமார், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. M.S.R. ராஜவர்மன்:** அவர்களின் கணக்கு தப்புக் கணக்காகவே முடியும் என்பதைக் கணக்குக் கேட்ட கட்சிக்குச் சொந்தக்காரன் என்ற வகையிலே அவர்களுக்கு அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்வேன்.

2020 பிப்ரவரி 18] [திரு. M.S.R. ராஜவர்மன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட்டைப் பற்றி பேசும்போது இந்தச் சிறந்த பட்ஜெட்டை விமர்சிப்பவர்கள் யார்? அவர்களின் பூர்வீகம் என்ன? அவர்களின் நோக்கம் என்ன? அவர்களால் மக்களுக்கு என்ன பாதிப்புவரும் என்பதைப் பற்றியெல்லாம் பேச வேண்டியது அவசியம். இதுவும் பட்ஜெட் தொடர்பானதுதான் என்பதை மெத்தப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த நல்ல அரசுக்குக் கிடைத்திட்ட சிறப்பு என்ன தெரியுமா? இந்திய அளவில் விவசாயம், சுகாதாரம், நிதி நிருவாகம், மனிதவள மேம்பாடு, சமூக நலம், நீதித் துறை உள்ளிட்ட 10 துறைகளின் செயல்திறன் மதிப்பிடப்பட்டு இந்த நாட்டிலுள்ள 18 பெரிய மாநிலங்களில் தமிழகம் முதல் இடம் பெற்றுள்ளது என்ற பெருமையைப் பெற்றவர் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள். மத்திய நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் பொது மக்கள் குறைதீர்ப்பு அமைச்சகம் இதற்கான அறிவிப்பை நல் ஆளுமை தினத்தன்று வெளியிட்டுள்ளது. இது ஒன்றே போதும் அருமை அண்ணன் முதல்வர் எடப்பாடியார் தலைமையிலான அம்மாவின் அரசுக்கு, மக்களின் அரசுக்கு, மாநில நலன் காக்கும் அரசுக்கு இங்கு நடைபெறுவது நல்லாட்சி என்பதை பறை சாற்றிட.

பிற்பகல் 1-40

அமெரிக்கா, லண்டன், துபாய் என பல நாடுகள் சென்று, பல திட்டங்களை, தொழில் நிறுவனங்களை நம் தாய்த் தமிழகத்திற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதல்வர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும் கொண்டு வந்துள்ளனர். சுமார் 10,000 கோடி ரூபாய் மதிப்பிலான அந்தத் திட்டங்கள் பல இப்போது செயல்வடிவம் பெற்று வருவதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒவ்வொரு தொண்டனும் வாய்ப்புக் கிடைத்தால் வரலாறு படைப்பான், சந்தர்ப்பம் கிடைத்தால் சாதனைகள் பல படைப்பான் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம்தான் எங்கள் சேலத்து சிங்கம் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களும், தென்பாண்டி மண்டலத்தின் தளபதி எங்கள் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும். பேரறிஞர் அண்ணா அவர்கள் "தமிழ் மக்களிடம் செல், அவர்களோடு

வாழ்ந்திடு, அவர்களிடமிருந்து அறிந்துகொள், அவர்களை நேசித்திடு, அவர்களுக்காக உன் உழைப்பை நல்கிடு, அவர்களோடு இணைந்து அவர்களுக்காகத் திட்டமிடு, அவர்களுக்குத் தெரிந்ததில் பணியைத் துவக்கிடு" என்று குறிப்பிட்ட அர்த்தமுள்ள கருத்துகளை உள்வாங்கி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1977 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதும் அதிகாரிகளை அழைத்து, நீங்கள் எத்தனை பெரிய திட்டங்களைத் தீட்டுவதாக இருந்தாலும், அந்தத் திட்டங்களின்மூலம் ஏழையெளிய, பாமர மக்களுக்கு என்ன பயன் கிடைக்கும் என்று சிந்தித்துச் செயல்படுங்கள் என்று தெரிவித்ததையும், அதேபோல, இதய தெய்வம் நம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு முறை பேசும்போது, "ஒரு தேசத்தின் வளர்ச்சி என்பது ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதாக இருக்க வேண்டும், அரசின் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் மக்கள் நலன் கருதியே அமைய வேண்டும்" எனக் குறிப்பிட்டதையும் மனதில் நிறுத்தி, அந்த நல்ல எண்ணங்களைச் செயல்படுத்தும் விதமாகத்தான் இந்த அருமையான பட்ஜெட் தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், அம்மா அவர்கள் தெரிவித்ததன் அடிப்படையிலேயே தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெற்று, எழுச்சி பெறும் வகையிலும், நேர்முக, மறைமுக வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையிலும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற இலட்சிய கனவை நிறைவேற்றும் வகையிலும் இந்த பட்ஜெட் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவையில் பெருமையுடன் பதிவு செய்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1960-களில் இந்த அவையில் அன்றைய நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் ஐயா அவர்கள் 100 கோடி ரூபாய்க்கான வரவு-செலவு குறித்த பட்ஜெட்டைத் தாக்கல் செய்தபோது, அவர் செஞ்சுரி அடித்துவிட்டார் என இந்த அவையில் இருந்தோர் புகழாரம் சூட்டியுள்ளனர். இதய தெய்வம் அம்மா அவர்களின் காலத்திலேதான் பட்ஜெட் தொகை ரூபாய் ஒரு இலட்சம் கோடியை தாண்டியது. இன்று, நம் மாண்புமிகு முதல்வர் எடப்பாடியாரின் வழிகாட்டுதலால் மாண்புமிகு துணை முதல்வர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள் தாக்கல் செய்துள்ள பட்ஜெட் தொகை சுமார் 2 இலட்சத்து 41 ஆயிரம் கோடி ரூபாய் என்கிற அளவை எட்டி மகத்தான சாதனை படைத்துள்ளது. வளர்ச்சி இல்லை, வளர்ச்சி இல்லை என்று சிலர்

*2020 பிப்ரவரி 18]* [திரு. M.S.R. *ராஜவர்மன்]*

*இங்கேயும், வெளியேயும் பேசித் திரிகிறார்கள். அதாவது இந்த அவையிலே எங்கள் பாசமிகு அண்ணன் துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்கள்-முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் சேர்ந்து தயாரித்த-பட்ஜெட்டை மூன்று மணி நேரத்திற்கும் மேலாகப் படித்தார்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு.* M.S.R. *ராஜவர்மன், உரையை முடியுங்கள். இன்றைக்கு 2 மணிக்குள் அவையை நான் முடிக்க வேண்டும்.*

**திரு. M.S.R. ராஜவர்மன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நின்று நிதானித்து படித்தாரே அதைப்போல நீங்கள் நின்று கொண்டுகூட படிக்க வேண்டாம். ஒருமுறை விருப்பு வெறுப்பின்றி, பொறுமையுடன்-ஆற அமர அமர்ந்து அல்லது படுத்துக்கொண்டு படித்து தெரிந்துகொள்ளலாம். பட்ஜெட்டை மேலோட்டமாகப் பார்த்தால்கூட நல்ல பல அறிவிப்புகள், திட்டங்கள் நமக்கு "பளிச்" எனத் தெரியும்.*

*கல்விக்கும் வேளாண்மைக்கும் எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மூலதனச் செலவுகளுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது உள்ளிட்ட பல விவரங்கள் இதிலே பொதிந்து கிடக்கின்றன. இன்றையதினம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5 ஆயிரத்து 307 கோடி ரூபாயும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 6 ஆயிரத்து 754 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். அதுமட்டுமல்ல, தமிழகத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் 5 ஆயிரத்து 344 கோடி ரூபாயாக உயர்ந்திருப்பது இன்னும் சிறப்பாகும்.*

*பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்திற்காக 3 ஆயிரத்து 99 கோடி ரூபாயும், முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்திற்காக 500 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பது ஏழையெளிய மக்களின் சொந்த வீடு கனவை நனவாக்கும். கல்வித் துறைக்கு 34 ஆயிரத்து 181 கோடி ரூபாய், மின்சாரத் துறைக்கு—குணத்தில் தங்கம், கொதித்தால் சிங்கம் போல் இன்றைக்கு மின்சாரத் துறையை தன்னைப்போல் கட்டி காத்து வருகின்ற அருமை அண்ணன் தங்கமணி அவர்களுக்கு—20 ஆயிரத்து 11 கோடி ரூபாய். வேளாண்மைத் துறைக்கு 11 ஆயிரத்து 894 கோடி ரூபாய், சுகாதாரத் துறைக்கு 15 ஆயிரத்து 863 கோடி ரூபாய், போக்குவரத்துத் துறைக்கு 2 ஆயிரத்து 716 கோடி ரூபாய், அத்திக்கடவு-அவினாசித்*

திட்டத்திற்கு 500 கோடி ரூபாய், புதிய மாவட்டங்கள் அமைத்திட 550 கோடி ரூபாய், ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பு வசதிக்கு 5 ஆயிரத்து 500 கோடி ரூபாய் என துறைகள்தோறும் தேவையான நிதி ஒதுக்கப்பட்டிருப்பது இன்றையதினம் எதிர்க்கட்சியினருக்கு வளர்ச்சியாகத் தெரியவில்லையா?

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டில் பயிர்க் கடன் இலக்காக 11 ஆயிரம் கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மின்னணுக் குடும்ப அட்டை வைத்திருப்போர் எங்கும் பொருட்கள் வாங்கலாம் என்ற நிலை மாண்புமிகு எடப்பாடியாரின் அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. மகளிர் நலத் திட்டங்களுக்கு ரூ.78,796 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி, வரும் நிதியாண்டில் 7.2 சதவிகிதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை பெற உழவர்–அலுவலர் தொடர்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

காவல் துறையில் 10,276 பேர் புதிதாக நியமிக்கப்பட இருக்கிறார்கள். பழங்குடியின மக்களுக்குக் குடியிருப்புகள் கட்ட சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜவர்மன், உரையை முடியுங்கள்.

**திரு. M.S.R. ராஜவர்மன்:** இதோ முடித்துவிடுகிறேன். 21,966 ஏக்கர் பரப்பளவில் பொன்னேரி பகுதியில் தொழில் முனைய மேம்பாட்டுத் திட்டம் வருகிறது. கிறித்தவ தேவாலய பராமரிப்புக்கு வழங்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் தற்போது ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இறுதியாக ஒன்றிரண்டு கருத்துகளைக் கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜவர்மன், நீங்கள் வேறு ஏதாவது பேச இருந்தாலும், பிறகு பேசலாம். இன்னொரு நாளில் பேசலாம். உரையை முடியுங்கள்.

**திரு. M.S.R. ராஜவர்மன்:** 'வெட்டி வா' என்றால் கட்டிவரும் கழகப் பட்டாளம் துணை இருக்கும் வரை, நடமாடும் இராணுவமாய், ஒன்றரைக் கோடி தொண்டர்களும் அணிவகுத்து நிற்கும் வரை, இந்த ஆட்சியையோ, கட்சியையோ எவரும் தொட்டுப் பார்க்க முடியாது.

*2020 பிப்ரவரி 18]* [திரு. M.S.R. ராஜவர்மன்]

*எம்.ஜி.ஆர். எனும் கண்ணுக்குத் தெரியாத சக்தி எங்களை இன்னும் இயக்கிக் கொண்டிருக்கிறது. அம்மா எனும் அபூர்வ சக்தி, ஆதர்ஷ சக்தி எங்களுடன் எப்போதும் குடிகொண்டிருக்கிறது. 'ஆலமரம் போல நீ வாழ, அங்கு ஆயிரம் பறவைகள் இளைப்பாற, காலமகள் உன்னைத் தாலாட்ட, உந்தன் கருணையை நாங்கள் பாராட்ட' என்ற அந்தப் பாடல் வரிகளுக்கு ஏற்ப இன்றைக்கு ஆல மரம்போல் ஆட்சியையும், கட்சியையும் வழிநடத்தி வருகின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர், குடிமராமத்து நாயகர், அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் அருமை அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிற்காகவும், தமிழ் மண்ணிற்காகவும்,*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், பிற்பகல் 2-00 மணிக்கு நான் அவையை முடிக்கவேண்டும். அதற்கேற்றாற்போல் உரையை முடியுங்கள். இன்றைக்கு நான் அவையை* extend *செய்யமாட்டேன். சரியாக பிற்பகல் 2-00 மணிக்கு நான் அவையை முடித்துவிடுவேன்.*

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** *தமிழ் மண்ணிற்காகவும், தமிழ் மக்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, ஐந்து முறை தமிழக முதல்வராக ஆட்சி நடத்தி, நின்ற அனைத்துத் தேர்தல்களிலும் வென்று, பல சாதனைகளைப் புரிந்து, வரலாற்றைப் படைத்த அரும்பெரும் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் துயில் கொள்ளும் திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரிய பொக்கிஷமாய் விளங்கிவரும் எங்களது ஆட்சிக் காலத்தில் துணை முதல்வராய், உள்ளாட்சியில் நல்லாட்சி தந்த நாயகனாய், இன்றும் ஓய்வறியாது உழைத்துக் கொண்டிருக்கின்ற, நாளைய தமிழகம், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் கழகத் தலைவர், தமிழக சட்டமன்ற*

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களையும் வணங்குகிறேன். மாவட்ட கழகச் செயலாளர்கள், சைதை சட்டமன்ற உறுப்பினர், திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியோடு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் பேசுவதற்கு முன்பாக விலைவாசி ஏற்றத்தைப்போலும், வேலைவாய்ப்புக்குக் காத்திருக்கும் இளைஞர்களினுடைய எண்ணிக்கை அதிகமாவதுபோலும், தமிழக அரசு எப்படி கடன் சுமையை தமிழக மக்களின் தலையில் உயர்த்திக்கொண்டு போவதுபோலும், நான் சார்ந்திருக்கின்ற சோழிங்கநல்லூர் தொகுதியினுடைய வாக்காளர்களின் எண்ணிக்கை 6,60,000 ஆக உயர்ந்து, தமிழகத்தில் மிகப் பெரிய தொகுதியாக முதலிடத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது. ஆகவே, இது மூன்று தொகுதிகளைச் சேர்ந்த தொகுதியாக இருப்பதனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அதற்காக மூன்று தொகுதிகளுடைய நேரத்தை எனக்கு ஒதுக்கி, குறைந்தபட்சம் 45 நிமிடங்களாவது எனக்குப் பேச நேரம் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிக்கு 5 நிமிடங்கள் என்ற அடிப்படையில் 15 நிமிடங்கள் ஒதுக்கப்படுகிறது.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** ஆகவே, என் தொகுதி சார்ந்த தேவைகள் அதிகம் உள்ளதால், ஒரு சிலவற்றை மட்டும் பேசிவிடுகிறேன். மீதமுள்ளவற்றை, எழுத்துமூலமாக அளித்துவிடுகிறேன். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அக்கோரிக்கைகளை அரசு நிறைவேற்றித் தரும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் I.T. நிறுவனங்கள் அதிகம் உள்ளன. அவற்றில் பல மாநிலத்தவர்கள் பணிபுரிகின்ற நிலையில், அதிகமான அடுக்குமாடிக் குடியிருப்புகள் உள்ளதனால், குடியிருப்புப் பகுதிகளிலும், அனைத்து சாலைகளிலும், C.C.T.V. cameras அமைத்து கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

2020 பிப்ரவரி 18] [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

என் தொகுதிக்குட்பட்ட செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ளடங்கிய மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், வேங்கைவாசல், பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம் ஆகிய மேற்சொன்ன ஊராட்சிப் பகுதிகள், சென்னை போன்று வளர்ச்சியடைந்து, அடுக்குமாடிக் குடியிருப்புகள் அதிகம் நிறைந்துள்ள பகுதியாக இருக்கின்றன. 1,72,000 வாக்காளர்களைக் கொண்ட பெரும் பகுதியாக இந்த 7 ஊராட்சிகள் வளர்ச்சியடைந்துள்ளன. எனவே அங்கு பாதாளச் சாக்கடை, குடிநீர்க் குழாய்கள், சாலைகள், தெரு விளக்குகள் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். குப்பைகளை அள்ளுவதற்குப் போதிய ஆட்கள் இல்லாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன.

பிற்பகல் 1-50

மேடவாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவியர் அதிக எண்ணிக்கையில் பயின்று வருவதால், பெண்களுக்கெனத் தனியாக ஒரு மேல்நிலைப் பள்ளியாகப் பிரிக்க வேண்டும் என்று, 2012 ஆம் ஆண்டில் அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகை செலுத்தப்பட்டு, விண்ணப்பம் செய்யப்பட்டது. இன்றுவரை பள்ளி துவங்கப்படாமல் இருப்பதனால், மாணவிகளின் நலன் கருதி அதனை உடனடியாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இதே தொகுதிக்குட்பட்ட துரைப்பாக்கம், உள்ளகரம், கோவிலம்பாக்கம், சோழிங்கநல்லூர் பகுதிகளிலும் மாணவிகள் அதிக அளவில் பயில்கின்றனர். அங்கேயும் பெண்களுக்கென்று தனியாகப் பள்ளி உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் அனைத்தும் பெருங்குடி குப்பைக் கிடங்கில் கொட்டுவது வழக்கமாக இருக்கின்றது. இப்படிக் கொட்டுவதால், அந்தப் பகுதி முழுவதுமே குப்பைக் காடாக, குப்பைக் கிடங்காகக் காட்சியளிக்கிறது. நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் மாசடைவதால், அதைச் சுற்றியுள்ள குடியிருப்புகள் மற்றும் I.T. நிறுவனங்களில் துர்நாற்றம் வீசி, சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. நிலத்தடிநீர் மாசுபடுகின்ற வகையில், குப்பைக் கிடங்கு உள்ளது. இந்தக் குப்பையிலிருந்து மின்சாரமோ, மறு சுழற்சி முறையில் gas தயாரிக்கவோ, குப்பையைக் குறைக்கவோ அரசு எந்த முயற்சியும் எடுக்காத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே, அங்கு வாழும் மக்கள் நலன் கருதி, மேற்சொன்ன திட்டங்களில் ஒன்றை நிறைவேற்றிட வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்] [2020 பிப்ரவரி 18

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட OMR சாலை, ECR சாலை, மேடவாக்கம் சாலைகளில் அதிகப்படியான குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது பொது மக்கள் குளிர் சாதனப் பேருந்துகளைப் பார்ப்பதே அரிதாக இருக்கின்ற நிலை இருந்துகொண்டிருக்கின்றது. அதேபோன்று தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்பட்ட பேருந்துகள் அதிக அளவில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் மீண்டும் உடனடியாக இயக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தனித் தாலுகாவாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகிறது. அங்கு உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும்படி நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் தொகுதியில் அதிக அளவில் மாணவ, மாணவியர் பயின்று வருவதால், அங்கு பொறியியல் கல்லூரி ஒன்றும் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதியிலுள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தனியாக உருவாக்கப்பட்டு இயங்கி வருகிறது. ஆனால் மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 15–5–2013 அன்று, விதி 110–ன்கீழ், வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டித் தருவதாக அறிவித்தார்கள். ஆனால், இதுநாள் வரையில் சிறிய வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பொது மக்கள் சிரமப்படுகின்ற நிலை தொடர்ந்துகொண்டே போகிறது. வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை உடனடியாகக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உதவி ஆணையாளர் அலுவலகமும் 1 கி.மீ. தூரத்தில் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பொது மக்கள் அங்கு சென்று வருவதற்கு சிரமப்படுகின்ற நிலை இருக்கிறது. எனவே, உடனடியாக அங்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பாலவாக்கத்தில் அமைந்துள்ள அரசு ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் மேல்நிலைப் படிப்பு படிப்பதற்கு நீண்டதூரம் சென்று படிக்க வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. எனவே, மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட வேண்டும்.

*2020 பிப்ரவரி 18]* [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

*சோழிங்கநல்லூர் கூட்டுறவுக் கடன் சங்கம், தனியார் வங்கிகளுக்கு இணையாக இன்றைக்கு பண பரிமாற்றம் செய்துகொண்டிருக்கின்றது. அந்தச் சங்கம் இன்று வரை வாடகை கட்டடத்தில் இயங்கி வருகின்றது. எனவே அதற்கு ஒரு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

*சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடியிருக்கும் மக்கள் பயன்பெற, சுமார் 400 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் ஒன்றை சென்னைக்கு அருகிலுள்ள பேரூரில் 4 ஆண்டுகளுக்குள் அமைத்திடுவேன் என மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள், 16-4-2013 அன்று விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள். ஆனால் 6 வருடங்கள் கடந்தும் இன்னும் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. ஆனால், இதுநாள் வரையில், தலைவர் கலைஞர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட, தளபதி அவர்கள் தனது பொற்கரங்களால் அடிக்கல் நாட்டிய நெமிலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் மூலமாக மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

*தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், செம்மஞ்சேரி, சுனாமி நகர், பெரும்பாக்கம் பகுதிகளில், சுமார் 22,000 குடும்பங்களுக்குமேல் வசித்து வருகின்றனர். அதில் 1 இலட்சம் மக்கள் வரை வாழ்கின்ற நிலை இருந்துகொண்டிருக்கின்றது. அங்கு ஒரேயொரு ஆரம்ப சுகாதார மையம் மட்டும் இருக்கின்றது. அதில் 5 படுக்கைகள் மட்டுமே இருக்கின்றன. அங்கு* x-ray *கருவிகள் இல்லை, போதிய மருத்துவர்கள் இல்லை, 24 மணி நேரமும் பணியாற்றுவதற்கான பணியாட்கள் இல்லை. அங்கிருக்கின்ற ஏழையெளிய மக்கள் தங்களுக்கு உடல்நிலை சரியில்லையென்றால் இங்குதான் வரவேண்டும். மருத்துவம் பார்ப்பதற்கு மருத்துவ உபகரணங்கள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. நான் மேற்சொன்ன இடங்களில் ஒன்றான பெரும்பாக்கம் பகுதியில் கடந்த 5-2-2020 அன்று சர்வா.சீனிவாசன் என்பவரது குழந்தை ஆகாஷை உடல்நலக் குறைவால் ஆரம்ப சுகாதார மையத்திற்குக் கொண்டு சென்றனர். அப்போது அங்கு மருத்துவர் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் பெரும்பாக்கத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்திட வேண்டும். அதேபோன்று சுனாமி நகர் செம்மஞ்சேரியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம்*

[திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்] [2020 பிப்ரவரி 18

உயர்த்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1-55*

அதேபோன்று, அந்தப் பகுதிக்கு அன்றாடம் பல இலட்சக்கணக்கான மக்கள், கிட்டத்தட்ட 5 இலட்சத்திற்கும் மேலாக, வெளி மாநிலங்களிலிருந்து தொழில்ரீதியாக வந்து செல்லக்கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அங்கு ஒரு Multi Speciality Hospital—பல்நோக்கு மருத்துவமனையை- உருவாக்கிட வேண்டுமென்று நான் தொடர்ந்து இந்த அவையில் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மருத்துவமனையை அமைத்துக் கொடுத்தால் அந்த மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேடவாக்கத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் தனியார் மருத்துவமனைகளுக்கு ஈடாக மகப்பேறு மருத்துவம் தரமாக அளிக்கப்படுகிறது.இந்த மருத்துவமனையை நம்பி சுற்றுவட்டாரத்தில் உள்ள மக்கள் இருக்கின்றனர். சுகப்பிரவசம் பெறுவதற்கும், மருத்துவ சிகிச்சை பெறுவதற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஆகவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட OMR சாலையில் அமைந்துள்ள சுங்கச்சாவடிகளில் சுங்கவரி வசூலை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பெருங்குடி மற்றும் நாவலூர் ஆகிய இரண்டு சுங்கச்சாவடிகளுக்கு மட்டும் தனியார் நிறுவனம், அரசு TNRDC-யிடம் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இப்போது ஒப்பந்தமில்லாத இடங்களான துரைப்பாக்கம் 200 அடி ரேடியல் சாலை, சோழிங்கநல்லூர்-KKR இணைப்புச் சாலை, மேடவாக்கம்- சோழிங்கநல்லூர் இணைப்புச் சாலை ஆகிய மூன்று சாலைகளில் அமைந்துள்ள சுங்கச்சாவடிகள் விதிகளுக்கு முரணாக வரிவசூல் செய்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அவற்றை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சுங்கச்சாவடிகளை அமைத்தபோது, ஊராட்சியாக, பேரூராட்சியாக இருந்த நிலையில், தற்போது

2020 பிப்ரவரி 18] [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதிகளில் சுங்க வரி வசூலிக்கக் கூடாது என்பதனால் TNRDC வசமுள்ள பங்குகளை தமிழக அரசு பெற்று, நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்து சுங்க வரியில்லாத ஒரு சாலையாக பராமரிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த 2011 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் சென்னை தகவல் தொழில்நுட்ப சாலையில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 5 சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைக்க 171 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன் பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மேம்பாலங்கள் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது. இந்த நிலையில் 1-4-2013 அன்று மறைந்த முன்னாள் முதல்வர் அவர்கள், விதி 110-ன்கீழ் சென்னை தகவல் தொழில்நுட்ப சாலையில் பெருகிவரும் வாகன நெரிசலைக் குறைக்க தரமணி முதல் சிறுசேரி வரை உயர்மட்டச் சாலை அமைத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும், அதன் திட்ட அறிக்கையை தயாரிக்க 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அறிவித்தார்கள். 11-6-2018 அன்று கேள்வி நேரத்தில் கேள்வி எழுப்பியபோது, அதற்குப் பதிலளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தரமணி முதல் சிறுசேரி வரை உயர்மட்டச் சாலையும், அதன்மீது மெட்ரோ இரயில் வழித்தடமும் அமைக்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியது எல்லாம் இன்றுவரை ஏட்டளவில் உள்ளது. நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. மக்கள் அதே போக்குவரத்து நெரிசலில் இன்றைக்கும் தவிக்கின்றார்கள். எங்களுடைய இல்லங்களுக்கு எங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் திருமணத்திற்கோ அல்லது மற்ற சுபநிகழ்ச்சிகளுக்கோ அழைப்பதற்கு பத்திரிகை தர வேண்டுமென்றால், 'அங்கே வந்தால் அரை நாள் ஆகிவிடுகிறது, OMR சாலையில் மிகவும் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றது. ஆகையால், நாங்கள் courier-ல் பத்திரிகையை அனுப்பி விடுகிறோம், நேரில் வந்து அழைத்தாற்போல் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று சொல்கின்ற நிலையில், OMR சாலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆட்சேபணையில்லாத புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கலாம்

[திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்] [*2020 பிப்ரவரி 18*

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களிலிருந்து சில ஊர்கள் சென்னையோடு இணைக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களுக்குப் பட்டா வழங்க வேண்டியது சென்னை என்பதால், பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது. இந்த விதிமுறைகளைத் தளர்த்திட வேண்டும். பெருங்குடியில் கல்லுக்குட்டை என்கிற பகுதியில் அதிக அளவிலான மக்கள் வீடுகள் கட்டி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சோழிங்கநல்லூரில் *439* சர்வே எண்ணிலும் வீடுகள் கட்டி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஜஹாங்கீர்பேட்டை, நீலாங்கரை, துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம் ஆகிய பகுதிகளில் நீண்ட நெடு நாட்களாக வழங்கப்படாமல் உள்ள பட்டாக்களை உடனடியாக வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொகுதியில் இளைஞர்கள் அதிகமாக உள்ளதால் அவர்களது நலனைக் கருத்தில்கொண்டு, சோழிங்கநல்லூரில் உள்ள சர்வே எண் *712*-ல் விளையாட்டுத் திடல் மற்றும் உள் விளையாட்டு அரங்கம் அமைத்துத் தருமாறு இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று நில உச்சவரம்பில் மடிப்பாக்கம் பகுதியில் சர்வே எண்கள் *224/3* முதல் *224/9* வரை உள்ள இடங்கள் அடங்கியுள்ளன. *1972* ஆம் ஆண்டு முதல் DTCP-ன் ஒப்புதல் பெற்று குடியிருந்து வருகிறார்கள். மேற்சொன்ன சர்வே எண்களில் உள்ள நிலங்கள், உச்ச வரம்பு என்ற அடிப்படையில், Land Ceiling Act-ன்படி பட்டா மாற்ற முடியாத நிலையில் இருந்து வருகின்றன.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அரவிந்த் ரமேஷ், *5* நிமிடங்களில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மத்திய அரசாங்கம் *1999* ஆம் ஆண்டு Land Ceiling Act-ஐ இரத்து செய்தது. அவர்கள் பட்டா பெற முடியாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதனை ஆய்வுசெய்து, பட்டாவை உடனடியாக வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதி, *15*-வது மண்டலத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் சமுதாய நலக் கூடம் கட்டி,

*2020 பிப்ரவரி 18]* [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

*அப்போது தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. அன்பரசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்தக் கட்டடத்தை சென்னை மாநகராட்சி, வருவாய்த் துறை, சுகாதாரத் துறை, மின்சாரத் துறை ஆகிய துறைகள் ஆக்கிரமித்த காரணத்தினால், ஏழையெளிய மக்கள் அந்தச் சமுதாய நலக் கூடத்தை கடந்த 8 ஆண்டுகளாகப் பயன்படுத்த இயலாத நிலையில் இருந்து வருகிறது. அந்தச் சமுதாயக் கூடத்தை மக்கள் பயன்படுத்தும் வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*அதேபோன்று மண்டலம் 15-ல், 198-வது வட்டத்தில் தனியார் நிறுவனத்தின் மூலமாக ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகின்ற வகையில் ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு சமுதாய நலக் கூடம் கட்டப்பட்டு, இன்னும் முழுமை பெறாமல் இருந்து கொண்டிருக்கிறது. அது சென்னை மாநகராட்சி, உள்ளாட்சி மன்றத்திற்குச் சொந்தமான இடம் என்பதால், உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சி அதனை எடுத்து, உடனடியாக சமுதாய நலக் கூடத்தை உருவாக்கி மக்கள் பயன்பெறுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*எனது தொகுதிக்குட்பட்ட கோவிலம்பாக்கம், மேடவாக்கம் ஆகிய இரண்டு சந்திப்புகளில் மேம்பாலப் பணிகள் பல ஆண்டுக்காலமாக நடந்து கொண்டிருக்கின்றன. அந்த மேம்பாலப் பணிகள் மிகவும் மெதுவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினால், பொது மக்கள், பணிக்குச் செல்கின்றவர்கள், வேலைவாய்ப்பிற்காக செல்கின்றவர்கள், மாணவ, மாணவிகள், கல்லூரிக்குச் செல்பவர்கள் என எல்லோரும் அங்கே நீண்ட நேரம் நின்று செல்ல வேண்டிய ஒரு நிலை இருந்து வருகிறது. எனவே, உடனடியாக அந்த இரண்டு பாலங்களையும் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

*எனது தொகுதியில் 124 பொது விநியோகக் கடைகள் இயங்கி வருகின்றன. அதில் 29 கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. 50 கடைகளில் 1,000 முதல் 1,500 வரை குடும்ப அட்டைகள் இருக்கின்றன. 24 கடைகளில் 1,500 முதல் 2,000 வரை குடும்ப அட்டைகள் இருக்கின்றன. 7 கடைகளில் 2,000 முதல் 2,500 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. 7 கடைகளில் 2,500 முதல் 3,000 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. ஆகவே, குடும்ப*

அட்டைகள் அதிகமாக இருக்கின்ற கடைகளை இரண்டாகப் பிரிக்கக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, உணவுப் பொருட்கள் வழங்கும் கடைகளில் மளிகை சாமான்களை வாங்க வேண்டுமென்று வற்புறுத்துகின்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கின்றது. மக்களுக்காக இயங்குகின்ற அரசு என்று கூறும் நீங்கள், உடனடியாக இதனைக் கவனத்தில் கொண்டு சரி செய்ய வேண்டும்.

நிதிநிலை அறிக்கை பக்கம் 40-ல் பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைக்கும் பணிக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2002 ஆம் ஆண்டு உங்கள் ஆட்சிக் காலத்தில் பக்கிங்ஹாம் கால்வாயின் இருபுறமும் குடியிருந்தவர்கள் அப்புறப்படுத்தப்பட்டு, கண்ணகி நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்டனர். ஆனால், இது நாள் வரை பக்கிங்ஹாம் கால்வாய் பகுதிகளில் எந்தச் சீரமைப்புப் பணிகளும் நடைபெறவில்லை. ஆகவே, அந்தக் கால்வாயில் படகு குழாம் அமைத்து, இருபுறங்களிலும் மதில் சுவர்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக உள்ளகரத்தில் சர்வே எண் 90-ல் சுமார் 40 ஆண்டுக்காலமாக 1,500 குடும்பங்கள் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மனைகளாகப் பிரிக்கப்பட்டு, அந்த மனைகளின் அடிப்படையில் வங்கிகளில் கடன் பெற்று வீடுகளைக் கட்டி வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு மனைப் பட்டா வழங்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

நிதிநிலை அறிக்கை பக்கம் 107-ல் "அனைத்து வாடகை ஒப்பந்தங்களும் கால நீடிப்பு செய்யப்பட்ட செப்டம்பர் 2020 ஆம் ஆண்டு 19 ஆம் தேதிக்குள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியமாகும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், "ஐந்தாண்டிற்கு உட்பட்ட குடியிருப்புக்கான வாடகை ஒப்பந்தங்களில், தற்போது நடைமுறையிலுள்ள முத்திரைத் தாள் வரியினை 1 சதவிகிதத்திலிருந்து 0.25 சதவிகிதம் வரையில் குறைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தைக் குறித்து பொது மக்களிடம் ஓர் அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்தச் சட்டத்தை இன்னும் எளிமைப்படுத்தி, மக்களிடம் விழிப்புணர்வை உருவாக்கிட வேண்டும். இச்சட்டத்தின் முக்கிய

*2020 பிப்ரவரி 18]* [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

*அம்சங்களைத் தொகுத்து, அதனை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பி, அனைவருக்கும் விளம்பரப்படுத்திட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

*தமிழக இளைஞர்களுக்கு நிதிநிலை அறிக்கை பக்கம் 78-ல், தமிழகத்தில் 2020 ஆம் ஆண்டில், (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** *இன்னும் 5 நிமிடங்களில் எனது உரையை முடித்து விடுகிறேன்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சபையை முடிக்கப் போகிறார். சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் இருக்கின்றார்கள். அவர் குறிப்பிடும் இடங்களில் அதுபோன்று இருந்தால், கண்டிப்பாக விசாரித்து, நடவடிக்கை எடுத்து, அது சரி செய்யப்படும்.*

*கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் என்பது மிகப் பெரிய திட்டமாகும். கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று வரும்போது* JICA, KfW *வங்கிகளில் கடன் பெற்று பணிகளைச் செய்யும்போது, அது ஒரு* long process. *ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம். படிப்படியாக நிறைவேற்றப்பட்டு, அந்தத் திட்டம் எப்போது செயல்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, பெரிய திட்டங்கள் வருகின்றபோது, பல சூழ்நிலைகள் ஏற்படும்.*

*பிற்பகல் 2-05*

*கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள். தொடர் நடவடிக்கைகள் எடுத்து, 150* M.L.D. *தண்ணீர் எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அடிக்கல்*

நாட்டி, வேலையை ஆரம்பித்திருக்கிறோம். 400 M.L.D. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டப் பணிகள் வேகமாகச் செயல்படுத்தப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டபோது மழைப் பொழிவே இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், நானும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அண்ணன் திரு.ஜெயக்குமார் அவர்களும் ஆந்திர மாநில முதலமைச்சரைச் சந்தித்துப் பேசியதன் காரணமாக அங்கிருந்து நீர் தற்போதுவரை தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இதுபோன்று தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சென்னையிலுள்ள ஏரிப் பகுதிகளில் மழைப் பொழிவு அதிகமாக இல்லாத காரணத்தால் ஏரிகளுக்குத் தண்ணீர் வரத்து இல்லை. ஆந்திர மாநிலத்திலிருந்து பெறப்பட்ட நீரைத்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், சென்னையில் குடிநீர்ப் பற்றாக்குறையை நிரந்தரமாகத் தீர்க்கின்ற வகையில், 400 M.L.D. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் பேரூரில் செயல்படுத்தப்படுகிறது. 150 M.L.D. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் நெம்மேலியில் செயல்படுத்தப்படுகிறது. அதற்குமுன்பு, மீஞ்சூரில் 100 M.L.D. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டமும், நெம்மேலியில் 100 M.L.D. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டன. கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் கழிவுநீர் மறுசுத்திகரிப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. எப்போதுமே 830 M.L.D. நீர் வழங்கப்படும். ஆனால், தற்போது, செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால் 870 M.L.D. நீர் வழங்கும் அளவிற்கும், சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்க்கின்ற அளவிற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அரவிந்த் ரமேஷ், உரையை முடியுங்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நிதிநிலை அறிக்கைமீது பேசவே ஆரம்பிக்கப் போகிறேன்.

2020 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அரவிந்த் ரமேஷ், உங்களுடைய உரை இத்துடன் நிறைவு பெற்றது.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட, ECR சாலையான திருவான்மியூர்-உத்தண்டி சாலை, சோழிங்கநல்லூர்-மேடவாக்கம் சாலை, கீழ்க்கட்டளை-நங்கநல்லூர் சாலை ஆகியவற்றை அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்கள் 14 மற்றும் 15-ல் உள்ள வார்டுகளிலும், புனித தோமையார்மலை ஒன்றியம் உள்ளடங்கிய 7 ஊராட்சிகளில் உள்ள நியாய விலைக் கடைகளில் அனைத்து வேலை நாட்களிலும் பொருட்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

OMR சாலையையும், ECR சாலையையும் இணைப்பதற்கு பாலவாக்கம், நீலாங்கரை, ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் பக்கிங்ஹாம் கால்வாய் குறுக்கே சிறிய அளவில் 6 பாலங்கள் உள்ளன. அவற்றை அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட உள்ளகரம், புழுதிவாக்கத்தில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ளடங்கிய மண்டலம் 14, வார்டு எண்கள் 168 மற்றும் 169-ல் உள்ளவர்கள் மின் கட்டணம் செலுத்துவதற்கு வசதியாக புழுதிவாக்கம் பேருந்து நிலையம் அருகிலுள்ள வணிக வளாகத்தில் மின் கட்டணம் செலுத்துவதற்கு அலுவலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள நீலாங்கரை, ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய காவல் நிலையங்களுக்கும், நீலாங்கரை உதவி ஆணையர் அலுவலகத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதியிலுள்ள மயானத்தில் மயான உதவியாளரைப் பணியமர்த்தி, இறந்தவர்களின் உடலை இலவசமாக

அடக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் கடலிலிருந்து 200 மீட்டர் வரை கோஸ்டல் ஏரியா என்ற விதி நீலாங்கரை வரை உள்ளது. ஆனால், ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர், உத்தண்டி வரை உள்ள பகுதிகள் சென்னை மாநகராட்சியாக விரிவாக்கப்பட்ட பகுதிகளாகும். இந்த ஊர்களுக்குக் கடலிலிருந்து 500 மீட்டருக்கு வெளியேதான் வரைபட அனுமதி வழங்கப்படும் என உள்ளது. எனவே, இந்த விதியைத் தளர்த்தி, 200 மீட்டருக்கு வெளியிலிருந்தால் அனுமதி வழங்குவதைப்போல், இந்தப் பகுதிக்கும் அனுமதி வழங்க விதியினை வரைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரும்பாக்கம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புப் பகுதியில் வணிக வளாகம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வணிக வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கண்ணகி நகர், எழில் நகர், செம்மஞ்சேரி, சுனாமி நகர், பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக் கட்டடங்களின் கழிவறைகள் மற்றும் ஜன்னல்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், அவற்றை உடனடியாகச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள கடலோரப் பகுதியான கொட்டிவாக்கம் குப்பம் முதல் உத்தண்டி நைனார் குப்பம் வரை தடுப்புச் சுவர், சாலைகள் அமைக்கவும், வலைகளை உலர வைப்பதற்கு பாதுகாப்புக் கட்டடம் கட்டித் தரவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்கள்–14 மற்றும் 15–ல் உள்ளடங்கிய சில வார்டுகளில் பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர்க் குழாய் அமைக்கும் பணிகளைத் துவங்கி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் SRP டூல்ஸ் முதல் முட்டுக்காடு வரை

2020 பிப்ரவரி 18] [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

படகு குழாம் மற்றும் போக்குவரத்துக்கான சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்கள் 14 மற்றும் 15-ல் உள்ளடங்கிய வார்டுகளில், குறிப்பாக ECR சாலை கிழக்குப் பகுதியில் உள்ளடங்கிய கடற்கரை ஒட்டிய இடங்களான கொட்டிவாக்கம் முதல் உத்தண்டி வரை மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கும் அனைத்து இடங்களிலும் மழைநீர்க் கால்வாய் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சோழிங்கநல்லூரில் அரசு பல்நோக்கு மருத்துவமனை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆங்கில வழிக் கல்வி துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்கள் 14 மற்றும் 15-ல் உள்ள வார்டுகளில் புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ளடங்கிய ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூரில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்றும், தீ விபத்து ஏற்பட்ட வீடுகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசு பள்ளிகளிலும் போதிய ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ளடங்கிய ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்] [2020 பிப்ரவரி 18

சோழிங்கநல்லூர் தொகுதி, அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி வார்டுகளிலும், புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ளடங்கிய ஊராட்சிகளிலும் நூலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதி, அனைத்துப் பள்ளிகளிலும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட, வீராங்கால் ஓடையையும், அனைத்து கால்வாய்களையும் தூர்வாரி, இருபுறமும் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் (Underground Electric Cables) புதைவட மின் கேபிள்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகர் பகுதியில் நவீன மயான வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகர் பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலைய தரைத்தளங்களை சிமென்ட் கான்கிரீட்டால் ஆன தரைத்தளங்களாக அமைக்கவும் கழிவறைகளைச் சீரமைக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட செம்மஞ்சேரி, சுனாமி நகர் பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தின் மேற்கூரை மற்றும் தரைத்தளத்தை சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், சித்தாலப்பாக்கம் ஊராட்சியில் அமைந்துள்ள

*2020 பிப்ரவரி 18]* [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

*கன்னிக்கோவில் கால்வாயில் தடுப்புச் சுவர் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி வார்டுகளிலும், புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ளடங்கிய ஊராட்சிகளிலும் சமூக நலக் கூடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மண்டலம் 15-ல் உள்ள சமுதாய நலக் கூட அலுவலகக் கட்டடத்தில் சென்னை மாநகராட்சி வருவாய்த் துறை, சுகாதாரத் துறை, மின்சாரத் துறை ஆகியவை இடம் இல்லாமல் இயங்கி வருகின்றன. எனவே, அந்த அலுவலகங்கள் இயங்க கூடுதலாகக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் குப்பைகளை அகற்றுவதற்கு கூடுதலாக ஜே.சி.பி. மற்றும் லாரிகள் வாங்கவும், கூடுதலாக ஊழியர்களை நியமித்து ஒட்டுமொத்த குப்பைகளையும் தரம் பிரிக்கவும், மறுசுழற்சி முறை செய்வதற்கான இடம் அமைத்துத் தரவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும், ஊராட்சிகளிலும் தனித்தனியாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*காரப்பாக்கம், ஜல்லடையான்பேட்டை, திருவள்ளுவர் நகர், ஒக்கியம்-துரைப்பாக்கம், மூட்டைக்காரன் சாவடி, புழுதிவாக்கம், ஈஞ்சம்பாக்கம், பெத்தேல் நகர் மற்றும் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நீண்ட நாட்களாகக் குடியிருக்கும் மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட உள்ளகரத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் இடம் கையகப்படுத்தப்பட்டு மனைப் பிரிவுகளாகப் பிரித்து பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உள்ளகரம் சர்வே எண் 90-ல் 35 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வருபவர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

[திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்] [2020 பிப்ரவரி 18

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14 வார்டு எண் 168, உள்ளகரம், வித்தியா நகர் 3-வது தெருவில் அமைந்துள்ள ஓடையில் தடுப்புச் சுவரை உயர்த்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 15, வார்டு எண் 195 கண்ணகி நகர் பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கிடையே உள்ள பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், பெரும்பாக்கம் ஊராட்சியில் உள்ளடங்கிய பகுதியில் சமுதாய நலக் கூடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், பெரும்பாக்கம் ஊராட்சியில் உள்ளடங்கிய பகுதியில் சாலை, தெருவிளக்கு, மழைநீர்க் கால்வாய், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தர ஏதுவாக, அந்தப் பகுதிகளைப் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மண்டலம் 14, வார்டு எண் 191, ஜல்லடையன்பேட்டையில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செம்மஞ்சேரி, சுனாமி நகர் பேருந்து நிலையத்திலிருந்து கோயம்பேடு மற்றும் தி.நகர் பகுதிகளுக்குக் கூடுதலாகப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் மாதாந்திர பேருந்து பயண அட்டை வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட செம்மஞ்சேரி, ராஜீவ் காந்தி நகர், பவுண்டு சாலை, செம்மஞ்சேரி தோப்பு எம்.ஜி.ஆர்.

*2020 பிப்ரவரி 18]* [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

*சாலை ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஒட்டியம்பாக்கம் ஊராட்சியில் உள்ளடங்கிய அரசங்கழனி,* DLF, *செம்மஞ்சேரி, பெரும்பாக்கம், செம்மொழிப் பூங்கா வழியாக ஒக்கியம் மடுவு வரை மழைநீர்க் கால்வாய் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு எண்கள் 197, 198, சோழிங்கநல்லூர், காரப்பாக்கம் மற்றும் வார்டு எண்கள் 184, 186, பெருங்குடி பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் துவங்கப்படாத எஞ்சிய பகுதிகளில் இத்திட்டங்களை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கொட்டிவாக்கம், பாலவாக்கம், உத்தண்டி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, ஒக்கியம்-துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், ஜல்லடையன்பேட்டை ஆகிய பகுதிகளில் நடைபெறும் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க கேட்டுக்கொள்கிறேன். மேலும் மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் ஒருசில பகுதிகளில் மட்டும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பகுதிகளில் இப்பணிகளைத் துவங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், செம்மஞ்சேரி மற்றும் நீலாங்கரை பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம் ஆகியவற்றிற்கான பணிகளைத் துவங்கி, விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட நீலாங்கரையில் அமைந்துள்ள பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-2-2020), புதன்கிழமை காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*–ஏதுமில்லை–*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*–ஏதுமில்லை–*

---